மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 31 ஞாயிற்றுக்கிழமை (14.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 200

# தமிழருக்கு சுயாட்சி அடிப்படையில் புதிய தீர்வு யோசனை தயாராகிறது

## இந்தியாவின் ஆதரவை நாடியிருப்பதாக கூட்டமைப்புத் தகவல்

புதுடில்லி, ஜூன் 14

ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு யோசனை ஒன்றைத் தயாரிக்கும் பணிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது.

தமிழர் தாயகம், தமிழருக்கு சுயாட்சி, அவர்களுக்குரிய சுய நிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அந்தத் தீர்வு யோசனை அமையும். இன்னும் இரண்டு மாதங்களில் அந்தத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க உள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய தீர்வு யோசனை குறித்து இந்திய அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வெளி விவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் ஆராய்ந்துள்ளோம்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானியைச் சந்தித்து இது விடயத்தில் இந்திய அரசுக்கு ஆதரவளிக்கக் கோரினோம். அவர் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

இந்திய எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானியை இங்குள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் வெள்ளிக்கிழமை மாலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவினர் சந்தித்துப்பேசினர்.

அதன் போது இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று கொழும்பு திரும்புகின்றனர்

கொழும்பு, ஜூன் 14

சமகால அரசியல் நிலைமை தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று கொழும்பு திரும்புகிறது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் சென்ற குழுவினர், (20 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான 2 பக்கங்கள் கொண்ட மாதிரிவினாத்தாள்கள்

## வன்னி மாவட்டத்துக்கு 3 பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள்

கொழும்பு, ஜூன் 14

வன்னி மாவட்டத்தில் கிழக்கு, மேற்கு என இரண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு பொறுப்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக மூவர் உடனடியாக பதவியேற்கும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்டுள்ள வன்னிப் பிரதேசங்களில் ஆகக் குறைந்தது 10 வருடங்களுக்கு கடும் பாதுகாப்பு

### முப்படைகளுக்கும் 50 ஆயிரம் பேர் சேர்க்கப்படுவர்

கொழும்பு, ஜூன் 14

விடுவிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் ஆகக் குறைந்தது அடுத்த 10 வருடகாலதுக்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டியுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலியரம்புக்வெல மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



அன்மையில் விடுவிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா பிரதேசங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக படையினரின் பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றிய பின்பே ஏ-9 பாதை மக்கள் போக்குவரத்துக்குத் திறப்பு

### காலவரையறையைக் கூறமுடியாது என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 14

ஏ-9 பாதையில் வவுனியாவில் இருந்து முகமாலை வரையான வீதியில் இருமருங்கிலும் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை முழுமையாக அகற்றிய பின்னரே அதனை மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கமுடியும். அதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்று கூறமுடியாது.

நெடுஞ்சாலை மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் விவரித்ததாவது:- (20 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகரசபைக்கான தேர்தலில் பல முனைப் போட்டி; கட்சிகள் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., புளொட், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி உட்பட பல கட்சிகள் தயாராகியுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 25 திகதி வரை வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான அதிகாரமளிக்கப்பட்ட (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வாகனப் போக்குவரத்து அணி வியாழனன்று வைபவரீதியாக ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 14

ஏ-9 பாதை ஊடான வாகனப் போக்குவரத்து எதிர்வரும் 18 ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பமாகவுள்ளது.

கண்டிய நடன நிகழ்ச்சிகளுடன் வவுனியாவில் இடம்பெறவுள்ள வைபவத்தில் ஏ-9 பாதையூடான போக்குவரத்து ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக நேற்றிரவு 'உதயனு'க்கு தெரியவந்தது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை படையினர் வழித்துணையுடன் இந்த வாகனப் போக்குவரத்து (20 ஆம் பக்கம் பார்க்க)

## குருதிக் கொடை தினம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 14

தேசிய குருதிக்கொடை தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இத்தினத்தை ஒட்டி யாழ். ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் இரத்தக் கொடை வழங்க ஏற்பாடு (20 ஆம் பக்கம் பார்க்க)



டயலொக் CDMA இப்போது யாழ்ப்பாணத்தில்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு ரூ. 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- ரீலோட் செய்யும் வசதி

Fixed Line 011 7 100 100

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி பொன்னுத்துரை இராசம்மா

மண்ணில் 14.03.1931 — விண்ணில் 15.05.2009



தாயாக வாழ்ந்திருந்தாய்
மகிழ்வோடு நாமிருந்தோம்
தீயோடு சேர்ந்தாய்
எரிகிறதே எம் நெஞ்சம்
அம்மா என்றழைக்க
நீயில்லையே!
வாயோடு புலம்புகின்றோம்
வருவாயோ மறுபிறப்பெடுத்து.

*109/2, சிவன்புது வீதி, நல்லூர்.*

*உன் நினைவுடன்:* ஜெ.ரஞ்சினி குடும்பம்.

## மரண அறிவித்தல்

### செல்வி ரத்தினபூசணி பரஞ்சோதி



திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ரத்தினபூசணி பரஞ்சோதி (ரஞ்சிதம்) 12.06.2009 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதிமுதலியார் - கனகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் திருமதி நாகபூசணி ஜேசுதாசன் (அக்கடமி ரீச்சர்), ஜீவரட்ணம் (ஆங்கிலப் போதனாசிரியர்), காலஞ்சென்றவர்களான தர்மரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜேசுதாஸன், ஜெயரூபராணி மற்றும் செல்வமணி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் சுதர்ஷனா (நீர்ப்பாசனத் திணைக்களம்), நிமல்ராஜ் (பல் மருத்துவ மாணவன்), திருமதி ஜெய்தர்ஷனா சந்திரசேகரன் (கனடா) ஆகியோரின் சிறியதாயாரும் திருமதி சாயிலதா சூரியகுமார் (லண்டன்), சஜீவ்ராம் (இ.போ.ச. வடக்கு), திருமதி கிருத்திகா சதீஸ் (கனடா), மதுரன் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: ஜீவரட்ணம் (சகோதரன்)

## மரண அறிவித்தல்

### கந்தையா இரத்தினம்

(இரத்தினம் கடை, ஓட்டுமடச் சந்தி)



ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் கடந்த (10.06.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியினரின் புதல்வனும் பத்மாவதியின் கணவரும் றமேஸ், கௌசல்யா, றாகவன், றஞ்சித்குமார் (லண்டன்), றகுநாதன், றாஜேஸ்வரன் (ஹொலன்ட்) ஆகியோரின் தந்தையாரும் யோசப், தர்சினி, ராகினி ஆகியோரின் மாமனாரும் சரண்யா, லதீசன், டர்சிகா, சனூயன், அனோஜன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான முருகன், சிவஞானம், கோணாமலை மற்றும் பாக்கியம், ராசம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.234/10, சென்.செபஸ்ரியான் லேன், ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.*

தகவல்: குடும்பத்தினர்.


## ஐங்கரன் திருமணசேவை

U.K. பிரஜாவுரிமை 37, 35, 33, 29, கனடா பிரஜாவுரிமை 40, 36, பிரான்ஸ் பிரஜாவு ரிமை 38, 27, ஹொலன்ட் பிரஜாவுரிமை 37, 31, சுவிஸ் 42, அமெரிக்கா 37 வயதுடைய மணமகன்மார் உள்ளனர்.

தொடர்பு: 00447535384166
00447508295863
Fax: 00442086810701
00442086720673

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தின்மும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில்

## உடனடித் தேவை

சாதாரண ஆண் தொழிலாளி உடன் தேவை. வயது எல்லை வரையறுக் கப்படவில்லை. நேரில் வரவும்.
350, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

## திருமண சேவை

மணமக்களே! www.thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக் கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15.

## மணமகள்கள் தேவை

மணப் பெண் தேவை

Jaffna Hindu கௌரவ குலம், 32 வயது, மூல நட்சத்திரம், B.Sc.-IT(UK) Network Engineer, UK-PR மாப்பிள்ளைக்கு பெண் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்றுக்கிரகபாவம் 24.
இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 6224.
போன் - 2523127, 2520619

யாழ்.இந்து கௌரவகுலம், 29 வயது, சதயநட்சத்திரம், Computer Engineer, Vegetarian, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண்தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. மூன்று சுற்றுக்கிரகபாவம் 21.
இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 5756.
போன் -2523127, 2520619

Jaffna Hindu கௌரவகுலம், 33 வயது, கேட்டை நட்சத்திரம், Batchelor of IT, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண்தேவை. செவ்வாய் 7 இல் உள்ளது. மூன்று சுற்றுக்கிரக பாவம் 65.
இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 6061.
போன் -2523127, 2520619


### சாவகச்சேரியில் சுகாதாரப் பகுதியினர் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 14

சாவகச்சேரி சுகாதாரப்பகுதியினர் சாவகச்சேரி நகர், சங்கத்தானை ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில்கடந்த வியாழக்கிழமை திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான பொருள்களைக் கைப்பற்றினர்.

கடலை மா, உளுந்து மா, ஐசிங் சுகர், பிஸ்கட் வகைகள், பழுதடைந்த கச்சான், அப்பளம், இலங்கையில் தடை செய்யப்பட்ட பாக்கு உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

இப் பொருள்களை வைத்திருந்த வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமணி சண்முகம்பிள்ளை



சங்கானையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி தவமணி சண்முகம்பிள்ளை 12.06.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சீனியப்பா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சண்முகம்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் விக்கினேஸ்வரன், விஜயலட்சுமி, சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பூபதிராஜ், உமாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் தஸ்சுவி, சோனியா, சூட்டி, பகவன், ஸ்ரீகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.06.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.*

தகவல்: சீ.சண்முகம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்).

### சரவணமுத்து புஷ்பராசா



பெரியதம்பிரான் வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து புஸ்பராசா நேற்று (13.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இராசமலர் தம்பதிகளின் புத்திரரும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் நிர்மலா, நிஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் யோகேஸ்வரி, சதாசிவம், அமரர் சந்திரன், செல்வராணி, செல்வராசா, நீதிராசா(இத்தாலி), புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் இராசையா (சேனாதி) மற்றும் அழகம்மா தம்பதியினரின் மருமகனும் இராசாத்தி, சறோஜினி, விமலா, வசந்தா, சாந்தினி, ஜெயந்தினி, கணேசரத்தினம் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளான் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி, சித்தன்கேணி.

தகவல்: குடும்பத்தினர், இந்திரன்ஐயா.

### கிருஸ்ணபிள்ளை ஜெயராசா (வவா)



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை ஜெயராசா (வவா) நேற்று (13.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளை- காலஞ்சென்ற சொர்ணம்மா தம்பதிகளின் புதல்வனும் தனலட்சுமி (நல்லூர் செட்டித் தெரு), வரதராசா (ராசன்- கரன் மில், அராலி), ராஜலட்சுமி (U.K), சிவானந்தன் (U.K), மகாலட்சுமி (நெல்லியடி மகா வித்தியாலயம் நலன்புரி முகாம்), சதானந்தன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆனந்தன் (நல்லூர்), சோதிமலர் (அராலி), சயந்தன்(U.K), ராதா(U.K), பரமசிவம் (இந்து- நெல்லியடி மகா வித்தியாலயம் நலன்புரி முகாம்), கிருபாதேவி(U.K) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மஜீதன், யசிந்தன், லக்சிகா, நிக்சன், நிதுசன், சாரங்கன், விஸ்ணுகாந் ஆகியோரின் அன்பு மாமாவும் ரஜீந்தன், தர்மினி, கலிகரன், லோஜிதா, அனிஸ் (U.K), கவிஸ்(U.K), ஸ்வினி(U.K), நிவேதன்(U.K), நந்தனா(U.K) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2009) பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூனாஒடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி, அராலி.*

தகவல்: வரதராஜன் (கரன் மில்) சகோதரன்.

### சீனியர் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற படவரைஞர் ? தனியாளர் DOA, நீர்ப்பாசனத் திணைக்களம்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நாகம்மாள் கோயில் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் சண்முகநாதன் நேற்று முன்தினம் (12.06.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் மற்றும் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - செல்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் குணேஸ்வரியின் அன்புக் கணவரும் அகிலசொரூபி (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், மட்டக்களப்பு), குமரசொரூபன் (விரிவுரையாளர், திறந்த பல் கலைக்கழகம், மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜிதரனின் (உபதபாலதிபர், மட்டக்களப்பு) அன்பு மாமனாரும் சர்வஜன், கம்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் பத்மநாதன், ஜெகசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரி, காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் திருச்செல்வம், தவராசா, ஜெயராசா, இராஜகோபால், உருக்குமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் வீதி, உடுவில், சுன்னாகம்.* T.P. 0778203735

தகவல்: ஜெயரட்ணம் (சகலன்).


## கூரியர் சேவை

இலங்கையின் சகல இடங்கள் மற்றும் உலகின் சகல நாடுகளுக்குமான கடிதங்கள், பொதிகள், CD மற்றும் ஆவணங்கள் போன்றன

✶ விரைவாக ✶ பாதுகாப்பாக ✶ குறைந்த கட்டணத்தில்

குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

ARRUL GLOBAL EXPRESS இல். 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 2226113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலவு காத்த கிளிகளாக ஏ-9 ஐ நம்பி ஏமாந்த யாழ்.மக்களும், வர்த்தகர்களும்

**இலவு** காத்த கிளியின் கதை எல்லோருக்குமே தெரிந்திருக்கும். இலவம் பழத்தை தான் உண்ணத்தக்க உண்மையான பழம் என நம்பிக் காத்திருந்து கடைசியில் தான் பழம் என நினைத்தது வெறும் பஞ்சுதான் என்பதைக்கண்டு ஏமாந்த கிளியின் நிலையில் யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் இப்போது இருக்கிறார்கள். எல்லாமே ஏ-9 பாதையால் வந்த ஏமாற்றம்தான். ஏ-9 வீதி படையினரின் பூரண கட்டுப்பாட்டில் வந்தபின்னர் அது புனரமைப்புச் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு திறக்கப்பட்டதாக அறிவித்து நீண்ட நாள்களாகிவிட்டன. ஆயினும் இதுவரை ஏ-9 வீதியுடனான போக்குவரத்துச் சேவை இன்னமும் அத்தியாவசிய சேவை நாயகத்தின் அலுவலகத்தின் ஏற்பாட்டில் எப்போதாவது ஒருதடவை பத்து பன்னிரண்டு லொறிகளில் பொருள்கள் வருவதோடு அந்த வீதியினூடான போக்குவரத்து மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்தது. ஏ-9 வீதி படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்தும், வீதியில் ஏற்பட்டிருந்த சேதங்கள் செப்பனிடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும், பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து விட்டதாக ஜனாதிபதி அறிவித்து ஒருமாதம் பூர்த்தியாகவுள்ள நிலையில் இன்னமும் யாழ்.குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையை பொதுமக்களின் போக்குவரத்துக்காகவும், ஏனைய

இந்நிலையில் கடந்தவாரம் தனியார் வர்த்தகர்களுக்குச் சொந்தமான பொருள்களை ஏற்றிய 157 லொறிகள் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும் என ஆர்ப்பாட்டமாக அறிவிக்கப்பட்டது. குடாநாட்டுச் சந்தைகளில் அதிக கேள்வியுள்ள உருளைக்கிழங்கு, அப்பிள், அன்னாசி, பட்டர், சொக்லேற் வகைகள் உள்ளிட்ட -இலகுவில் பழுதடையக்கூடிய- பெருமளவு பொருள்களை அரசின் வார்த்தைகளை நம்பி வர்த்தகர்கள் லொறிகளில் ஏற்றி அனுப்பி வைத்தனர். அனுராதபுரம் வரை எவ்வித சிக்கலும் இல்லாமல்தான் லொறிகள் பயணித்தன. அதன்பின்னர் தான் பொருள்களை ஏற்றிவந்த லொறிகளுக்குக் கெடுகாலம் ஆரம்பமானது.

பாதுகாப்புச் சோதனைகள் பலமாக நடத்தப்பட்ட பின்னர் விரைவில் பழுதடையக்கூடிய பொருள்கள் 80 லொறிகளில் ஏற்றப்பட்டு பயணத்துக்கு தயாராக

**- ஓளண்யன் -**

நின்றன. ஆனால் என்ன நடந்ததோ தெரியவில்லை. திடீரென ஏ-9 வீதியூடான பயணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் 18 ஆம் திகதிக்குப் பின்னரே லொறிகள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் வர்த்தகர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்தனர். இதனால் பெருமளவு பணத்தை முதலீடு செய்து பொருள்களை அனுப்பியிருந்த வர்த்தகர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஏனெனில் அப்பிள், அன்னாசி, உருளைக்கிழங்கு போன்றன ஒருசில நாள்கள் அடைத்து வைத்தாலே அழுகிப் போய் விடக்கூடியவை. ஆனால் அவற்றினை ஏறக்குறைய பத்து நாள்களின் பின்னரே அனுமதிக்க முடியும் என்று படைத்தரப்பு கூறிவிட்டதால் குறித்த பொருள்கள் அழுகி நாசமாகி நஷ்டம் ஏற்படுவது சர்வநிச்சயமாகிவிட்டது. இதனால் பல மில்லியன் ரூபாய் இழப்பினை வர்த்தகர்கள் சந்திக்க வேண்டிய நிலையும் எழுந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க 157 லொறிகளில் பொருள்கள் வந்திறங்கினால் தாம் ஏற்கனவே கொள்வனவு செய்து வைத்திருந்த பொருள்களை அடிமாட்டு விலைக்கே

## நிச்சயமற்றிருக்கும் ஏ-9 வீதியூடான போக்குவரத்தை பொதுமக்கள் எவ்வளவு காலம்தான் நம்பி ஏமாறமுடியும்?

விற்கவேண்டியிருக்கும் என்று கணக்குப் போட்ட சில வியாபாரிகள், அவசர அவசரமாக அதிரடி விலைக்குறைப்பு ஒன்றை மேற்கொண்டனர். 180 ரூபாய் வரை விற்கப்பட்ட உருளைக்கிழங்கு 90 ரூபாவாகவும் 200 ரூபாயாக விற்கப்பட்ட அன்னாசிப்பழம் 120 ரூபாவாகவும், சடுதியாக விலைக்குறைப்புச் செய்யப்பட்டு கூவிக்கூவி விற்கப்பட்டன. இதேபோன்று உடுபுடைவைகள் உட்பட ஏனைய பல பொருள்களும் குறிப்பிட்டளவு விலைகுறைந்து காணப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர். அத்தோடு தென்னிலங்கையிலிருந்து 157 லொறிகளில் வரவுள்ள பொருள்களை என்ன விலைக்கு விற்பது? எத்தனை சதவீத இலாபத்தைப் பெறுவது? போன்ற முற்கூட்டிய திட்டமிடல்களிலும் வர்த்தகர்கள் ஈடுபட்டனர். அதிகளவான லொறிகளில் பொருள்கள் வருவதால் பொருள்களின் விலை இன்னும் குறைவடைந்து தமது பொருளாதார சுமையும் குறையும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். இதுதவிர அப்பிள், அன்னாசி, தென்னிலங்கை முருங்கைக்காய், மாசிக்கருவாடு போன்றவற்றை ஆசைதீர மலிவான விலைக்கு வாங்கி உண்ணலாம் எனவும் மக்கள் கனவில் மிதந்தனர். ஆயினும் இவையெல்லாமே அனுராதபுரத்தில் லொறிகளுக்கான பயண அனுமதி மறுப்போடு கானல்நீராகிப் போயின.

தென்னிலங்கையில் இருந்து பொருள்களைக் கொண்டுவரும் 157 லொறிகளிலும் யாழ்ப்பாணத்து உற்பத்திப் பொருள்களை ஏற்றி அனுப்பவும் திட்டமிடப்பட்டிருந்தது. வெங்காயம், மரக்கறி வகைகள், வாழைக்குலைகள், கருவாடு, பனம்பொருள்கள் என்பனவெல்லாம் பெருமளவில் வர்த்தகர்களால் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பத் தயார் நிலையில் இருந்தன. இப்போது அதற்கும் லொறிகளின் வருகையின் தாமதம் ஆப்பு வைத்துவிட்டது.

ஏ-9 வீதி 2006 ஆம் ஆண்டு மூடப்பட்ட பின்னர் இதுவரை காலமும் யாழ். குடாநாட்டுக்கான பொருள் விநியோகம் கடல்மார்க்கமாகவே இடம்பெற்று வந்தது. இதற்கான முழு அதிகாரத்தையும் பொறுப்பையும் துறைமுக அதிகார சபையே கொண்டிருந்தது. துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த பல முக்கிய புள்ளிகள் யாழ்ப்பாணத்துக்கான பொருள் விநியோகத்தின்போது கொழுத்த இலாபத்தைச் சம்பாதித்ததாகவும் தற்போது ஏ-9 வீதியூடாக பொருள்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றால் தமது மேலதிக வருமானம் தடைப்பட்டு விடுமோ என்ற அச்சத்தால் திட்டமிட்ட ரீதியில் ஏ-9 வீதியூடான பொருள்களைக் கொண்டு செல்லலை குழப்ப முயன்றிருக்கக்கூடும் என்ற குற்றச்சாட்டுகளுக்கும் குறைவில்லை.

[8 ஆம் பக்கம் பார்க்க....]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அல்லாரையில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

அல்லாரையில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர்.

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் வீதியால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை அல்லாரையில் இடம்பெற்றது.

இந்த விபத்தில் அல்லாரையைச் சேர்ந்த ஜே.கஜேந்திரன் (வயது 20), இவரது சகோதரியான ஜே.தினேஜினி (வயது 18) ஆகியோரே காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (4- 207)

## கல்வியியற் கல்லூரியில் ஓவியக் கண்காட்சி

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சித்திரக் கலைத்துறையினரால் 'பேசும் தூரிகை' ஓவியக் கண்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கோப்பாயில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், ஓய்வுபெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



**செல்வி சிவாநந்தன் தனேஷா**

பிறப்பு 01✱12✱1989

இறப்பு 01✱05✱2009

கடந்த 01.05.2009 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது செல்வியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை தெற்கு,
கொய்யாத்தோட்டம், இருபாலை. (65727) குடும்பத்தினர்.

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
இல.19, முருகேசர் லேன், நல்லூர். (860981)

### விற்பனைக்கு

கறுப்பு, வெள்ளை, பிறவுண் ஆண், பெண், பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: றோசாத்தோட்டம்,
தலங்காவற்பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி. (86156)

### திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

### வீடு தேவை

மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை. நகர்ப் பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 844 5065 (86183)

### ஒத்துமாறல்

மேல்மாகாணத்தில் கணித பாடம் கற்பிக்கும் B.Sc. பட்டதாரி ஆசிரியர் வடமாகாணத்திற்கு இடம்மாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு:
077 3593098 (C/558954)

### தொடர்பு கொள்ளவும்

முன்னர் றிச்சாட் விநியோகத்தராகப் பணியாற்றிய திரு.தேவராஜா (யாழ்ப்பாணம்) அவர்களை தயவுசெய்து பின்வருபவர்களுடன் கூடிய விரைவில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

0773-540001 சந்தைப்படுத்தும் முகாமையாளர் (திருமதி.அஷோக்கா)

0773-597721 M2 விற்பனை முகாமையாளர் (திரு.சமரப் பெரும)

றிச்சாட் பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள்கள்

Richard Trading Co (Pvt) Ltd.
No.64, Perakumba Street,
Kurunegala.

Tel: 037-2222547, 2233298, 2233299
Hotine 0773-540005
Fax: 037 4690701
e - Mail: richard123@sltnet.lk

### Richard

**விற்பனைப் பிரதிநிதிகள், பிரதேச மேற்பார்வையாளர்கள் வடக்கு, கிழக்கில் பணியாற்றுவதற்கு**

றிச்சாட் - அப்பியாசப் புத்தகங்களுக்கு இலங்கையில் பெயர் போனவர்கள். வடக்கு, கிழக்கில் விற்பனைப் பணியாளர் அணியில் சேர்ந்துகொள்ள றிச்சாட் நிறுவனம் உங்களை அழைக்கின்றது.

கீழ்க்குறிப்பிட்டவர்களுக்கு 14 நாள்களுக்குள் கிடைக்கும் வகையில் உங்கள் சுயவிவரத்தை மின் அஞ்சல் அல்லது தபால் செய்யுங்கள்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் அல்லது சிங்களத்தில் உரையாடும் திறமை முக்கியம்.

The Marketing Manager,
Dealer Distribution Dept,
Richard Trading Co (Pvt) Ltd,
64, Perakumba Street,
Kurunegala.

Tel: 037- 2222547
2233298, 2233299
Hotine 0773 - 540005
Fax: 037 4690701
e-Mail: richard123@sltnet.lk

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.**

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### Printing Machines for Sale

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- Heidel Berg Kord Gray - (18" x 25¼")
- Heidel Berg Kora Black - (18"x 22½") Long Box

முழுமையாகப் புதுப்பிக்கப்பட்ட மேற் கூறப்பட்டுள்ள மெஷின்கள் ஆறு (06) மாத உத்தரவாதத்துடன் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777-519766, 2943250 (A/558973)

## றிச்சாட் Quality Stationary. Richard Quality Stationary.

## அப்பியாசப் புத்தகங்கள், தரமான எழுதுபொருள்கள்




## சிறந்த தரம் - குறைந்த விலை

**உலகப் பிரசித்தி பெற்ற றிச்சாட் & டிஸ்னி அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள்கள் - 1000க்கும் மேற்பட்ட பொருள்கள்**


றிச்சாட் - டிஸ்னி அப்பியாசப் புத்தகங்கள்,
சி.ஆர்., வரைதல் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள்,
களக் குறிப்பு / குறுக்கெழுத்து, அச்சடிக்கும் கடதாசி,
புகைப்படப்பிரதி எடுக்கும் கடதாசிகள், ரூல்கள், பேனைகள்,
அழிறப்பர்கள், பென்சில்கள், பிரதாங்கள்,
பென்சில் பெட்டிகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட பொருள்கள்.

**றிச்சாட் ரேடிங் கோ (தனியார்) லிமிட்**
இல. 64, பெரக்கும்பா வீதி, குருநாகல்.
தொ.பே.இல.: 037 - 2222547, 037 - 2233298-9
ஹொட்லைன்: 0773 - 540005
ஈ-மெயில்: richard123@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கலைத்திறன்சார் ஆற்றல்களை வெளிக்கொணரும் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் தொடரும் குளறுபடிகள்!!

அரங்கிலே மாணவர்கள் தம்து திறமையை வெளிப்படுத்தும் வகையில் கலை வடிவம் ஒன்றை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வெளிப்பாட்டு முறைமைகளைக் கூர்ந்து கவனித்து புள்ளியிடலை நடுவர்கள் செய்து முடிக்கிறார்கள். எல்லாப் பாடசாலைகளினதும் போட்டியாளர்கள் நிகழ்ச்சிகளை நிறைவு செய்துவிட்டு போட்டியின் முடிவுக்காகக் காத்திருக்கிறார்கள். போட்டியிட்ட ஒவ்வொருவரும் முதலிடம் தமக்குத்தான் என்ற நம்பிக்கையோடு போட்டி முடிவுகள் ஒட்டப்படும் விளம்பரப்பலகையின் அருகே கூடுகின்றனர். முடிவுகளைத் தாங்கிய தாளினை விளம்பரப்பலகையில் போட்டியை நடத்துபவர்கள் ஒட்டி முடிக்க முன்னரே முடிவுகளை அறிய எல்லோரும் நீயா, நானா என்று முண்டியடிக்கிறார்கள். முதலிடம் பெற்றவர்கள் முகம் பிரகாசமாக வெற்றிக் கூச்சலிட்டபடி ஆடத்தொடங்குகிறார்கள். ஏனையவர்கள் கவலை தோய்ந்த முகங்களோடு போட்டியின் நடுவர்கள் குறித்த தமது அதிருப்தியை வெளியிடத் தொடங்குகிறார்கள். ஒரு கட்டத்தில் நடுவர்களின் செயற்பாடு குறித்தும், வெற்றி பெற்ற அணி பற்றிய புகார்களையும் எழுத்து வடிவில் உரிய அதிகாரிகளிடம் உடனேயே கொண்டு சென்று ஒப்படைக்கின்றனர். ஆயினும்





நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்று அதிகாரிகள் திட்டவட்டமாகச் சொல்கின்றனர். எதுவுமே செய்ய முடியாதவர்களாய் தோல்வியுற்றவர்கள் எல்லோரும் திரும்புகிறார்கள்.

இது இப்போது யாழ்ப்பாணத்தில் பரவலாக நடந்து கொண்டிருக்கும் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வழமையாக நடைபெறும் ஒரு நிகழ்வுதான். அநேக போட்டிகளில் மேற்குறித்த வகையிலேயே சம்பவங்கள் நடைபெறுவது மிகநீண்ட காலமாகத் தொடர்ந்தே வருகிறது. இதுகுறித்து பத்திரிகைகளிலும், பல்வேறு தடவைகள் செய்திகளும், கடிதங்களும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆயினும் போட்டிகளின்போது குளறுபடிகள் நடப்பதான புலம்பல்களும், இல்லையில்லை போட்டிகள் யாவும் சீரான வகையிலேயே நடைபெறுவதாக கல்வி அதிகாரிகள் கூறுவதும் இன்றளவும் தொடர் கதையாகவே உள்ளது.

தமிழ்மொழித்தினப் போட்டிகள் என்பது வெறுமனே மாணவர்களின் மேலதிக திறன்வெளிப்பாட்டை மட்டுமே முன்னிறுத்தும் நிகழ்வாக அல்லாமல் ஏறக்குறைய ஒவ்வொரு பாடசாலையினதும் கௌரவத்தினை நிலைநாட்டும் வகையில் உருமாற்றம் பெற்றுள்ளது. சமர்க்களத்துக்குச் செல்வதுபோலவே தமிழ்மொழித்தினப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் தயார்செய்யப்படுவார்கள். இவற்றில் மாணவர்களுக்கு விசேட விட்டுக் கொடுப்புகளும் பாடசாலை நிர்வாகத்தால் செய்யப்படும். கிட்டத்தட்ட இரண்டு, மூன்று வாரங்கள் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பங்கேற்காது போட்டி நிகழ்ச்சிக்கான பயிற்சிகள், ஒத்திகைகள் என்பவற்றில் ஈடுபடுவர். இதற்கான முழு ஒத்துழைப்பையும் பாடசாலை வழங்கும். சில நிகழ்வுகளுக்காக அத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் வெளியில் இருந்தும் வந்து மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பார்கள். சில பாடசாலைகள் அவ்வாறு பயிற்சி கொடுப்பவர்களை பெருந்தொகைப் பணம் கொடுத்தும் அமர்த்துவதுண்டு. இதுதவிர ஒப்பனை, உடை, வாத்தியக்கருவிகள், போக்குவரத்து, உணவு ஏற்பாடு போன்ற இன்னோரன்ன செலவுகளைப் பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொள்ளும். ஒருசில பொருளாதார ரீதியில் பின்தங்கிய பாடசாலைகள் மட்டும் இவ்வாறான செலவுகளில் சிலவற்றை (ஒப்பனை, உடை, உணவு) மாணவர்களிடமே விட்டுவிடும். இத்தகைய ஏற்பாடுகளைவிட தமக்குப் போட்டியாக வரக்கூடிய பாடசாலைகளில் குறித்த போட்டி தொடர்பான வேலைத் திட்டங்கள் எந்தளவு தூரத்துக்கு முன்னெடுக்கப்படுகின்றன என்பதை உளவறியும் வேலைகளிலும் பாடசாலைகள் ஈடுபடத் தவறுவதில்லை. பின்னர் அத்தகைய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தமது பாடசாலை நிகழ்ச்சிகளை போட்டிப் பாடசாலை நிகழ்ச்சிகளை விடவும் மெருகூட்டும் வேலைகளை பொறுப்பாசிரியர்கள் மேற்கொள்வர். இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஒரு போர்க் களத்துக்குச் செல்வது போன்ற ரீதியிலே திட்டமிட்ட வகையில் நடைபெறும்.

தமிழ்மொழித்தினப் போட்டிகள் முக்கியத்துவம் பெறுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. பல் கலைக்கழக அனுமதியை ஒருசில புள்ளிகளால் மாணவர் ஒருவர் தவறவிடுவாராயின் அவர் தமிழ் மொழித்திறன் போன்ற போட்டிகளில் பங்கேற்று தேசியரீதியில் வெற்றி பெற்றிருந்தால் அவருக்கு பல்கலைக்கழக அனுமதிக்காக மேலதிகமாக சில புள்ளிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே தமது பல்கலைக்கழக அனுமதியை ஒருசில புள்ளிகளால் தவறவிட்டால்கூட தொடர்ந்தும் பல்கலைக்கழகத்திலே தாம் அனுமதி பெறுவதை உறுதி செய்வதற்காக ஒருவித வெறியோடுதான் மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்கேற்பார்கள். அத்தோடு விளையாட்டுப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள் என்பவற்றில் தேசியரீதியில் சிங்கள மொழிமூலத்தைக் கொண்டுள்ள மாணவர்களும் பங்கு பற்றுவதால் தமிழ் மாணவர்கள் பலத்த போட்டியைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர்கள் மாத்திரமே பங்கேற்பதால் ஏனைய போட்டிகளைவிட இதில் தேசியரீதியில் சவால்கள் குறைவாகவே காணப்படுகின்றன. (சிங்கள மாணவர்களுக்கென தனியான போட்டிகள் தமிழ் மொழித் தினத்தில் நடத்தப்படுவதுண்டு) எனவே மாகாணமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றால் வெகு எளிதாக தேசிய ரீதியிலும் சாதித்துவிடலாம் என்ற மனோநிலை யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் உண்டு. எனவே பதக்கங்கள் வெல்லும் கனவுகளோடுதான் மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டியில் பங்கேற்கிறார்கள்.

தமிழ்த்தினப் போட்டிகளில் போட்டி பற்றிய நிபந்தனைகளும், போட்டிகளுக்கான கருப்பொருள்களும் வருடந்தோறும் மாற்றங்களுக்குள்ளாகி வருகின்றன. எனவே மாணவர்களின் திறமையை மதிப்பிட வரும் நடுவர்கள் தாம் மதிப்பீடு செய்யவிருக்கும் குறித்த போட்டி தொடர்பான விதிமுறைகளையும், கருப்பொருளையும் மிகச்சரியான முறையில் அறிந்தவர்களாக இருக்க வேண்டும். அத்தோடு போட்டி நடைபெற இருக்கும் துறையில் நிபுணத்துவம் பெற்றவராகவும், போட்டியில் பங்கேற்கும் எவருக்கும் பக்கச்சார்பாக நடந்து கொள்ளாதவர்களாகவும் நடுவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் உண்மையில் அப்படி நடப்பதில்லை என்று பல்வேறு பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களும், மாணவர்களும் ஆதங்கப்படுகிறார்கள். எப்படியாவது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் போட்டிகளை நடத்தி முடித்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் குறித்த வலயத்தையோ அல்லது கோட்டத்தையோ சேராத ஆசிரியர்களையே நடுவர்களாக நியமிக்கின்ற போக்கே காணப்படுகின்றது. சில இடங்களில் பல்கலைக்கழக மாணவர்களும் நடுவர்களாக வருவதுண்டு. ஆயினும் இவ்வாறு நியமிக்கப்படும் ஆசிரியர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் குறித்த துறை தொடர்பான ஆரம்ப அறிவைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அதுபற்றிய மதிப்பீடு செய்யும் அளவுக்கு தகுதியானவர்களா என்பதைப் போட்டியின் ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை. ஏனெனில் எல்லா ஆசிரியர்களும் எல்லாத்துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருப்பதில்லை. அத்தோடு பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் பயில்கின்ற மாணவன் ஒருவன் தான் மதிப்பீடு செய்ய முனையும் துறை தொடர்பான பூரண அனுபவத்தையும் பெற்றிருக்கப் போவதில்லை. ஆனால் அவர்களுக்கு அத்துறை பற்றிய ஓரளவு பரிச்சயம் இருக்கின்றது என்பதை மட்டுமே நடுவர்களுக்கான தகுதியாகக் கணித்து, அவர்களையே போட்டி நடுவர்களாகவும் நியமித்து விடுகின்றனர். அத்தோடு போட்டிக்கான நிபந்தனைகள் பற்றியும் நடுவர்களுக்கு உரிய முறையில் தெரியப்படுத்தப்படுவதில்லை. அவர்களும் தெரிந்து கொள்ள முயற்சிப்பதும் இல்லை என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப் படுகின்றது.

இத்தகைய தன்மைகளால் நடுவர்கள் சரியான வகையில் மதிப்பிட்டு தீர்ப்பை வழங்கினாலும்கூட அது தவறான கண்ணோட்டத்தோடே நோக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. அநேகமான போட்டி முடிவுகளின் பின்னர் முதலிடத்தை வென்ற அணிகள் போட்டி நிபந்தனைகள் சிலவற்றை மீறியிருப்பது ஏனைய பாடசாலைகளால் கண்டு பிடிக்கப்படுவதுண்டு. ஆனால் போட்டியின் நிபந்தனைகளை மிகச்சரியான வகையில் உள்வாங்கிய பின்னரே நடுவர்கள் செயற்படுவார்களாயின் இத்தகைய போட்டி முடிவுகளுக்குப் பின்னான புறங்கூறல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் போட்டி முடிவுகள் பற்றிய ஆட்சேபனையை யாராவது தெரிவித்தால், "ஆட்சேபனைகளை எழுத்துமூலமாகத் தாருங்கள். உரிய முடிவை எடுக்கிறோம்" என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறுவார்கள். அதை ஏற்று எழுத்து வடிவில் தமது ஆட்சேபனையையும் அதற்கான ஆதாரங்களையும் சமர்ப்பித்தாலும்கூட, போட்டி ஏற்பாட்டாளர்கள் தாம் வெளியிட்ட முடிவுகளை மாற்றி அமைத்ததாக இதுவரை எந்தவொரு சம்பவமும் யாழ்.மாவட்டத்தில் பதிவாகவில்லை. இது போட்டி ஏற்பாட்டாளர்களின் மீதான அவநம்பிக்கையை அதிகரிக்கச்செய்யும். சிலவேளைகளில் ஆட்சேபனைகள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அது நிராகரிக்கப்படுவதற்கான காரணத்தையாவது போட்டி ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டால் அது அவர்கள் மீதான பக்கச்சார்பற்ற தன்மையை நிரூபிக்க உதவும்.

நடுவர்களைத் தெரிவதில் தவறிழைத்தல், நிபந்தனைகள் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்காமை, போட்டி முடிவுகள் பற்றிய ஆட்சேபனைகளுக்கு உரிய பதிலளிக்கத் தவறுதல் போன்ற சில செயற்பாடுகளை மேற்கொள்ளும் கல்வி அதிகாரிகளாலும், போட்டியில் தோற்றவுடன் அதனை ஏற்றுக் கொள்ளாமல் எதிரணிப் பாடசாலைகள் மீது பழியைப் போடுவதோடு மட்டுமல்லாது போட்டியில் பங்கேற்ற மாணவர்களையும் உசுப்பேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொறுப்பாசிரியர்களாலும் உண்மையில் பாதிக்கப்படுவது ஏதுமறியாத மாணவர்கள்தான். தமது கனவுகள் கலைந்துபோய் விட்டதே என்ற கவலையில் அவர்களும் சில எதிர் நடவடிக்கைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆயினும் அவர்களது மனங்களைத் தோல்வியைத் தாங்குவதற்கும் அடுத்தடவையும் முயற்சிப்பதற்கும் பொறுப்பாசிரியர்கள் முனைய வேண்டும். அத்தோடு போட்டியை நடத்தும் அதிகாரிகளும் எவ்வித குறைகளும் அற்றதான முறையில் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். இத்தகைய பின்னடைவுகள் நேர்சீர் செய்யப்படுமானால் தமிழ்த்தினப் போட்டிகளில் தொடர்கதையாகிப் போன போட்டி முடிவுகள் தொடர்பான புலம்பல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.*****

## போட்டி ஏற்பாட்டாளர்களும், பொறுப்பாசிரியர்களும் இனியாவது மாணவர் நலனைக் கருத்திலெடுப்பார்களா?

ஓவண்யன், கவிநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinity College And University

(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

**Jaffna Road, Manipay - T.P.No :- 060 - 221 - 6433** (மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

கீழ்வரும் பட்டப்படிப்புக்களுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.

**Bachelors Degree :-**

- **Bachelor of ICT (B.ICT)** ( Three Years + ICT Training)
- **Bachelor of Business IT (B.B.IT)** (Two Years +Training)
- **Bachelor of Business Management (BBM)** (Two Years +Training)
- **Bachelor of Commerce (B.Com)** (Two Years +Training)
- **Bachelor of International Business (B.IB)** (Two Years +Training)
- **Bachelor of Computer Science - B.Sc (Hons)** (Two Years +ICT Training)

**Masters Degree :-**

- **Master of ICT (MICT)** (1 ½ Years + Project Training)
- **Master of Science (IT) (M.Sc in IT)** (1 ½ Years + Project Training)
- **Master of Commerce (M.Com)** (1 ½ Years + Project Training)



**Trinity University Affiliations...**

- Part Of The Educational Division Of The U.I.C - USA
- Registered with British (U.K) Education Department (As bonafide legal overseas qualifications by the UK education act of parliament - 1988)
- Registered with Correspondence Accreditation Association (CAA - V140PG330)
- Trinity does have a Accredation certificate JPA(L) 130/10/2-Klt.128. Recognized by UNESCO.
- Member of the United Interdenominationl Church

O/L அல்லது A/L பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.

பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரமுள்ள இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பை தொடரமுடியும்

வகுப்புக்கள் யாவும் வார மற்றும் வார இறுதிநாட்களில் நடைபெறும்.
முதற் பிரிவு ஆரம்பம் 16/06/09

அனுமதி விண்ணப்ப படிவங்களை இன்று முதல் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- எமது இப் பட்டப்படிப்பு, அனைத்து வருட பரீட்சைகள் யாவும் எமது பல்கலைக்கழக உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
- யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பட்டப்படிப்புக்களை நிறைவு செய்த பின்னர், USA,UK,CANADA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் அல்லது கல்லூரிகளில் பட்டப்பின்படிப்பை தொடரமுடியும். இதற்கான Visa ஒழுங்குகள் யாவும் எமது பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரிவினால் மாணவர்களுக்கு செய்து தரப்படும்.
- பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் UK அரசின் அங்கீகாரம் உள்ள Association of Computer Professionals நிறுவனத்தில் நீங்கள் உறுப்பினராக இணைந்து உங்கள் கல்வித்தராதரத்தை சர்வதேச அங்கீகாரமுடைய தாக்கி கொள்ள முடியும்.
- தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் எம்மால் செய்து தரப்படும்.
- அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கான விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.





## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம்- 2009

மேற்படி ஆலயத்தின் விரோதி வருட மஹோற்சவம் ஆனி மாதம் 5ஆம் நாள் (19.06.2009) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

திரு விழாக்காலங்களில் அடியார்கள் ஆசார சீலர்களாய் ஆலயத்துக்கு வருகைதந்து அன்னையை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| 19.06.2009 வெள்ளிக்கிழமை | - கொடியேற்றம் | முற்பகல் 10மணி |
| 27.06.2009 சனிக்கிழமை | - சப்பறத் திருவிழா | மாலை 5.45 மணி |
| 28.06.2009 ஞாயிற்றுக்கிழமை | - தேர் | முற்பகல் 10 மணி |
| 29.06.2009 திங்கட்கிழமை | - தீர்த்தம் முற்பகல் | 10.30 மணி |
| 30.06.2009 செவ்வாய்க்கிழமை | - பூங்காவனம் | மாலை |

கொடியேற்றம் முதல் தீர்த்தத்திருவிழா வரை லண்டன் வாழ் மக்களால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து வழமைபோல் அன்னதானம் வழங்கப்படும்.

தவளக்கிரி,
அளவெட்டி. (86099) **பரிபாலன சபையினர்.**


## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூன் 14

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203-236)

* * *

இளவாலை, மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலயத்தில் வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு விசேட பூசை, ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (204-112)

## சுன்னாகம் ப.நோ.கூ.சங்கக் கிளை குப்பிளானில் திறப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 14

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் குப்பிளான் கிராமத்தில் விற்பனை நிலையமொன்றைத் திறந்து வைத்துள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இக்கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சங்கத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் சாள்ஸ் கிளையைத் திறந்து வைத்தார். (1-115)


## பெண்களுக்கான வேலை வாய்ப்பு

கீழ்க்குறிப்பிட்ட பணிகளை ஆற்றக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*ஆங்கில அறிவுடையவராகவும்,
*கணனி அறிவுடையவராகவும்,
*போட்டோப் பிரதி இயந்திரத்தினை இயக்கக் கூடியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வலி.மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 20.06.2009 இற்கு முன்னர் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**பயிற்சி நெறி**

எமது நிறுவனத்தில் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.
* அலுமினியம் பொருத்துதல் தொழில்நுட்பம்
* குளிரூட்டல் சாதனம் திருத்துதல்

ஆகியவற்றுக்கான பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பங்களை 20.06.2009 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இயக்குநர்,
கொம்ரெக், சுழிபுரம்.
(சி/558969)


## மரண அறிவித்தல்

### கந்தையா சாமி (உரிமையாளர், K.S. அம்பாள் மினிபஸ்)



பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சாமி 09.06.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பார்வதி தம்பதியரின் பாசமிகு மகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் மகிந்தராசா (பிரான்ஸ்- T.P.: 00 3314 96 33297), ரவீந்திரராசா (K.S. அம்பாள் மினிபஸ்), யசோதா, மிகுந்தராசா (லண்டன்-T.P.: 0044 7529419466), சுவிந்தராசா (லண்டன்-T.P.:0044 78 830 75285), லதாலட்சுமி (லண்டன்-T.P.: 0044 7529 419456), ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் நவநிதா, கமலேஸ்வரி, திரவியம், நிரா, கார்லி, சாந்தகுமார், நடராசா (கவி) ஆகியோரின் அன்பு மாமனும் மயூரஸ், மதுசன், யனுஸா, சானுஜா, நிலக்ஷி, சரண்யா, சஜீவன், சர்மினி, மினித், மினிசா, கயில், கீரன், ஸ்கார்லெட், மோனிஷா, அனிஸ், கௌசிகன், அஜித்குமார், யதுசனா, ஜீவனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, இராசம்மா, கண்மணி, திருநாவுக்கரசு மற்றும் சடா சிவம், நயினார், பிள்ளையம்மா, மங்கயர்க்கரசி, சண்முகராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பூவிலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் கனகரத்தினம், செல்வராசா, கனகசுந்தரம், குமரேசன், நவமணி, பாலச்சந்திரன், இராசன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/5, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (86195)

தகவல்:
சாமி ரவீந்திரராசா (மகன்-K.S. அம்பாள் மினிபஸ்)
T.P.:021 222 6569.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## நீங்காத நினைவலைகள்

**முதலாம் ஆண்டு**

தோற்றம் 22 - 09 - 1975
மறைவு 26 - 05 - 2008



அமரர் வேணுகோபால் ஆச்சாரி இராமன் ஆச்சாரி
திதி: அபரபட்ச ஸப்தமி

**ஐந்தாம் ஆண்டு**

தோற்றம் 15 - 05 - 1934
மறைவு 21 - 03 - 2004



அமரர் லெட்சுமண ஆச்சாரி வேணுகோபால் ஆச்சாரி

உள்ளத்தை உருக்குகின்ற உங்களது நினைவுகள்
உங்களது வரவை எதிர்பார்த்து எங்கள் உயிரை உருக்குகின்றது
ஒன்று அல்ல ஐந்து ஆண்டுகள் போனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சத்தை விட்டகலாது.

306, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (86201)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1966 ஆம் ஆண்டில் 'சுதந்திரன்' பத்திரிகையூடாக இலங்கைத் தமிழ் புனைக்கதைத்துறையில் பிரவேசித்த கே. ஆர் டேவிட் சாவகச்சேரி மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சிறுகதைகள் மட்டுமன்றிக் குறுநாவல், நாவல், விமர்சனம் எனப் பல துறைகளிலும் முத்திரை பதித்துள்ளார்.

வரலாறு அவளைத் தோற்றிவித்தது (நாவல்), ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை, பாலைவனப் பயணிகள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் (குறுநாவல்கள்) என்பன ஈழத்துத்தமிழ் புனைக்கதைத் துறைக்கு இவர் வழங்கிய ஆக்கங்களில் சில. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது சிறுகதைத் தொகுதி 'ஒருபிடி மண்' 1994 இல் வெளிவந்தது.

'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்' என்ற குறுநாவல் உட்பட இவரது பல சிறுகதைகள் போட்டிகளில் பரிசுக்குரியவையாக தேர்ந்தெடுக்கப் பட்டவை.

ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவரது 'கௌரவமான அடிமைகள்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# கௌரவமான அடிமைகள்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 102

வாழ்க்கையின் நகர்வுகள் மனிதனிடமுள்ள இயல்பான உணர்வுகளுக்குத் தீனியாகும் போதுதான், வாழ்க்கைப் பற்றும் எதிர்காலச் சிந்தனையும் பிறக்கின்றது. அந்த உணர்வுகளுக்குத் தொடர்பான ஏமாற்றங்களும் விரக்திகளுமே தீனியானால்.... அதன் முடிவு....? உணர்வுகள் நலிந்து, இதயம் வெதும்பி..... அந்த இதயத்தளம் மரித்துப் போன உணர்வுகளின் கல்லறைகளைத் தாங்கி நிற்கும் மயான பூமியாகி - பயங்கரமும். துன்பமுமே தேங்கி நிற்கும்.

அப்படிப்பட்ட மயான பூமிகளைத் தங்கள் இதயத் தளங்களில் தாங்கிய பத்தோ, பதினைந்து மனித ஜீவன்கள் வரிசையாக அமர்ந்திருக்கின்றனர். அனைவரும் மலையக மக்கள்.

பரந்து கிடக்கும் இந்த இலங்கை மண்ணில் சகலரையும் போல், 'நமக்கும் மண்ணுரிமை கிடைக்குமா' என்ற ஏக்கம் அவர்களுக்கு! இன்று அவர்களுக்குப் பிரஜா உரிமை பற்றிய விசாரணை நடக்க இருக்கிறது.

எட்டரை மணியிருக்கும், கந்தோர் திறக்கப்பட்டு, பியூன் மட்டும் வாசலில் உள்ள நாற்காலியில் அமர்ந்திருக்கின்றான். அதிகாரி இன்னமும் வரவில்லை. அனைவருமே சோர்ந்துபோய் இருக்கின்றனர்.

அவன் முனியாண்டி, அவன் மட்டும் சர்வ சாதாரணமாக இருக் கின்றான். அவனது முகத்தில் எந்தப் பய உணர்வும் இல்லை!

முன்னோக்கி வளர்ந்திருக்கும் மீசை மயிரை, விரலால் அமர்த்தி பற்களால் பட்டும் படாமலும் கடித்துக் கொண்டிருக்கின்றான். ஏதோ சிந்தனையில் இருந்த அவன் திடீரென்று எழும்புகின்றான். எழும்பி, அமர்ந்திருந்த வாங்கிலுள்ள நீக்கலைப் பார்க்கின்றான். எண்ணுக்கணக்கற்ற மூட்டைப் பூச்சிகள். இரத்தம் குடித்து ஊதிப் போய்க் கிடக்கின்றன. நெருப்புக் குச்சியால் கிண்டுகிறான். வாங்குப் பலகையில் ஓடமுடியாமல் அந்த மூட்டைப் பூச்சிகள் ஓடுகின்றன.

'...... நம்மடை தோட்டத் தொரைமார் நம்மளை விடமாட்டாங்க போலிருக்கு' முனியாண்டி அந்த மூட்டைப் பூச்சிகளைப் பார்த்து தனக்குத் தானே கூறிக் கொள்கிறான். வாங்குத் தொங்கலில் இருந்த ஒரு வாலிபன் மட்டும், முனியாண்டியின் பேச்சைக் கேட்டுச் சிரிக்கின்றான். தங்கள் இரத்தத்தை மறைமுகமாக உறிஞ்சுகின்ற தோட்டத்துரையை, மூட்டைப் பூச்சிக்கு அவன் உவமையாக்கிய அந்த உள்ளடக்க விளக்கத்தை அந்த வாலிபன் புரிந்திருக்க வேண்டும்.

வாங்குப் பலகையில் ஓடுகின்ற மூட்டைப் பூச்சிகளை முனியாண்டி நசித்துக் கொல்லுகிறான். திரும்பவும் அதே வாங்கில் அமர்ந்து, தனது சீலைப் பைக்குள் வைத்திருந்த அன்றைய தினசரி ஒன்றை எடுத்து விரிக்கின்றான்.

பத்திரிகையின் முன்புறத்தில் மிகத் தடித்த எழுத்துக்களில், 'சென்ற ஆண்டில் தேயிலை ஏற்றுமதியில் இலங்கை அரசாங்கத்திற்குப் பெரும் லாபம் கிடைத்துள்ளது. மலையக மக்களின் புனிதமான உழைப்பைக் கௌரவப்படுத்தும் முகமாக இந்த ஆண்டை 'தொழிலாளர் ஆண்டாகப் பிரகடனப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது' என்ற செய்தியும், அதன் கீழ் - இலங்கை அரச நாற்காலிகளில் மிக உயர்ந்த நாற்காலியில் குந்துகின்ற தகுதி பெற்ற ஒரு பிரமுகர், வெறும் மேலுடன் தேயிலைத் தோட்டத்தில், தோளில் தேயிலைக் கூடையுடன் கொழுந்து பறிப்பது போன்ற ஒரு படம்.

தடித்த எழுத்துக்களில் போடப்பட்ட செய்தியை உறுதிப்படுத்துவது போல் அந்தப் படம் அமைந்திருந்தது. முனியாண்டி திரும்பத் திரும்ப அந்தப் படத்தையும், செய்தியையும் பார்க்கின்றான்.

ஒரு மலடி, தன் கனவில், தாயாகி தாலாட்டுப் பாடி, கண் விழித்தபின் கனவுலகக் காட்சித் தரிசனத்தில் கொண்ட 'நம்பிக்கையற்ற, நம்பிக்கையால்' படுகின்ற மன அவதி. அவனது மனத்தில் சிறு சிந்தனைச் சலனம்!

'புளித்துப்போன செய்திகள்' முனியாண்டி வெறுப்போடு கூறுகின்றான்.

மலையக மக்களின் புனிதமான உழைப்பு, பெரும் லாபம், தொழிலாளர் ஆண்டு.

ஆனால்? நாம்?

இன்னமும் விசாரணைக்குரியவர்கள்!

அவனது மனத்தில் கோர்வை வெடியைப் போல் சிந்தனைகள் வெடித்துச் சிதறுகின்றன.

உணர்வுகள் கல்லறையாகி விட்டாலும், அந்த உணர்வுகளால் ஊறிய அனுபவங்கள் என்றும் மரணிப்பதில்லையே!

''நீங்களும் விசாரணைக்குத்தான் வந்தீங்களா'' முனியாண்டியின் மன நிலையை ஊகித்துக் கொண்டிருந்த இன்னொரு மலையக வாலிபன் கேட்கின்றான்.

''ஆமாங்க''

''உங்க பெயர்''

''முனியாண்டி''

''எந்தத் தோட்டமுங்க''

''கீனாகலைத் தோட்டம்''

''ஏனுங்க, சிவனு, லெட்சுமணன் இவங்களை உங்களுக்குத் தெரியுமங்களா'' அந்த வாலிபன் ஆவலோடு கேட்கின்றான்.

சிவனு, லெட்சுமணன்.

கீனாகலைத் தோட்டத்தில் நடந்த போராட்டத்தின் போது 'அரச தோட்டாக்களுக்குப்' பலியானவர்கள். தியாகிகள். முனியாண்டியின் இதயத்தில் இரத்தம் கசிகின்றது.

''தெரியும்'' ஒரு பெருமூச்சுடன் கூறுகின்றான்.

''நம்ம தோட்டத்திலை அவங்களுக்காக ஒரு இரங்கல் கூட்டமொன்று வைச்சிக்க வேணுமென்னு நம்ம ஆளுங்க முயற்சி பண்ணினாங்க. ஆனா நம்ம தொரை சம்மதிக்கலை'' அந்த வாலிபன் மிகவும் வேதனையோடு கூறுகின்றான்.

''யேசுக்கிறீஸ்து நாதர் சிலுவையைச் சொமந்துகிட்டு நடந்தாரே, அது போலைத்தான் நம்ம ஆக்களின்ரை வாழ்க்கையும் ஓயாத உழைப்பு. உறக்கமில்லாத வாழ்க்கை எண்ணைக்குமே நாம அனாதையுங்கதான்.

நம்மளைப் படைச்ச ஆண்டவனாலையும் பலனில்லை. நம்மடை உழைப்பை உறிஞ்சிற அரசாங்கத்தாலையும் பலனில்லை.

இனிமே நம்ம கைகள்தான் நமக்குதவி'' முனியாண்டி கூறுகிறான், அங்கு அமர்ந்திருந்த அனைவருமே மௌனமாக இருக்கின்றனர். (14 ஆம் பக்கம் பார்க்க...)

# ஓ! அம்மா, என் அம்மாவே!

''ஏய்! அதோ பாரடா, வாத்தியார் சொன்னாரே அந்த ஸைக்ளாப்ஸ் (ஒற்றைக் கண் ராட்சசன்) பெண் வேடத்தில் வந்திருக்கிறான்'' என்றான் ரமேஷ்.

நாங்கள் எல்லோரும் திரும்பிப் பார்த்தோம். அங்கே என் அம்மா... ஒரே கண்ணுடைய, மற்றொரு கண்ணுள்ள இடத்தில் கறுப்புத் தழும்புடன் அச்சமூட்டும் முகத்தோடு என் அம்மா.

நாங்கள் ஏழைகள். என் அப்பா.. அவர் என்ன ஆனாரோ தெரியவில்லை. என் அம்மா கீரை, கிழங்குகள் பறித்து விற்று வந்தாள். நாங்கள் பாடம் தொடர்பான பயிற்சிக்காக வந்திருந்த இடத்திற்கு அவளும் ஏன் வந்தாள்?

'ஒற்றைக்கண் டோரியா? ஊரைப் பார்க்க வாரியா' என்று பாடினான் ஒருவன். எனக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. என் ஏழை அம்மாவின் நிலைக் காசுப் பரிதாபம் சிறிதும் தோன்றவில்லை.

'ஏய் நம்ம மணியோட அம்மாடா' என்று தன் கண்டுபிடிப்பை அறிவித்தான் சேது. இப்போது எல்லோருடைய ஏளனப் பார்வையும் என் மீது! நெருப்பை உமிழ்வது போல் அம்மாவை நோக்கி ஒரு பார்வையை வீசிவிட்டு அந்த இடத்திலிருந்தே ஓடிப்போனேன்.

'உன் அம்மாவுக்கு ஒரு கண்தானா?' அடுத்த நாள் பலரின் விசாரிப்பு. எனக்கு உடலே எரிந்தது.

'ஐயோ, இந்த உலகிலிருந்தே அம்மா ஒழிந்து போகக் கூடாதா? என்று நினைத்தேன்.

''அம்மா, இப்படி ஏன் ஒற்றைக் கண்ணோடு இருக்கிறாய்? உன்னால் எனக்கு எப்போதும் அவமானம் தான். என்னை எல்லோரும் கேலி செய்கிறார்கள். நீ.... போகக் கூடாதா'' என்று வார்த்தைகளால் கேட்டேன்.

அம்மா மௌனமாக இருந்தாள். இதயத்தின் ஏதோ ஓர் மூலையில் எனக்கு வலித்தது. 'சொன்னது நல்லது தான்! என் நிலைமையை அம்மாவிற்குப் புரிய வைக்க வேண்டுமல்லவா' - என் கௌரவம் அந்த வலியை நீக்கியது.

எனக்கு எந்தத் தண்டனையும் என் அம்மா தரவில்லை. நானோ... அவள் உணர்ச்சிகளைச் சின்னாபின்னமாகச் சிதைத்திருந்தேன். ஆனால்...

அன்றிரவு. யதேச்சையாக விழித்த நான் தண்ணீர் குடிக்கச் சமையலறைக்குச் சென்றேன். அங்கே அம்மா சத்தமின்றி அழுது கொண்டிருந்தாள்.

நான் அம்மாவைக் கூர்ந்து நோக்கினேன். உடன் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். மாலையில் நான் அவளிடம் கூறிய கடுஞ்சொற்கள் என் காதில் எதிரொலித்தன. இதயத்தின் மூலையில் அந்த வலி மீண்டும்!

ஆனாலும் நான் அம்மாவை அப்போதும் வெறுத்தேன்.

அம்மாவின் மீதான வெறுப்பும், எங்கள் ஏழ்மையும் 'நன்கு படித்து, உழைத்து வாழ்வில் வெற்றி பெறுவேன்' என என்னுள்ளேயே சபதமிடச் செய்தன. அப்போது நான் ஆரம்பப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன்.

நன்கு படித்தேன்; அம்மாவை விட்டு கரக்பூருக்குச் சென்று மேற்படிப்பும் பெற்றேன். அங்கேயே பல்கலைக்கழகத்தில் பெருமதிப்புடன் பணியேற்றேன். திருமணம், சொந்த வீடு, என் அழகான குழந்தைகள்.. என எல்லாம் நல்லதாகப் போய்க் கொண்டிருந்தன.

சில வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் என்னைப் பார்க்கத் திடீரென ஒரு பாட்டி வந்தார். யார் இவர்?

எனக்கு முதலில் புரியவில்லை.

சே, இது என் அம்மா, அதே ஸைக்ளாப்ஸ், வெறுப்பா, அருவருப்பா என்ன என்றே தெரியாத உணர்ச்சி.

உள்ளேயிருந்து வந்த என் மகள் ஒற்றைக் கண் மூதாட்டியைக் கண்டதும் ஓவென அலறியபடி பயத்துடன் ஓடி ஒளிந்தாள்.

வெறுப்பின் உச்சத்தில் இருந்த நான் சிறிதும் இரக்கமில்லாமல், ''யார் நீங்கள்? எனக்கு உங்களைத் தெரியவே தெரியாதே,'' என்று வறண்ட குரலில் கூறினேன்.

அடுத்த விநாடி, ''என் வீட்டிற்கு வந்து என் மகளையே பயமுறுத்த என்ன தைரியம்? கெட் அவுட்'' என்று கத்தியபடி வாயிலைக் காட்டினேன்.

''ஐயா, மன்னித்துக் கொள்ளப்பா'' என்றபடி வெளியேறினாள் அந்த மூதாட்டி. அப்பா, நல்ல வேளை! என்னை அவள் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. இனி அவளைப் பற்றி நினைக்கவே மாட்டேன் கவலைப்படவும் மாட்டேன்

அமைதியாகக் காலம் கடந்தது. ஒரு நாள் நான் படித்த ஆரம்பப் பள்ளியின் பழைய மாணவர் தினத்திற்கான அழைப்பிதழ் வந்தது. அன்று என்னை நையாண்டி செய்த சகமாணவர்களுக்கு என் பெருமையை, படாடோபத்தைக் காட்ட, இன்று சரியான சந்தர்ப்பம்.

என் மனைவியிடம் வியாபாரம் தொடர்பாக வெளியூர் செல்வதாகக் கூறிவிட்டு என் சொந்த ஊருக்குச் சென்றேன். நான் எதிர்பார்த்த கௌரவத்தோடு பழைய மாணவர் தினத்தில் அபாரமாகப் பங்கேற்றேன்.

ஏதோ ஓர் ஆர்வத்தில் என் இளமைக் காலத்தில் நாங்கள் வீடு என்று சொல்லிக் கொண்ட ஓலைக் குடிசையைக் காணச் சென்றேன் அங்கே...

என் தாய் வெறும் தரையில் பேச்சு மூச்சற்றுக் கிடந்தாள். என்ன கொடுமை! அப்போதுகூட என் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வரவில்லை. அவளது கையில் ஒரு காகிதம், எனக்கு எழுதப் பட்ட ஒரு கடிதம்.

*''அன்பு மகனே,*

*''நான் நீண்ட நாள் வாழ்ந்து விட்டதாக நினைக்கிறேன், இனி நீ வசிக்கும் கரக்பூருக்கு நான் என்றுமே வரமாட்டேன்... எப்போதாவது ஒரு முறை நீ என்னைப் பார்க்க வருவாயா? இப்படிக் கேட்பது கூடச் சரியில்லையோ என்று தோன்றுகிறது.*

*நீ பள்ளி விழாவிற்கு வரப் போகிறாய் என்று கேட்டு மகிழ்ந்தேன். ஆனால் பள்ளிக்குக் கண்டிப்பாக வரமாட்டேன். இந்த ஒற்றைக்கண் அம்மா அங்கும் வந்து உன்னைக் கேலிக்கு ஆளாக்க மாட்டேன்.*

*''கண்ணே, ஒன்றை மட்டும் தெரிந்து கொள். நீ கைக்குழந்தையாக இருந்த போது ஒரு விபத்தில் சிக்கி, ஒருகண்ணை இழந்து விட்டாய். ஒரு கண் மட்டுமே உள்ள குழந்தையாக நீ வளர்வதை இந்தத் தாயால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.*

*''என் ஒரு கண்ணை உனக்கு வைத்து வைத்தியம் செய்யும்படி மருத்துவர்களை மன்றாடிக் கேட்டுக்கொண்டேன்.*

*''எனக்கு ஒரே பெருமிதம்! 'என் மகன் உலகின் காட்சியையெல்லாம் முழுமையாகக் கண்டு களிக்கிறான். அதுவும் என் கண் மூலமாக' என்று மகிழ்ந்தேன்.*

*''நீ என்ன செய்தாலும், சொன்னாலும் அது என் இந்த மகிழ்ச்சியைக் கலைத்ததில்லை. ஓரிருமுறை என்னை நீ கோபப்பட்டபோதும், என் மீதுள்ள அன்பால் தான் இப்படிச் செய்கிறாய் என்று நினைப்பேன்.*

*''சிறுவனாக நீ என்னைச் சுற்றிய நாட்கள் - அவற்றை மறக்கவே முடியவில்லை. நீ இல்லாத வெறுமை என்னை வாட்டுகிறது. என் கண்ணே, நீதான் என் உலகம். உன் மீதான என் அன்பு - அதை அளவிட முடியாது.*

*இப்படிக்கு*

*................''*

கையெழுத்திடப்படாத அக்கடிதத்தைப் படித்தவுடன் என் உலகம் நான் எதையெல்லாம் கௌரவம் என எண்ணினேனோ அவை அனைத்தும் என் கண்முன்னே சுக்கு நூறாய்ச் சிதறின.

என் ஆணவம் அழிந்தது. அகத்திரை கிழிந்தது, ஓவெனத் தரையில் வீழ்ந்து கதறியழுதேன், எனக்காகவே வாழ்ந்த என் அம்மாவுக்காக.

தன் கண்ணையே வழங்கி என்னை வளர்த்த என் அம்மாவிற்கு நான் இதுவரை சிந்தாத கண்ணீரையெல்லாம் ஒரேயடியாகக் கொட்டித் தீர்த்தேன்.

ஆனால் என்ன பயன்? அம்மாவின் உயிர் தான் அங்கில்லையே! அம்மா, ஓ அம்மா!

*(நன்றி: ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்)*

## முதுமையின் முகவரி

*பெற்ற கடன் பட்டதற்காய்*
*பெற்ற பிள்ளை அடக்கியாள*
*பெற்ற வயிறு துடிதுடிக்க*
*பரிதவித்து நிற்கின்றோம்*

*குத்தும் வார்த்தை நெஞ்சைச்சுட*
*கெடுபிடிகள் மெய்யைத் தொட*
*கேட்பதற்கே நாதியற்றுப் போய்*
*மனதுடைந்து தவிக்கின்றோம்*

*உணர்ச்சிகள் உறவுகளால் செத்து*
*வாய்க்கு ருசி உணவுமின்றி*
*பாரினில் நாம் பாரமாகி*
*விரக்தியின் விளிம்பிலுள்ளோம்*

*எம் தேவைகளை மட்டுப்படுத்தி*
*எம் வாரிசு வாழவென்று*
*எந்திரமாக உழைத்த போதும்*
*கடைசியில் நாமின்று அநாதைகள் போலானோம்*

*ஆனாலும்,*

*எம் வருங்கால முதியவர்கள்*
*முகவரி தந்தார்கள்*
*முதியோர் இல்லம் இருக்குதென்று...*
*ஐயோ! பாவம் இவர்களும் ஒரு நாள்....*

**ஜே.எஸ்.ராஜ்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெகு வேகமாய் நொடிகள் நகரத் தொடங்கின. மணிமொழிக்கு நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. எவ்வளவுதான் யோசித்தாலும் அவளுக்கு சிலையின் கேள்விக்கு விடை பிடிபடவேயில்லை.

அவளின் நம்பிக்கைகள் எல்லாமே குறைந்துகொண்டு சென்றன. தான் சிலையானாலும் பரவாயில்லை. ஆனால் இளவரசர்கள் இருவரையும் தன்னால் காப்பாற்ற முடியாமல் போய்விடுமோ என்பதை எண்ணி அதிகம் கவலைகொண்டாள். நடந்தவை எல்லாமே ஒரு கெட்டகனவு போல அவளுக்குத் தோன்றியது.

'கடவுளே! இதுவரை நடந்ததெல்லாம் கனவாக இருக்கக்கூடாதா?' என்று அவள் எண்ணினாள். அப்போது திடீரென அவள் எண்ணத்தில் மின்னலாய் விடை பளிச்சிட்டது. முகம் பிரகாசமுற்றவளாய் உயிர்பெற்ற சிலையை நோக்கி ''வினாத் தொடுத்த சிலையே! உன் கேள்விக்கான சரியான பதிலை நான் கண்டுபிடித்துவிட்டேன்'' என்று உரத்த குரலில் கூவினாள்.



''அப்படியானால் சரியான விடையைக் கூறு பார்க்கலாம்'' என்று சிலையும் பதிலுறுத்தது. ''கண்கள் இல்லாமலேயே காணக்கூடிய காட்சி கனவு தான். எனவே கனவு தான் உனது கேள்விக்கான சரியான விடை'' என்று மணிமொழி நம்பிக்கை பொங்கக் கூறினாள். அவளது விடையில் சிலை திருப்தியுற்றது.

''பெண்ணே! உன் புத்திசாதுரியமான விடைமூலமாக உன்னை மட்டுமல்லாது இந்த இளவரசர்களையும் காப்பாற்றிவிட்டாய்'' என்று கூறித் தன் கையைக் காற்றிலே ஒரு சுற்றுச் சுற்றி அசைத்தது. அடுத்த நொடியே சிலையாய் இருந்த இளவரசர்கள் இருவரும் உயிர்பெறத் தொடங்கினர். (தொடரும்)

# பொது அறிவு

★ குதிக்கத் தெரியாத மிருகம்
*யானை*

★ குதிரைகள் அதிகம் உள்ள நாடு
*சீனா*

★ சீனாவின் புனித மிருகம்
*பன்றி*

★ மிக உயர்ந்த பறவை
*தீக்கோழி*

★ தபால் அட்டையை வட்டமாக வெளியிட்ட நாடு
*மலேசியா*

★ வயிற்றில் பல் உள்ள விலங்கு
*நண்டு*

★ மிகத் தடித்த தோல் உள்ள பிராணி
*திமிங்கிலம்*

★ கீழ்த் தாடையை அசைக்கத் தெரியாத விலங்கு
*முதலை*

★ நான்கு கண்கள் உள்ள மீன்
*அனெப்லஸ்*

*சி.நிக்சன், தரம்-9*
*யா/கைதடி குருசாமி வித்தி.*

# விடுகதை சொல்லப்போறோம்...

01. ஒற்றைக் காலனுக்கு, கைகள் மட்டும் பத்துக்கு மேல். அவன் யார்?
- **மரம்**

02. அறை அறையாய் இனிப்புச் சுரங்கம், ஆயிரத்துக்கு மேலான காவலர்கள். அது என்ன?
- **தேன்கூடு**

03. பூப்பதோ ஒற்றைப்பூ, தலையில் வைக்க முடியாத பூ. அது என்ன?
- **வாழைப்பூ**

04. டப்பாக்காரன், தாடிக்காரன், கோவிலுக்குப் போனால் வெள்ளைக் காரன். அது என்ன?
- **தேங்காய்**

05. முத்து முத்தாய் தோரணம், தரையில் விழுந்து ஓடுது. அது என்ன?
- **மழை**

06. வெள்ளைக் கத்தரிக்காய், கள்ளக்குரல் போடுது. அது என்ன?
- **சங்கு**

07. வெள்ளையாம் வெள்ளைக்குடம், விழுந்தால் ஓட்டைக்குடம். அது என்ன?
- **முட்டை**

08. ஓட்டம் நின்றால், ஆட்டம் போச்சு. அது என்ன?
- **இரத்தம்**

பி. பிரதாயினி, தரம்-6C, *சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.*

# உவமைகள்

| | |
|---|---|
| 01. அச்சாணியற்ற தேர் போல | –உயிர் நாடியற்றது. |
| 02. அத்தி பூத்தது போல | –மிக அரிதாக |
| 03.ஆண்டிகள் கூடி மடம் கட்டினது போல | – உருவாகாத திட்டம் |
| 04. ஆற்றில் கரைத்த புளி போல | – பயனற்ற செயல் |
| 05. உடுக்கை இழந்தவன் கைபோல | – ஆபத்தில் உதவி |
| 06. அடியற்ற மரம் போல | – மூலபலமற்றது. |
| 07. முயற்கொம்பு போல | – முடியாத காரியம் |
| 08. உள்ளீடற்ற பதர் போல | – போலித்தோற்றம் |
| 09. உயிரும் உடம்பும் போல | – பிரியா நட்பு |
| 10. துரும்பைத் தூணாக்குவது போல | – சிறியதைப் பெரிதுபடுத்தல். |
| 11. கீரியும் பாம்பும் போல | – பகை |
| 12.கரடி பிறை கண்டது போல | – மிக அரிது |
| 13. இடி ஒலி கேட்ட நாகம் போல | – பயம் |
| 14. உள்ளங்கை நெல்லிக்கனி போல | – மிகத் தெளிவாக |
| 15. ஓடும் புளியம்பழமும் போல | – பட்டும் படாமலும் பழகுதல் |

**ந. தர்சினி**, தரம்-8B, யா/.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

# உங்களுக்கும் பரிசில்கள்

## விடை தெரியுமா? -19

1. 2009 ஆண்டு பிரெஞ்சு ஓப்பன் டெனிஸ் போட்டியில் ஆடவர் பிரிவில் பட்டம் வென்ற வீரர் யார்?
2. யோகர் சுவாமிகளின் திருவடி பதித்த பாதக்கோயில் எங்குள்ளது?
3. வெள்ளரிப்பழத்தைச் சுற்றி பனை ஓலையால் கட்டப்படும் அமைப்பை யாழ்ப்பாணத்தவர்கள் எவ்வாறு கூறுவர்?
4. சூடான காற்று நிரம்பிய பலூன் மூலம் பறக்க முடியுமென நிரூபித்த சகோதரர்களின் பெயர்கள் என்ன?
5. மராட்டிய மன்னரான சிவாஜி இந்து சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக எப்போது முடி சூடினார்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 24.06.2009 இற்கு முன்னர்

சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## விடை தெரியுமா? -17
**சரியான விடைகள்**

(1) டெக்கான் சார்ஜர்ஸ்
(2) கில்கிறிஸ்ட்.
(3) வடகொரியா - 25.05.2009
(4) ரமணி. (5) ஜோய்டி பிறிஸ்.

## பரிசுபெறுவோர்

01. பி.தினுஷா, *தரம் - 9C, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.*
02. சோ.கோகுலவதனி, *தரம் - 8, யா/மகேஸ்வரி வித்தி., நாயன்மார்கட்டு.*
03. வ.டிவாகரன், *தரம் - 7G, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.*
04. பா.பாருகன், *தரம் - 9, யா/கொக்குவில் இராமகிருஸ்ண வித்தி.*
05. சோ.லஜிந்தா, *தரம் - 10, யா/மகேஸ்வரி வித்தி., நாயன்மார்கட்டு.*
06. சி.நிரோஜன், *தரம் - 4B, யா/மாணிக்கவாசகர் வித்தி. கரவெட்டி.*




# விடிவை நோக்கி

நெஞ்சிலே உறுதியுண்டு -என்னும்
எண்ணத்தைத் துணையாய் கொண்டு
நம்பிக்கை வளர்த்துக் கொண்டு
நாம் செல்வோம் நலன் தேடி.

சாதி சாதி என்று நம் வாழ்வில்
சாதித்தது எதுவும் இல்லை
ஒற்றுமையாய் வாழ்வோம் என்று
உறுதி கொள்வோம் நெஞ்சினிலே.

ஒற்றுமையைக் குவித்திடுவோம்
சமாதானத்தை வளர்த்திடுவோம்
இறைவன் அருளுடனே
இனிதாக வாழ்ந்திடுவோம்.

இன மத பேதம் மறந்து
இனிய நம் வாழ்வை நினைத்து
ஒற்றுமையாக கூடி வந்து
புறப்படுவோம் விடிவை நோக்கி.

*தி. கஜிதா*
*மிருசுவில், நலன்புரி.*

# நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)
மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.............................. வகுப்பாசிரியர் கையொப்பம்

# மாணவர் தூரிகை


யோ.கேசினி, தரம் -6, வேம்படி மகளிர் கல்லூரி.


பா.நதீஷன், தரம் - 1A, யா/நல்.சென் .பெனடிக்ற் வித்தி.


யா/வேம்படி மகளிர் கல்லூரி.


சே.யனுஷன், தரம் -6 B, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.


ந.டிலக்ஸ்ஷா, தரம் -5, யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தி.


தரம் -7 B, யா/பன்கலாகம் மெய்கண்டான் ம.வி.


கி.கேசவன், தரம் -5 A, யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 வருடங்களாக இரத்ததானம் செய்ததோடு 250 கொடையாளர்களை ஊக்குவித்த மனித நேயர்

இன்று உலக குருதிக் கொடையாளர் தினம். உதிரம் கொடுத்து உயிர்காக்கும் உத்தமர்களாக வலம் வருகின்ற தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் உலகில் எப்போதும் மதிப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், சுயநலமின்றி, பொது நலநோக்கோடு இன்னொருவருக்கு உதிரம் கொடுக்கின்ற ஓர் உன்னதமான அர்ப்பணிப்புமிக்க பணியினை ஆற்றிவரும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் வருடந்தோறும் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினரால் கௌரவிக்கப்பட்டுவருகின்றனர்.

இந்த மண்ணில் பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று இல்லாமல், வாழும் காலத்தில் மற்றவர்களுக்குப் பயன்படத்தக்க விதத்தில் எம்மால் ஆனதைச் செய்தோம் என்ற திருப்திகரமான மனநிலையில் நாம் இவ்வுலக வாழ்க்கையை நீத்தல் பயனுடையதாகும்.

எமது மண்ணில் நீண்ட நெடுங்காலமாக நீடித்த போரினால் நாம் இழந்தவைகள் ஏராளம். அந்தக் கொடூர யுத்தத்தினால் நாம் இழந்த எமது பொருளாதார வளத்தை மீண்டும் கட்டியெழுப்பமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்றோம்.

யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் காயப்படுகின்ற நோயாளர்களுக்கும், சாதாரண நோயாளர்களுக்கும் இரத்தம் வழங்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்ற போது அதை நிவர்த்தி செய்ய யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு போதியளவு குருதியின்றிப் பட்டபாடு எல்லோரும் நன்கு அறிவர்.

அந்த நெருக்கடியான சூழ்நிலையில் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவையாற்றினர் என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

அதன்பின்னர் இரத்தவங்கியின் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் என்ற சேவை மனப்பாங்கு கொண்டவர்கள் ஊடாக இரத்தவங்கிப் பிரிவு நடமாடும் சேவையொன்றை மேற்கொள்ளத் தொடங்கியது. அந்தக் குருதிக் கொடையாளர்களின் அர்ப்பணிப்பான மகத்தான அந்தச் சேவையினால் காலப்போக்கில் இரத்த வங்கியில் இரத்தத் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விட்டது. அந்த அளவுக்கு அவர்களின் அத் தன்னலமற்ற அரிய பணி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நடமாடும் இரத்ததானச் செயற்பாட்டுக்கு குருதிக் கொடை

யால் இரத்ததானம் பாதிப்பு எதனையும் ஏற்படுத்தாது என்பதுடன் இலகுவானது, உன்னதமானது, உயிர்காப்பது என்ற தொனிப் பொருளை எல்லோருக்கும் ஊட்டி அவர்களையும் உங்களுடன் இந்த உன்னதப் பணியிலே இணையச் செய்யுங்கள்.

**துரைச்சாமி சத்திவேல்**
*(வயது - 56, வல்வெட்டித்துறை)*



நான் இதுவரையில் 31 தடவை இரத்ததானம் செய்துள்ளேன். 1971 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இரத்த தானம் செய்துவருகிறேன். வடமராட்சியில் தொண்டைமானாறு, உடுப்பிட்டி, பொலிகண்டி போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ளவர்கள் மத்தியில் இரத்ததானம் தொடர்பான அவசியத்தை எடுத்துச் சொல்லி குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் அதிகரிக்கச் செய்து வருகிறேன். இற்றைவரை ஏறக்குறைய 250 இற்கும் மேற்பட்டவர்களை இதில் இணைத்துள்ளேன்.

அவர்கள் 4 மாதத்துக்கு ஒரு தடவை இரத்ததானம் செய்துவருகின்றனர். வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் தான் இரத்ததான முகாமை நாம் ஒழுங்கு செய்வது வழமை. இரத்ததானம் நடைபெறும் திகதியையும், இடத்தையும், நேரத்தையும் குறிப்பிட்டு துண்டுப் பிரசுரம் ஒன்றினை அச்சிட்டு வடமராட்சியில் உள்ள பத்திரிகை முகவர்களிடம் தொடர்பு கொண்டு பத்திரிகைகளுக்குள் வைத்து விடுவோம். அது மக்களைச் சென்றடையும் போது அவர்களில் பலர் தாராள மனப்பாங்குடன் இரத்ததானம் செய்ய முன் வருவார்கள்.

இத்தகைய பணியினைத் திறம்படச் செய்வதற்கு டாக்டர் மயிலேறும் பெருமாள், டாக்டர் சிவசங்கர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரவீனதாஸ் போன்றோரின் ஒத்துழைப்பு சிறந்த முறையில் கிடைத்தன. உண்மையில் அவர்களுக்கு நாம் நன்றி சொல்லவேண்டும்.

எமது இளம் சமுதாயம் இத்தகைய காத்திரமான - இன்னொரு உயிருக்கு உதவுகின்ற ஆக்கபூர்வமான பணியினை முன்னெடுக்கத் தயக்கமின்றி முன்வர

கொடை யாளர்களாக இணைந்துள்ளனர். இவர்களில் ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலதரப்பினரும் உள்ளடங்குவர்.

குறிப்பாக எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்கள் இந்தப் பணியினை மிகவும் அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றார்கள்.

வருடத்துக்கொரு தடவை எமது கல்லூரியில் இன்ரறக்ட் கழகத்தின் ஊடாக இரத்ததான நிகழ்வினைத் தவறாது செய்துவருகின்றோம்.

2007, 2008 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் இரத்ததானம் செய்கின்ற அதிகூடிய மாணவர்களின் எண்ணிக்கையினைக் கொண்ட பாடசாலை என்ற சிறப்பு விருது எமக்கு வழங்கப்பட்டது.

அத்தகைய சாதனையின் பெருமை தனை இம்முறையும் பெற்றுக் கொள்ள எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்கள் இரத்ததான முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள இப்போது தொடங்கியே ஆயத்தமாகி வருகின்றனர். வெகு விரைவில் ஒரே தடவையில் அதிகூடிய எண்ணிக்கை கொண்ட குருதிக் கொடையாளர்கள் பங்குகொள்ளும் இரத்ததான நிகழ்வினை நடத்தவுள்ளோம்.

எமது கழகத்தின் ஊடாக இத்தகைய ஆக்கபூர்வமான பணியினை முன்னெடுக்க எமது கல்லூரி அதிபர் வணபிதா. ஜெரோ செல்வநாயகம் எமக்கு நல்லதொரு வழிகாட்டியாக விளங்கி உதவிவருகிறார். அவரது பூரண ஒத்துழைப்பு எமக்கு மென் மேலும் உற்சாகம் தருவதாக அமைந்துள்ளது.

உண்மையிலே நாம் செய்கின்ற தர்மங்களிலே இரத்ததானம் மிகவும் பெறுமதி மிக்க தர்மம் ஆகும். அதனை அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவை மனப்பாங்குடன் நாமனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

**சர்வானந்தன் குமரசீலன்** *(வயது - 35, முதலாம் கட்டை, பருத்தித்துறை)*

கடந்த 2002 இல் இருந்து இற்றை வரை 23 தடவைகள்



இரத்ததானம் செய்துள்ளேன். எனது தனிப்பட்ட முயற்சியால் 250 இற்கு மேற்பட்ட குருதிக் கொடையாளர்களை

# உயிர் காக்கும் உன்னத பணியில் நீங்களும் ஏன் இணையக் கூடாது? சுகதேகிகள் இரத்ததானம் செய்வதால் பக்கவிளைவு எதுவும் இல்லை!

யாளர்களை ஒருங்கமைக்கும் செயற்பாட்டாளர்கள், தாமும் குருதிக் கொடையாளர்களாக இருப்பதன் மூலம் சமூகத்தின் நன்மதிப்புக்கும் கௌரவத்துக்கும் பாத்திரமாகின்றனர்.

குருதிக்கொடையாளர்களாக இருந்தும், இரத்ததான நிகழ்வுகளை ஒழுங்கமைத்து தொடர்ச்சியாக அர்ப்பணிப்பு உணர்வுமிக்க அப்பணியினைத் திறம்பட முன்னெடுத்து வருகின்ற குடாநாட்டின் குருதிக் கொடையாளர்கள் சிலரின் கருத்துக்களை இன்றைய குருதிக் கொடையாளர் தினத்தில் 'உதயன்' வாசகர்களுக்கு தருகின்றோம்.

நன்நோக்குடன் சமூக உணர்வோடு தார்மீகக் கடமையாகக் கருதி இத்தகு நற்சேவைகளை நாம் பாராட்டுவதும், அவர்தம் பணி மானுடத்தின் தனித்துவ வெளிப்பாடாகக் கருதி மதிப்பளிப்பதும் அவசியமாகும். நாம் சந்தித்த அத்தகைய மனிதத்துவம் நிறைந்த அக் குருதிக் கொடையாளர்கள் நால்வரது கருத்துக்கள் இங்கு திரட்டித் தரப்படுகின்றன. ஏன் எம்மாலும் இத்தகைய அரிய பணியை - குருதிக்கொடையை மேற்கொள்ள இயலாதா என ஒருகணம் உங்களை அவர்களது கருத்துக்கள் எண்ண வைக்கும் என நம்பலாம்.

**டாக்டர் ஏகாம்பரம் தேவநேசன்**
*பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை.*



இன்று உலகக் குருதிக் கொடையாளர் தினம் என்பது குறிப்பிடத்தக்கது. குருதி என்பது எமது உடல் நலம் பேணுவதற்குரிய மிக முக்கியமான ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் பல மில்லியன் உயிர்கள் குருதி மாற்றீடு மூலம் காப்பாற்றப்படுகின்றன. அவர்களுக்குப் பாதுகாப்பான, குருதியை போதிய அளவில் வழங்க வழி செய்வது எமது இரத்த வங்கியின் கடப்பாடாகும். பணம் பெற்றுக்கொள்ளாத தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் இரத்ததானத்தின் மூலமே நாம் பாதுகாப்பான குருதியை நோயாளர்களுக்கு வழங்க முடியும்.

எமது மண்ணிலும் போர்க்கால இடர்களுக்கு மத்தியில் குருதித்தேவை அதிகரித்த காலங்களில்கூட பிறர் நலமே பெரிதெனக் கொண்டு குருதிக் கொடை செய்து, பல உயிர்களைக் காத்த, -இன்றும் காத்துக்கொண்டிருக் கின்ற மதிப்பிற்குரிய குருதிக் கொடை யாளர்களை இன்றைய நாளிலே நன்றியுடன் நினைவுகூர்வது இச்சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரதும் கடமையாகும்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வடபிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு குருதியை விநியோகிக்கின்ற பிராந்திய பரிசோதனை நிலையமாக விளங்குகின்றது. இன்று இந்நிலையத்தின் குருதித்தேவை முற்றுமுழுதாகத் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் பங்களிப்பினைக் கொண்டே பூர்த்தி செய்யப்படுகின்றது. ஆகையால் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமே இந்த நிலையத்தை நாம் மென்மேலும் அபிவிருத்தி செய்ய முடியும். ஆகை

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**வணபிதா எம்.வி.ரவிச்சந்திரன்** *(வயது -42)*



நான் இதுவரையில் 12 தடவை இரத்த தானம் செய்துள்ளேன். அத்துடன் சாவகச்சேரி லிகோறிய தேவாலயம், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் தேவாலயம் ஆகியவற்றூடாகக் குருதிக் கொடையாளர்களை இப்பணியில் இணைத்துள்ளேன். கடந்த 2002 இல் இருந்து இற்றை வரை 600 இற்கு மேற்பட்ட குருதிக் கொடையாளர்களை எம்மால் இணைத்துக் கொடுக்க முடிந்தது. ஒரு வருடத்தில் இரண்டு தடவை என்ற அடிப்படையில் இரத்ததானம் வழங்கி வருகின்றோம்.

தேவாலயத்துக்குப் பூசை வழிபாடுகளுக்காக வருகின்றவர்களிடத்தில் இரத்த தானம் தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் ஊடாகத் தான் இத்தகைய பணியினைச் செய்யமுடிகிறது.

மனிதர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்பவர்கள். ஒருவர் தேவையில் மற்றவர் உதவி செய்து இணைந்து வாழவேண்டியவர்கள். பிறர் தேவையிருக்கும்போது உதவவேண்டும் என்பது ஓர் அடிப்படை மனிதப் பண்பு. அந்த வகையில் குருதித் தேவை உள்ளவருக்கு எமது குருதியைக் கொடுத்து

இப் பணியில் இணைத்துள்ளேன். எனக்கு அறிமுக மானவர்களோடு இரத்ததானம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒன்றிணைத்து எனது சொந்த வீட்டில்தான் இரத்ததான ஒழுங்குகளை மேற்கொள்வேன்.




நான்கு மாதத்துக்கொரு தடவை இரத்ததானத்தினை ஒழுங்காகச் செய்து வருகிறேன். எனது மனைவி யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகப் பணியாற்றி வருவதால் இந்தப் பணியினைத் தொடர்ந்து செய்வதற்கு அது ஓர் உந்து சக்தியாக அமைந்தது.

எமது கிராமத்தில் உள்ள ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பெரிய அளவில் இரத்ததான நிகழ்வினைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அந்தப் பணியினைத் செய்யத் தீர்மானித்துள்ளோம். ஏறக் குறைய 200 இற்கும் மேற்பட்ட குருதிக் கொடை யாளர்களை இதில் இணைப்பதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்து

# இளைஞர்கள் முனைப்புடன் முன்வரவேண்டிய உத்தம தானம் குருதிக்கொடை

உதவுவதென்பது ஓர் உன்னதமான பணி.

ஓர் உயிர்காக்கும் உன்னதமான பணியினைச் செய்ய ஆரோக்கியமான ஒவ்வொரு மனிதரும் மனமுவந்து முன்வர வேண்டும். குருதி கொடுப்பதால் தமது உடலுக்கு ஆபத்து என்று எண்ணும் அறியாமையிலிருந்து நாம் அனைவரும் விடுபடவேண்டும்.



**வி.கே.ரவிகரன்-**
*(வயது - 36, ஆசிரியர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி)*

எமது கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் பொறுப்பாசிரியராக நான் செயற்பட்டு வருகின்றேன். அந்தக் கழகத்தின் ஊடாக 2002 ஆம் ஆண்டிலிருந்து இன்றைவரைக்கும் 712 பேர் குருதிக்

கொண்டிருக்கின்றோம்.

என்னைப் பொறுத்தவரை நான் ஒரு குருதிக்

-சந்திப்பு: கவிநேசன்-

கொடையாளரைத் தயார்ப் படுத்தினால் அந்தக் கட்டத்தில் அவர் இன்னொருவரைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படியானால்தான் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக் கையை அதிகரித்துக் கொள்ளமுடியும்.

எனது உடல் ஆரோக்கியமாக இருக் கும் காலம்வரை இந்தக் குருதிக் கொடைப் பணியினைத் தொடர்ந்து செய்து வரு வேன். இத்தகைய அளப்பெரும் சேவைக்கு உதவ அனைவரும் - குறிப்பாக இளம் சமுதாயம் முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்




மணிவண்ணன், தருண்கோபி, சீமான்,ராஜ்கபூர், சிங்கம் புலி, போன்ற பத்து இயக்குநர்களின் நடிப்பில் ராசுமதுரவனின் இயக்கத்தில் சபேஷ்முரளியின் இசையில் வெளி வந்துள்ளது 'மாயாண்டி குடும்பத்தார்' திரைப்படம்.

அண்ணன் தம்பிகளான மணிவண்ணனுக்கும் (மாயாண்டி), ஜி.எம்.குமாருக்கும் இடையே குடும்பப் பகை எழுந்து அவர்களின் சந்ததிகள்வரை அது நீடிக்கின்றது. மணிவண்ணனின் மகனான தருண்கோபி தன்னுடைய அப்பாவின் கனவை நிறைவேற்ற இஞ்சினியராக வர முயல்கிறார். தன் பிள்ளைகள் மீதும் தன்னோடு கோபம் கொண்டுள்ள அண்ணன் குடும்பத்தார் மீதும் பாசமழை பொழிகிறார் மணிவண்ணன். ஆனால் தன் தம்பியான மணிவண்ணன் குடும்பத்தோடு எப்போதும் மல்லுக்கட்டியபடியே வலம் வருகிறார் ஜி.எம்.குமார். இந்நிலையில் மணிவண்ணன் இறக்கிறார். அதன் பின்னர் அவரது குடும்பம் திசைக்கொன்றாய்ப் பிரிகிறது. அண்ணிகளின் தொல்லை தாங்கமுடியாது தத்தளிக்கிறார் தருண்கோபி. அவரது காதலும் கைகூடாமல் போகிறது. இந்நிலையில் அவர் தந்தையின் கனவை நிறைவேற்றினாரா ? பிரிந்திருந்த மாயாண்டி குடும்பத்தார் ஒன்று சேர்ந்தார்களா? என்பதை வெகு இயல்பாகச் சொல்கிறது 'மாயாண்டி குடும்பத்தார்' திரைப்படம்.

படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்றவர்கள் எல்லோருமே இயக்குநர்களாக இருப்பதால் வெகு இயல்பான நடிப்பைப் படம் முழுதும் பரவ விட்டுப் பார்வையாளர்களை லயப்படுத்துகிறார்கள். சபேஷ் முரளியின் இசை படத்தின் கதைக்கு இன்னும் கனதியாக அமைகின்றன. தன்னாலும் அழுத்தமான கிராமத்துக் கதை ஒன்றைக் கொடுக்க முடியும் என்பதைப் படத்தின் இயக்குநர் ராசுமதுரவன் நிரூபித்துள்ளார். நீண்டகாலத்தின் பின்னர் கிராமத்துச் சூழலில் பாசமழை பொழிகின்ற அருமையான காவியத்தைக் காணும்வாய்ப்பை 'மாயாண்டி குடும்பத்தார்' திரைப்படம் தமிழ் ரசிகர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.★

# பரிசு இதுதானா?



விஷால், சிம்பு ஆகியோரை வைத்து படம் இயக்கியவர் தருண்கோபி. விஷாலுக்கு மாபெரும் வெற்றியையும் சிம்புவுக்கு படுபாதாளத் தோல்வியையும் இவரது படங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன. இருந்தாலும் தனது படத்தில் நடித்த இரு கதாநாயகன்களினதும் வெறுப்பே தருண்கோபிக்குப் பரிசாகக் கிடைத்துள்ளது. அவர்களோடு கொண்டுள்ள கோபம் காரணமாகவே கதாநாயகனாக நடிக்க முடிவெடுத்தார் தருண்கோபி. இப்போது அவர் நடித்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'மாயாண்டி குடும்பத்தார்' திரைப்படத்துக்கெதிராக விஷாலும் சிம்புவும் சதி செய்வதாகப் புலம்புகிறார் தருண்கோபி.★

# எப்போது வரும்



பருத்தி வீரன் படத்தின் வெற்றிக்குப் பிறகு கார்த்திக் ஒப்புக்கொண்ட திரைப்படம் 'ஆயிரத்தில் ஒருவன்'. இது செல்வராகவனின் இயக்கத்தில் உருவாகிவருகிறது. ஆனால் செல்வராகவனின் மற்றைய படங்களைப் போலவே ஆயிரத்தில் ஒருவன் படமும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தும் இன்னும் படப்பிடிப்பு முடியாமல் நீண்டு கொண்டே செல்கிறது. ஒரு இளைய நடிகருக்கு இத்தகைய நீண்ட இடைவெளி பாதகமான விளைவை ஏற்படுத்தும் என்று கார்த்திக்கு அவரது அண்ணன் சூர்யா ஆலோசனை சொல்லியிருக்கிறார். எனினும் படம் எப்போது வெளிவரும் என்பது ஆண்டவனுக்கும் செல்வராகவனுக்கும் தான் தெரியும்.★

# மஞ்சள் வெயிலுக்கு அனுமதி




இதோ வருகிறது அதோ வருகிறது என நீண்டகாலமாகப் பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்த 'மஞ்சள் வெயில்' திரைப்படம் மிக விரைவில் திரையரங்குகளை வந்தடையவுள்ளது. பிரசன்னா, பாலா, சந்தியா ஆகியோரின் நடிப்பில் ஒரு முக்கோணக் காதல் கதையை மென்மையாகச் சொல்கின்ற இந்தப் படத்தில் முத்தக் காட்சி ஒன்றும் இடம்பெற்றிருந்தது. இது தணிக்கைக் குழுவினரால் வெட்டப்படும் சூழல் ஏற்பட்டபோது படத்தின்கதைக்கு குறித்த முத்தக் காட்சி எந்தளவுதூரம் முக்கியம் என்பதை இயக்குநர் விளக்கியுள்ளார். அதன்பின்னர் எவ்வித தணிக்கையும் இன்றி குறித்த முத்தக் காட்சியோடு திரைப்படத்தை வெளியிட இப்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ★



# ராஜேந்திரனுக்கு விருது



சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கத்தைச் சேர்ந்த நடிகர்கள், சென்னையில் உள்ள தென்னிந்திய நடிகர் சங்கத்தில் 'ராஜராஜ சோழன்' என்ற நாடகத்தை நடத்தினார்கள். அதன் பின்னர் 'சிங்கப்பூர் தமிழ் நாடக வரலாறு' என்ற நூல் வெளியிடப்பட்டது. அந்தக் நூலைக் கம்பன் கழகத்தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.எம்.வீரப்பன் வெளியிட அழகப்பன் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியின்போது இயக்குநரும் தயாரிப்பாளருமான முக்தார் சீனிவாசன், தென்னிந்திய நடிகர் சங்க இணைச் செயலாளர் கே.ஆர்.செல்வராஜ், தமிழரசன் தியேட்டர்ஸ் நாடகக் குழுவின் து.பாலசுந்தரம், செல்வி.தில்லை மனோகரி ஆகியோருக்கு "நாடக காவலர் விருது" வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் நடிகர் எஸ்.எஸ்.இராஜேந்திரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. முக்தார் சீனிவாசன் இதனை வழங்கினார். நலிந்த நாடகக் கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டது.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு தேவையான இத்தருணத்தில் நாம் உங்களுடன்

நீங்கள் எங்கு இருந்தாலும் உங்களது உடைமைகளைப் பாதுகாத்து, உங்களது முன்னேற்றத்திற்கு துணை நின்று, நிழல் போல் இருப்போம்

**அதுவே எங்களது தேசியப் பணி!**





**வவுனியா செட்டிக் குளத்தில் இப்போது 06 புதிய கிளைகள்**

1. கதிர்காமர்
2. ராமநாதன்
3. அருணாச்சலம்
4. ஆனந்த குமாரசுவாமி
5. 4ஆம் வலையம்
6. செட்டிகுளம் பிரதேச செயலகத் தகவல் பீடம்

வவுனியா, முல்லைத்தீவு, மாங்குளம் மற்றும் கிளிநொச்சி ஆகிய கிளைகளில் கணக்குகளை வைத்திருப்போரின் வங்கியியல் சேவைகளை புதிய 6 கிளைகள் மற்றும் 7 நடமாடும் சேவைகள் ஊடாக....




வெளிநாட்டு பண அனுப்புதல்களை துரிதமாக பணமாக்கல் மற்றும் அடகுச் சேவை வசதி.



24 மணி நேர ATM சேவை



இலவச பாதுகாப்பு பெட்டக வசதிகள்



பண்டங்களையும் சேவைகளையும் கடன் அட்டை மூலம் நுகரும் வசதி

உள்நாட்டு வெளிநாட்டு உறவினர்கள் உங்களுக்கு அனுப்பும் பணங்களைப் பற்றி விபரம் அறிய 24 மணித்தியால அழைப்பு நிலைய (Call Centre) வசதி
தொலைபேசி இல: 011 2204444



**அன்றும்... இன்றும்... என்றும்...**
**உங்களுக்காக எமது சேவை நிச்சயம்..!**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

ஏழு தசாப்தங்களின் அபிமானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது பாகிஸ்தானில்?

மருதன்

அண்ணாந்து பார்த்தால், போர் விமானங்கள் பறந்து செல்வதைக் காண முடிகிறது. பார்க்கும்போதே குண்டுகள் பாய, பெரும் சத்தத்துடன் நெருப்புக் குழம்பு வெளிப்பட்டு, குடியிருப்புகள் சிதறடிக்கப்படுகின்றன. இரவு முழுவதும் இயந்திரத் துப்பாக்கிகளின் இரைச்சல். எங்கெங்கும் மரண ஓலம்.

பாகிஸ்தான் டாங்கிகள் உருண்டு வருகின்றன. தலிபான் தினம் ஓரிடம் தேர்வு செய்து, குண்டு வைக்கிறது. இடையிடையே அமெரிக்க ஹெலிக் கொப்டர்கள் வந்து போகின்றன. அல் கொய்தா என்று யாரோ முணுமுணுக் கிறார்கள். எப்போது வேண்டுமானாலும் பாகிஸ்தானை கைப்பற்றி விடுவார்கள் என்று பயமுறுத்தல். என்னதான் நடக்கிறது பாகிஸ்தானில்?

கிட்டத்தட்ட 24 மணி நேரத்தில், 20 லட்சம் மக்கள் ஸ்வாட் பள்ளத்தாக்கில் இருந்து மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறி இருக்கிறார்கள். பெஷாவர் நகரில் கிட்டத்தட்ட நெருக்கடி நிலை. லாகூரில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 24 பேர் இறந்தனர். இஸ்லாமாபாத்தில் பதற்றம். எந்தப் பக்கம் திரும்பினாலும் இராணுவ வீரர்கள்.

ஏப்ரல் மாதம் தொடங்கிய போர் இது. அமெரிக்கா தன் விரலை நீட்டும் இடத்தில் இராணுவத்தைக் குவித்தது பாகிஸ்தான். தாக்கு என்றால் தாக்கினார்கள். போடு என்றால், குண்டு போட்டார்கள். செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு புஷ் ஆரம்பித்து வைத்த தீவிரவாதத்துக்கு எதிரான சர்வதேசப் போரில் இது இன்னும் ஓர் அத்தியாயம். டார்கெட் அல் கொய்தா மற்றும் தாலிபான் ஆப்கானிஸ்தானில் தான் முதலில் ஆரம்பித்தார்கள். அப்படியே ஆப்கன் - பாகிஸ்தான் எல்லைக்கு நகர்ந்தார்கள். இப்போது, பாகிஸ்தான்.

ஸ்வாட் பள்ளத்தாக்கில் தலிபான்கள் பரவியிருக்கிறார்கள் என்னும் செய்தியின் அடிப்படையில் பாகிஸ்தான் இராணுவம் அங்கே குவிக்கப்பட்டது. முழுவீச்சில் தாக்குதலும் ஆரம்பமானது. மே முதல் வாரத்தில், கிட்டத்தட்ட 750 தலிபான்களை அழித்து விட்டதாக பாகிஸ்தான் அறிவித்தது. எல்லா வேலைகளையும் பாகிஸ்தானிடமே ஒப்படைத்து விடவில்லை அமெரிக்கா. இந்த மாதத் தொடக்கம் முதல் 2,000 தொன் எடையுள்ள வெடிகுண்டுகளை ஆப்கானிஸ்தான் மீது வீசி இருக்கிறார்கள். ஜனவரி 2006 தொடங்கி 60 தாக்குதல்களை அமெரிக்கா நடத்தி இருக்கிறது. அவற்றில் 10 மட்டும்தான் அல் கொய்தா இருப்பிடங்களைத் தாக்கியுள்ளன. கொல்லப்பட்ட அல்கொய்தா நபர்கள் 14 பேர். இறந்து போன பாகிஸ்தானியர்களின் எண்ணிக்கை 687. (இவர்களுள் 160 பேர் ஒபாமா பதவியேற்ற பிறகு இறந்து போனவர்கள்). அதாவது 50 சிவிலியன் களைப் பலி கொடுத்து ஒரு தீவிரவாதியைக் கொன்றிருக்கிறார்கள்.





பாகிஸ்தான் தொடுக்கும் போர், அமெரிக்கா தொடுக்கும் போர் இரண்டும் தலிபான்களைச் சூடேற்றியிருக்கிறது. அதன் எதிரொலி தான் பொலிஸ் அகாடமியில் மார்ச் மாதம் நடத்தப்பட்ட தாக்குதல்; அதன் எதிரொலிதான் லாகூர் தாக்குதல்; அதன் எதிரொலி தான் ஸ்வாட் கொந்தளிப்பு. லாகூர், இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, முல்டான் ஆகிய பகுதிகளில் உள்ள அரசாங்க மையங்களை அடுத்தடுத்த தினங்களில் தாக்கப்போகிறோம் என்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். ஆப்கானிஸ்தான் பிரதமர் அமித் கர்ஸாய்க்கு மரண தண்டனை விதித்திருக்கிறார்கள்.

ஒரு பக்கம் அமெரிக்க விமானங்கள், மற்றொரு பக்கம் பாகிஸ்தான் இராணுவம். இவர்கள் இருவரையும் ஒழித்துக்கட்டும் நோக்கத்துடன் எதிர்த் தாக்குதல் நடத்தும் தலிபான்கள். மூவரிடமும் மாட்டிப் பிதுங்கிக்கொண்டு இருக்கிறார்கள் பாகிஸ்தான் மக்கள். பஷ்டூன் பழங்குடி மக்கள் வாழும் பிரதேசங்கள் கொந்தளிக்கின்றன. அமெரிக்கப் படைகள், பாகிஸ்தானியப் படைகள் இரண்டையும் எதிர்க்க இவர்கள் முடிவு செய்துவிட்டார்கள். பாகிஸ்தானின் தயவில் இருப்பதால்தானே இத்தனை பிரச்சினை? நமக்கென்று தனிநாடு உருவாக்கிக்கொள்வோம். இஸ்லாமிய பஷ்டூனிஸ்தானை எங்களுக்குப் பிரித்துக்கொடுத்து விடுங்கள்.

இதற்கிடையில், பொருளாதாரப் பிரச்சினைகள். வேலையிழப்புகள். விலைவாசி மேலே மேலே ஏறிக்கொண்டே இருக்கிறது. பாகிஸ்தானின் பொருளாதாரம் ஆட்டம் காண்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். அமெரிக்காவின் முதலாவது கவலை தீவிரவாத ஒழிப்பு. இரண்டாவது, பாகிஸ்தான் வசம் உள்ள அணு ஆயுதங்கள் குறித்த கவலை. இஸ்லாமிய இயக்கத்தைச் சேர்ந்த சிலர் பாகிஸ்தான் இராணுவத்துக்குள் ஊடுருவியிருக்கிறார்கள் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இவர்கள் வசம் இராணுவம் முழுவதுமாகச் சென்றுவிட்டால், அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்து பாகிஸ்தான் முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டுவிடும்.

அமெரிக்காவின் கவலைதான் இந்தியாவின் கவலையும். பாகிஸ்தானின் அண்டை நாடு. எதிரி நாடும்கூட. தவறான குழுக்களிடம் அணு ஆயுதம் சென்றுவிட்டால்?

உண்மையில், நடுத்தெருவில் நிற்கும் பாகிஸ்தான் மக்களுக்காகக் கவலைப்பட எங்கும், யாரும் இல்லை என்பதுதான் அடிப்படை உண்மை! ✱

---

# தந்திரக்காரி...!



சோனியா



மீராகுமார்

இந்திய மக்களவை சபாநாயகராக மீரா குமார் ஏக மனதாகத் தேர்வு செய்யப்பட்டதைப் பார்த்து, அரசியல் நோக்கர்கள் ஆச்சரியக் குறியாகி விட்டனர்.

2004 இல் தனக்கு 'வெளிநாட்டுக் காரி' எனப் பட்டம் சூட்டிய பி.ஏ.சங்மா வின் மகளுக்கு மத்திய அமைச்சர் பதவி கொடுத்துப் பார்த்த சோனியா..., அரச வீட்டுக்காக தன்னை எதிர்த்து பி.ஜே.பி. பக்கம் சாய்ந்த மீரா குமாரை இப்படி உயர்த்தி வைத்துப் பதவி கொடுத்திருக் கிறார்.

சோனியாவின் இந்த தந்திரோபாயப் பார்வையைப் புரிந்துகொள்ள முடியாமல் டில்லியின் பெரிய தலைவர்கள் தவிக் கிறார்கள்!

அதென்ன மீராவின் வீடு கதை? மீரா குமார் 1999 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோற்றார். பின்னர் பி.ஜே.பி. ஆட்சிக்கு வர, மீரா குடியிருந்த கிருஷ்ண மேனன் மார்க் வீட்டை காலி செய்யுமாறு அரசு நெருக்கடி கொடுத்தது. 'காங்கிரஸை விட்டு விலகி எங்களிடம் வந்தால் அந்த அரசு வீட்டில் தொடர்ந்து வசிக்கலாம். மேலும், உங்கள் தந்தை பாபு ஜெகஜீவன் ராம் வசித்த இல்லத்தை அவருடைய நினைவு இல்லமாகவும் மாற்றுவோம்' என பி.ஜே.பி. நிபந்தனை போட்டதாகத் தகவல்கள் உண்டு.

சிரித்த முகமாகவே இருந்து பழக்கப் பட்ட மீரா, சோனியாவுக்கு எதிராக பகைக் கொடி பிடிக்க ஆரம்பித்தாராம். 2002 வரை பி.ஜே.பி. கூட்டணியில் இருந்து காங்கிரஸுக்கு எதிராகப் போராடிய மீரா, பி.ஜே.பியில் தன்னை மதிக்கவில்லை எனக் கூறி மீண்டும் காங்கிரஸில் இணைந்தார்.''

சோனியாவுக்கு எதிராகக் கொடி பிடித்த சங்மாவும் தன் மகளுக்கான இந்த மரியாதையில் நெகிழ்ந்து கிடக்கிறாராம். கடந்த வாரம் சோனியா காந்தியின் வீட்டுக்கே வந்து தன் மகனின் திருமணத்துக்கு அழைப்பு விடுத்தார் சங்மா. இப்போது டில்லி அரசியல் புள்ளிகள் சோனியாவை 'சூப்பர் பொலிட்டிக்கல் இன்ஜினீயர்' என்றுதான் விளிக்கிறார்கள்!

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஐ.எவ்.எஸ் அதிகாரியான மீரா குமார் பல்வேறு நாடுகளில் பணியாற்றினார். அவருடைய தந்தையின் செல்வாக்கில் பிரிட்டன் நாட்டில் தூதுவராகவும் இருந்தார். தன்னுடைய மூத்த சகோதரர் சுரேஷின் மறைவுக்குப் பிறகுதான் அரசியலுக்கு வந்தார்.

1985 இல் உ.பி. பிஜ்னோர் தொகுதி இடைத்தேர்தலில் மீராகுமார் போட்டியிட்டார். அவரை எதிர்த்து நின்ற மாயாவதி மற்றும் ராம்விலாஸ் பஸ்வான் போன்ற தலித் தலைவர்கள் மீரா குமாரிடம் தோற்றார்கள். இப்போது மீண்டும் உத்தரப் பிரதேசத்தில் மாயாவதிக்கு எதிராக அரசியல் காய்களை நகர்த்தும் வியூகத்தின் ஓர் அங்கமாகத்தான் அவரை சபாநாயகராக்கி உ.பி. தலித்களை சோனியா ஜில் பண்ணியிருக்கிறார் என்றும் சொல்கிறார்கள்.

மீரா குமார் தலித்தாக இருந்தாலும், பல வருடங்களாக அதிகாரத்தை அனுபவித்த குடும்பத்துக்காரர். அதே நேரம், ஆந்திராவில் இருந்து 1972-ல் எம்.எல்.ஏ. ஆன பெண்மணி ஒருவரைப் பற்றி இப்போது ஆதங்கக் குரல் கேட்கிறது. பழங்குடி இனத்தைச் சேர்ந்த அந்தப் பெண்மணிக்கும் இப்போது மீரா குமார் போலவே 64 வயதுதான். ஆனால், ஒரே வித்தியாசம்... இந்திரா காந்தியால் பாராட்டப் பெற்ற அந்த முன்னாள் பெண் எம்.எல்.ஏ., இன்று ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் 60 ரூபாய் தினக்கூலிக்கு கட்டட வேலை செய்துவருகிறாராம்! 'அவருக்கும் ஒரு மரியாதை செய்ய வேண்டாமா காங்கிரஸ்?' என்பதுதான் இப்போது ஆந்திர காங்கிரஸில் வீசும் ஆதங்க அலை! ✱

நன்றி: விகடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுகைத்தொழில்களுக்கு மூலப் பொருள்களாகும் பயிர்கள், மரங்கள் வளர்த்தால் இரட்டிப்புப் பயன்

சிறிய கைத்தொழில்கள் தேச அபிவிருத்தியின் அத்திபாரக் கற்கள். சிறிய கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது மக்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாய் இருப்பதுடன், எமக்குத் தேவையான பொருள்களின் கிடைத்தன்மையையும் உள்ளூரில் பெருக்கக்கூடிய வாய்ப்பாகிவிடும். அதிலும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உருவாகும் சிறிய கைத்தொழில் முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினதும் நிறைந்த ஆதரவு பக்கபலமாக இருக்கவேண்டும். உள்ளூர் வளங்களைச் சூழலின் கட்டமைப்பில் பாதிப்பு ஏற்படாவண்ணம் அதியுச்சமாகப் பயன்படுத்தும்போது உள்ளூர் உற்பத்தி பெருகுவதுடன் பொருளாதாரத்தில் மலினப்படுத்தப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார விருத்தி ஏற்படவும் வழிபிறக்கும். இவ்வாறாக வேளாண்மையுடனான கைத்தொழில் முயற்சிகளை இனங்காண்பதும் அவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான உந்துதலாகவே இக்கட்டுரை அமைகின்றது. படித்தவர், நிர்வாகிகள் மட்டத்தில் இவ்வாறான கைத்தொழில் முயற்சிகளுக்கு அதிகமான வரவேற்பு இல்லாதிருப்பினும், அடித்தள மக்களுக்கு இது ஒரு ஜீவாதாரத்தைக் கொடுக்கும் - சுயமான தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரும்- ஒரு வரப்பிரசாதமாகவும் அமையும் என்ற நம்பிக்கையுடன் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

**1. நார் உற்பத்தி**

அன்றாடம் எமது பண்பாட்டுக்காக நைலோன் நார்களை,கயிறுகளை நம்பியிருக்கும் காலத்தில் இருந்து கொண்டு இவ்வாறான நைலோன் கயிறுகளை நைலோன் நார்களைப் பயன்படுத்தும் தன்மையில் இருந்து மெல்ல மெல்ல விடுபட்டு சேதன முறையில் இருந்து பெறப்படும் நார்களுக்கு முக்கியத்துவத்தை அதிகரிக்கலாமே. இதன்மூலம் யாழ். குடாநாட்டில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் ஏனையோருக்கு முன்னுதாரணமாக விளங்க இயலும். இயற்கையாக நார் உற்பத்தி செய்வதற்காக பல்வேறு பட்ட தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத் தாவரங்களைப் பெருக்கி சிறந்த பயன்பாட்டை பெறலாம் எனப் பலர் என்னுவதை - குறிப்பிட்டு கூறியதை- மையப்படுத்தி விபரிக்கப்பட்டுள்ளது.

**2. தென்னம் நார் தும்பு**

தென்னையில் இருந்து பெறப்படும் நாரின் (தும்பின்) உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.தூய்மையான சிறந்த நாரைப் பெறுவதற்கான தொழில் நுட்பத்தினை உள்வாங்கி, இந்நாரில் இருந்து பல்வேறுபட்ட பொருள்களின் உற்பத்திக்கு வழிசமைக்கலாம். தென்னம் தும்பில் இருந்து பல்வேறுபட்ட பொருள்களை உற்பத்தி செய்யவும் ஊக்கிவிக்க வேண்டும். தென்னந்தும்பு பிரித்தெடுத்தலின்போது திண்மக் கழிவாகப் பெறப் படும் "சோத்தி" என்னும் உக்காத பொருளை இலகுவில் உக்க வைக்க வழிசெய்தல் நல்லதல்லவா!

ஒவ்வொருவர் இல்லத்திலும் சேதனப் பொருள்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் இக் கைத்தொழிலுக்கு நாம் ஒவ்வொருவரும் பக்கபலமாக அமையலாம். திண்மக் கழிவுகளை மீள் சுழற்சி செய்து மீளப் பயன்படுத்தும் நிலை கனிந்து வரவேண்டும்.

மேலே குறிப்பிட்ட தும்பு பிரித்தெடுத்த பின்பு வரும் "சோத்தி" என்னும் பொருள் (அதனைச் சக்கை என்றும் குறிப்பிடுவார்கள்) நீரை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மையுள்ளதாகையால் அதனை ஓரளவுக்கு உக்க வைத்து சாடித் தாவரங்களுக்கான கூட்டுப்பசளையுடன் கலந்து வைத்தால் சாடித் தாவரங்களுக்குத் தேவையான நீரை மெல்ல மெல்லக் கொடுக்கும் வழிமுறைக்கு உகந்ததாக்கிக் கொள்ளலாம். இச் சோத்தியில் இருக்கும் 'காபன் நைதரசன்' விகிதமான 121:1 ஆனது இதனை இலகுவில் உக்கவிடுவதில்லை. இதற்காக உணவாகப் பயன்படும் சிற்பிக் காளானைப் பயன்படுத்தி இந்த விகிதத்தை 24:1 ஆகக் குறைக்க முடியும். இதற்கென வொரு பெரிய தொழில்நுட்பம் தேவையில்லை. சோத்திப் பொருளையும் காளான் வித்தையும் நாம் குழல் பிட்டு செய்யும் அதே அடுப்படி தொழில்நுட்பத்தில் ஒரு படை "சோத்தி" அதன் மேல் ஒரு படை காளான் வித்து பின்னர் ஒரு படை சோத்தி இவ்வாறு மாறி மாறி படைகளாகப் போட்ட பின் பொலித்தீன் பையினால் மூடி 3 கிழமைகள் அப்படியே வைத்திருந்த பின் பொலித்தீன் பையை அகற்றினால் காளான் பூஞ்சனத்தின் வளர்ச்சியினால் சோத்தி உக்கி காபன் நைதரசன் வீகிதம் 121:1 இலிருந்து 24:1 ஆக காபன் வீதம் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கும். இப்போது இந்த ஓரளவுக்கு உக்கிய சோத்தி சிறந்ததொரு தாவரம் வளரும் ஊடகமாக மாறிவிடும். பூங்கன்றுகள், மரங்களைப் பதிவைக்கும் எங்களூரவர்களுக்கு இது ஒரு இனிப்பான செய்தி. தாவரங்களைப் பராமரிப்பதும் சுலபம்.

தென்னந்தும்பு உரிய தேவைக்கு பயன்படுத்தும்போது அதிலிருந்து கழிவாக வரும் இச் சோத்தியை மெல்லச் சிறிதேனும் உக்க வைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**சணல்- தண்டிலிருந்து நார் தரும் அவரைப் பயிர்**

சணல் ஒரு அவரைக்குடும்பத் தாவரமாக இருப்பதனால் 50 வீதம் பூத்திருக்கும் வேளையில் மடித்து வயலிலேயே உழும் போது அது இழுத்துப் பிடித்திருக்கும் தழைச்சத்தை மண்ணினுள் நிலைநாட்ட உதவியாய் இருக்கும். இதற்காகவே சணல் பயிரை பசுந்தாள் பசளையாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் தரிசு நிலத்தில் இதனைப் பயிர் செய்து இதனது தண்டிலிருந்து சணல் நாரை பெறமுடியும். சாக்கிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய சணல் நாரினால் சாக்கு மற்றும் வேறு பொருள்களை உருவாக்கிக் கொள்ள முடியும். கட்டுவதற்கும் சணல் நூலைப் பயன்படுத்தலாம். பிளாஸ்ரிக் கயிறுகளின் பாவனையைக் குறைக்க சணல் உற்பத்தியும், நாரும் பெரிதும் கைகொடுக்கும். இலகு தொழில் நுட்பத்தை வைத்துக் கொண்டு அங்குமிங்கும் வேலைக்காக அலைவது ஏன்? நார் பிரித்தெடுக்கும் தொழிலைக் குடும்ப விருத்திக்கான பயிர்ச் செய்கையாக மாற்றிக்காட்டலாம். நாரும் கிடைத்ததாயிருக்கும்.

**தாழை- இலையிலிருந்து நார்**

வயல்களிலே வரம்புகளில் தாழையை வளர்க்கலாம். தரிசுக் காணிகளிலும் வளர்க்கலாம். தாழை இலைகளை வெட்டி ஒன்றாகக் கட்டி குளத்திலோ அல்லது ஏதாவதொரு நீர் நிலையிலோ உக்குவதற்காகப் போட்டுவிட வேண்டும். ஏறக்குறைய 1-11/2 மாதங்கள் வரை நீருக்குள்ளே இருந்து உக்கிய பின் அந்த இலைக்கட்டினை அந்தக் குளத்து நீரிலே வீசிறியடிக்க வேண்டும். நீரில் அடிக்கும் போது உக்கிய இலை கிழிந்து இலைநார் சுலபமாக பிரிந்துவிடும். இவ்வாறாகப் பெறப்படும் இலை நாரைப் பல தேவைகளுக்குப் பயன்படுத்தலாமே. வெறும் காணிகளில் நடவு செய்துவிட்டால் பின்னர் பராமரிப்பு எதுவும் தேவையில்லாததும் சிறந்த நாரைத் தரக்கூடியதுமான தாழையை வளர்த்து பயன் பெறலாம் அல்லவா.

**வாழைமடலில் இருந்து நார்**

வாழை மடலில் இருந்து மென்மையான நாரைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துவதை ஊக்கிவித்தல் நல்லது. இந்நாரைத் தகுந்த முறையில் பிரித்தெடுத்தால் பொருள்களைச் சுற்றிக் கட்டுவதற்கும் வேறு பல தேவைகளுக்கும் பயன் படுத்தலாம். வாழைமடலில் இருந்து நிகழ்வுகளில் அணியும் 'பாட்ஜ்'கள், நார்ப் பொருள்கள் எனப் பலவிதமான உபயோகத்தைப் பெறலாம். பனையிலிருந்து பெறப்படும் நாரையும் பிரயோசனப்படுத்திக் கொள்ள இயலும்.

இவற்றைவிட இந்தியாவிலே குறிப்பாகத் தமிழ்நாட்டிலே ஜூற் (Jute) மெஸ்தா (Mestha) ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டு தண்டிலிருந்து நார்பெறும் நிலையில் எங்களூரில் நார் பெறுவதற்கான இப்பிரதேசத்தில் வளரும் தாவரங்களை இனங்காணவேண்டும். இதற்கு அனைவரும் உதவமுடியும். உள்ளூர் வளங்களைச் சரியாக இனங்கண்டு மக்களை வளம் பெறச் செய்வதுடன் தேச அபிவிருத்தியிலும் இதன் மூலம் இணைந்துகொள்வோம்.



***

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## இயற்கை தந்த வளங்களைத் தக்கவாறு எமதாக்குவோம்

# துன்பம் உங்களைத் தொடராதிருக்க ஆசைகளைக் குறையுங்கள்!

மனிதன் பிறக்கும்போது இருந்த குணம் வாழும்போது மாறுகிறது. ஆசை வெள்ளத்தில் அவன் அலைகடல் துரும்பாகின்றான். விகாரத்தின் நிலத்தில் எண்ணத்தைப் பயிரிட்டு துன்பத்தை அறுவடை செய்கின்றான். அலை பாயும் எண்ணத்தால் கடிவாளமற்ற மனக்குதிரையை அடக்க முடியாது. வாழ்வின் பயணத்தில் வெற்றியும் தோல்வியும் நிலையானதென நினைத்து நிதம் துடிக்கின்றான். அழியும் உடலுக்கு அலங்காரமிட்டுக் கை நழுவும் பொருள் நிலையென எண்ணிக் கணக்கு வழக்கில் கவலையைக் குவித்து, நிம்மதி தொலைத்து வாழ்க்கையை அமைதிப் பூங்காவில் இருந்து, தானே தூரத் துரத்தித் தவிக்கின்றான். கானல் நீரில் நீராடிக் கவலையைக் கழுவிவிட நினைக்கின்றான். அதனால் துன்பத்தின் பக்கங்கள் தொடர் கதையாகி அதுவே விடியலற்ற இரவாகி வெளிச்சத்தைக் காணமுடியாது,மன அழுத்தம் நிறைந்த கைதியாகித் தண்டனையைத் தானே தனக்குத் தீர்ப்பளித்து வாழ்கின்றான். அமைதியைத் தொலைத்த மனிதன் தான் தேடிய பாவத்தின் சுமையை வேறு எவரிடமும் கொடுக்க முடியாது. இப் பரந்த பூமியில் இறக்கி வைக்கவும் முடியாது. அடுத்தடுத்த பிறவி வரை சுமந்து கொண்டே செல்கின்றான்.

அந்தவகையில் மேன்மேலும் ஆசையின் விளைவால் துன்பச் சுமையைக் கூட்டிக்கொண்டே போகும் மனிதன் இறுதியில் களைத்துப் போன பின் "ஓ.... கடவுளே கருணையே இல்லையா உனக்கு" எனக் கதறுகின்றான். மீளமுடியாத துன்பத்தில் இருந்துகொண்டு இறைவன் தனக்குக் கருணை காட்டவில்லையே என சம்மந்தா சம்மந்தமின்றி இறைவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றான். இறைவனைப் பிச்சைக்காரனாக்கி அவனுக்கு அது செய்வேன், இது தருவேன் எனப் பேரம் பேசுகின்றான். இவற்றுக்கெல்லாம் யார் பொறுப்பு. இறைவனா? இல்லையே. இறைவனால் என்ன செய்ய முடியும்? இந்த நாடகத்தை அவனால் கூட நிறுத்த முடியாதே.

அமைதியை அடைய அமுத மொழிகள் எத்தனை வழி காட்டிய போதிலும் ஆசையை விட மனித மனம் தயாரில்லையே. மனதின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்திட வீணான எண்ணச் சுமைகளால் தானே கட்டிய மாலையைத் தனக்குப் போட்டுக் கொண்டு சுமக்க முடியாது சக்தியை இழந்து தவிக்கின்றான். அவனுள்ளே இருக்கும் மனக் கோட்டைக்குள் அழகான அமைதியை அகற்றிவிட்டு அழுக்கான துன்பத்தை நிரப்பித் தானும் இருக்க முடியாது தவிக்கின்றான்.

மனிதர்கள் அக நோக்கம் கொண்டு மனதின் ஆழத்தை அறிய உள்நோக்கிய பயணம் மேற்கொள்ள முயற்சிப்பதில்லை. அதுவே வாழ்வின் தோல்வியாக மரணத்தின் போது நிரந்தரமாக எழுதி வைக்கப்படுகின்றது என்பதை ஏற்கத் தயங்குகின்றார்கள். எழுதிச் செல்லும் விதியின் கை எழுதிய வழியே செல்லும் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். பிறப்பறுக்கும் இறைவனை அகத்திலிருந்து அகற்றிவிட்டு ஆணவத்தைக் குடியிருத்தி விஷச் செடியை வளர்த்தெடுக்கின்றான். அறுவடையின் போது மட்டும் கலங்கித் தவிக்கின்றான்.

அறுவடை என்பது நாடகமொன்று மேடை ஏறுவது போன்றது. ஒரு நாடகத்தை நடிப்பதற்கு, அதனை அரங்கேற்றுவதற்கு எத்தனை முறை நாம் பயிற்சி எடுக்கின்றோம். பயிற்சிஇன்றி ஒரே நாளில் மேடையில் தோன்றி நடிப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று. எல்லோருக்கும் திறமை இருக்காது. அதுபோன்றே இறந்த காலத்தில் துன்பத்தை, துயரத்தை, காம குரோதத்தை பயிற்சி செய்திருந்தால் அதனையே நிகழ்காலத்தில் தற்போது நடிக்க முடியும். உங்களது பாத்திரத்தைத் திறம்பட, அழகாக நடிக்க உங்களால் மட்டும்தான் முடியும். காரணம், கடந்த காலத்தில் பயிற்சி எடுத்தவர்கள் நீங்கள் அல்லவா?

ஆகவே ஆசையைத் துறப்பதற்கும் துன்பத்தைக் குறைப்பதற்கும் பயிற்சி எடுத்தல் வேண்டும். அப்போதுதான் நல்லதொரு அறுவடைக்காகக் காத்திருக்க முடியும். நிகழ்காலம் என்பது இறந்த காலத்தின் பயிற்சிகளே. அதனால் அசாதாரணமாகப் பிறப்பதற்கும் காரணம் நீங்கள்தான். நீங்கள் எடுத்துக்கொண்ட பயிற்சிகளே அவை. ஆகையால் கடந்த காலத்திற்காக வருந்துவதிலும் பார்க்க நிகழ்காலத்தில் சரியாகப் பயிற்சி எடுப்பதே சிறந்தது. கடந்த காலம் திரும்பக் கிடைக்கவும் மாட்டாது. திருத்தி அமைக்கவும் முடியாத ஒன்று. நிகழ்காலம் ஒன்றே நிச்சயமானது. அது வருங்காலத்திற்கான வாயிற்கதவு. எனவே நிகழ்காலத்தில் எதனைப் பயிற்சி எடுக்கப் போகிறீர்கள், எதை விதைக்கப் போகிறீர்கள். துன்பத்தையா? குரோதத்தையா? காமத்தையா? பாசத்தையா? அன்பையா? தீர்மானிப்பது நீங்களே. தீர்ப்பு எழுதுவதும் நீங்களே. எதிர்காலத்தில் நடிக்க இருப்பவர்களும் நீங்களே. நிகழ்காலத்தில் நன்றாக ஓட ஆரம்பியுங்கள். வருங்காலத்தில் இலக்கு நிச்சயம் வெற்றியைத் தரும். எது நடந்ததுவோ.... எது நடக்கிறதோ.... எது நடக்க இருக்கிறதோ எனும் கீதையின் வாக்கியமும் அதையே கூறுகின்றது.

கணனி ஒன்றில் சேமித்து வைத்ததைத் தான் திரும்பப் பெற முடியும். கணனியில் தெரிவு செய்வதற்கும் சேமித்து வைப்பதற்கும் தெரிவுகள் ஏராளம் உண்டு. ஆனால் கடந்த காலத்தில் எதனைச் சேமித்தீர்களோ அதனையே நிகழ்காலத்தில் திரும்பப் பெறமுடியும். கணனி உபயோகிப்பவர்கள் இதனை நன்கு அறிவர். அதுபோன்றதே நம் உடலும். நிகழ்காலத்தில் நடப்பது ஒன்றே நிச்சயம். அதுவே வாழ்வின் இரகசியமும் கூட. உங்களது உடல் எனும் கணனியில் நல்லவற்றைச் சேமித்து வைத்துப் பாதுகாப்பதற்குப் புறச்சூழலால் ஏற்படும் வைரசுக்கள் உட்புகா வண்ணம் காத்துக்கொள்வதும் நீங்களே.

தியானம் செய்வதன் மூலம் மாயை என்னும் வைரசு உங்கள் மனம் என்னும் கணனிக் கோட்டைக்குள் உட்பிரவேசிப்பதைத் தடுக்கமுடியும். ஆசையைக் குறைக்க முடியும். அதனால் துன்பத்தைத் துரத்த முடியும். தூய்மை அடையும் பக்குவம் கிடைக்கும். இறைவன் அருகிருக்கும் வாய்ப்புக் கிடைக்கும். இறையொளி பெருகும். நாஸ்திகம் எனும் இருள் மறையும். அன்பு செலுத்தும் ஆற்றல் பெருகும், அதனால் இன்பம் பெருகும்.எனவே நிகழ்காலத்தில் நல்லனவற்றைப் பயிற்சி எடுப்பதற்குத் தியானம் கைகொடுக்கும்.

ஆகையால் மனம் என்னும் கணனிக் கோட்டைக்குள் நம்மை பலவீனப்படுத்த உள்நுழையும் வைரசுகளை இனம் காண்பது ஆரோக்கியமானதல்லவா? அது அவசியமானதும் ஆகும். அவற்றில் காமம், குரோதம், பற்று, கோபம், அகங்காரம், வசீகரிக்கப்படுதல், உழைச்சல் எனப் பல ரக வைரசுகள் உண்டு. அவற்றின் ரகங்கள் பலவாயினும் பாதிப்பது மனதை மட்டும்தான். அவை யாவற்றையும் பஞ்சபூதத்தாலான நம் உடலால் கட்டுப்படுத்த முடியும். அவற்றை வடித்தெடுத்து உள்நுழைய விடாது தடுக்கும் ஆற்றல் நம்மிடம் இருக்கும் பொழுது கணனியை உற்பத்தி செய்தவன் போல் இருக்கும் இறைவனைக் குற்றம் சொல்ல முடியுமா?

காமத்தை எடுத்துக் கொண்டால் கண்களுக்குக் கட்டளை இட அது தடுக்கப்படும் இல்லையா? அது போன்றே கோபத்துக்கு எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இருந்தால் கோபத்தைத் தடுத்துவிட முடியும். அகங்காரமும் உன்னால் வளர்த்தெடுக்கப்படும் விசச்செடி என்னும் வைரசு ஆகும். அது மற்றவர்கள் முன் உன்னை உயர்வாக எண்ண உனக்குக் கற்றுத்தரும். அதே வேளை அது நன்றாக வளரும் பொழுது மற்றவர்கள் முன் உன்னை வெறும் இழிந்த நிலைக்குத் தள்ளி வைக்கும் ஆற்றல் கொண்டது.

இவ்வாறு பல வைரசுகள் இருந்த போதும் மனிதன் தியானம் ஒன்றை மட்டும் கைக்கொண்டுவருவானாகில் எந்த வைரசாலும் அவன் மனதை எதுவும் செய்துவிட முடியாது. *****



ச.நடராஜா,
இலங்கை வங்கி, யாழ்.கச்சேரிக்கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவமான அடிமைகள்...

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

காரியாலய வாசலில் அமர்ந்திருந்த பியூனின் கழுகுப் பார்வை மட்டும் முனியாண்டியில் நங்கூரமிட்டு நிற்கின்றது.

முனியாண்டி, முப்பதைத் தொட்டு நிற்கும் வயது. மலைக்கல்லில் விழுந்து, சூரிய வெக்கையில் வெதும்பி, பட்டும் படாமலும் கருகிப் போன தேயிலைத் தளிர்போல, வாலிப 'மதகளிப்புகள்' கருகிப் போன, மெலிந்த கறுத்த உடல்; முன்னோக்கி வளர்ந்த தலைமயிர். தடித்த மீசை, வெள்ளைச் சாரம், கோடன் சேட்.

அவனது கண்களில் மட்டும் தனித்துவமானதொரு கூர்மை, எதையுமே ஊடுருவிப் பார்க்கின்ற நிதானம். எதையுமே சுலபமாகவும், விரைவாகவும் புரிந்து கொள்வான்.

அதே நோக்கில் எதையுமே பெரிசுபடுத்திக் கொள்ளவும் மாட்டான். அதிகம் பேசவும் மாட்டான். அப்படிப் பேசினானென்றால், பேச்சைக் கேட்பவர்கள் திரும்பிக் கேள்வி கேட்க முடியாதளவிற்கே பேசுவான்.

முனியாண்டி கீனாகலைத் தோட்ட மண்ணில்தான் பிறந்தான். இவனது பெற்றோருக்கு இவன் தனிப்பிள்ளை. அதனால் செல்லப் பிள்ளையாகவே வளர்ந்தான். இவன் தோட்டப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று ஏற்பட்ட இனக் கலவரத்தில் இவனது தகப்பன் இறந்து போனான்.

அதன் பின்பு, தாயின் அரவணைப்பு.

சிறுகச் சிறுக வறுமையுணர்வுகளின் தாக்கம்.

அவனது பன்னிரண்டாவது வயதில் இவனைப் பெற்றவளும்.

அதன் பின்பு - அப்பகுதி கிறீஸ்தவ ஆலயப் பாதிரியார் இவனைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது அப்பாதிரியார் இடமாற்றலாகிப் போக-

அப்பாடசாலை அதிபர் இவனை ஏற்றுக்கொண்டார்.

மாதா, பிதா, குரு என வரிசைப்படுத்திக் கூறுவார்கள். மாதாவும் பிதாவும் மரித்துவிட்டனர். குரு, அந்தத் தலைமை ஆசிரியர் அவனது படிப்பை நிறுத்தி, தனது பிள்ளைக்குத் 'செவிலி'த் தாயாக்கி விட்டார்.

தலைமை ஆசிரியரின் வாழ்க்கைப் 'பத்தினி' நித்திரை கொள்ள, அவர்களது குழந்தையை முனியாண்டி தனது இடுப்பில் தாங்கிக்கொண்டு அங்கு படிக்கின்ற மாணவர்களைப் பார்த்து ஏங்கியபடி, பாடசாலைப் புற வீதிகளில் வலம் வருவான். காலம் நகர்ந்தது. சகல பிரச்சினைகளும் ஜீரணித்து வயிற்றுப் பிரச்சினைதான் மிஞ்சியது. உடலோடு சேர்ந்து வயிறு இருக்கும்போது வயிற்றோடு ஒட்டிய பசிப் பிரச்சினையை ஜீரணிக்க முடியுமா?

அதன் பின்பு தோட்டத்துக் கங்காணி வீட்டு வேலைக்காரனாகி, துரை வீட்டு வேலைக்காரனாகி, தோட்டக் கூலியாகி, தானே உழைத்து, தானே சமைத்து, தனிமையில் அழுது, அதனால்பெற்ற தெளிவு, அதில் பிறந்த கூர்மை, அந்தக் கூர்மையில் எதையும் இலகுவாகத் துளைத்து உண்மையைக் காண்கிற பக்குவம்,

அதே வாழ்க்கையின் தொடர்வில், முப்பது வயதை அண்மித்து நிற்கிறான்.

''ஐயா..... பெரிய தொரை எப்போ வருவாங்க'' காத்திருந்த அலுப்பு மிகுதியால் கந்தோர் பியூனிடம் முனியாண்டி கேட்கிறான்.

''வந்திடுவார்''

''சரிங்க....''

''உனக்கு விசாரணைக் கடிதம் வந்ததா'' பியூன் தனது 'செங்கோலை'த் தூக்குகிறான்.

''ஆமாங்க''

''உன்ரை பேர்?''

''முனியாண்டி''

''எந்தத் தோட்டம்''

''கீனாக்கலை''

உள்ளே சென்ற பியூன் எதையோ தேடுகிறான்.

''உன்னுடைய 'பைலை'க் காணயில்லை.'' திரும்பி வந்த பியூன் முனியாண்டியைப் பார்த்துக் கூறுகின்றான்.

முனியாண்டி எதுவுமே பேசவில்லை.

''பைல்'' இல்லாட்டி விசாரணை நடக்காது. பிறகும் எப்ப நடக்குமோ தெரியாது. என்ன செய்யப் போறாய்'' பியூன் கேட்கின்றான்.

தங்களைப் போன்றவர்களின் தாழ்வுச் சிக்கலைப் பயன்படுத்திச் சிலர் தங்கள் பொக்கற்றின் வெறுமையைத் தீர்த்துக் கொள்ளுகின்ற சம்பவங்களை முனியாண்டி அறிவான். தோட்டக் கங்காணி வீட்டில் வேலைக்காரனாக நின்றபோது இப்படிப்பட்ட பல சம்பவங்களைப் பார்த்திருக்கின்றான்.

பியூனின் கேள்விக்கு முனியாண்டி எந்தப் பதிலும் கூறவில்லை.

''நான் பைலத் தேடி எடுப்பன். ஆனால் ஐயா வாற நேரமாச்சு. வந்தவுடனே சிகரெட் கேட்பார். ஒரு பைக்கற் சிகரெட் வாங்கி வைக்கவேணும். கடைக்குப் போட்டு வரத்தான் நேரம் காணும்'' தனது மேலதிகாரியையும் கௌரவப்படுத்தித் தானும் யோக்கியனாகுகின்ற முயற்சி.

முனியாண்டி பேசவில்லை.

''கடையில ஒரு பைக்கற் சிகரெட் வாங்கிக் கொண்டு வா. நான் உன்ரை 'பைலை' எடுத்து வைக்கிறேன். அலக்கழிவில்லாமல் இண்டைக்கே உன்ரை விசாரணை முடிக்கிறோம்'' றாட்டணம் சுழல்வதுபோல், பியூன் தனது காரியத்திலை நிற்கிறான்.

''சிகரெட் வாங்கப் பணம்?''

முனியாண்டி எதுவுமே பேசாமல் சர்வ சாதாரணமாகப் பத்திரிகையை விரித்து, முன் பக்கச் செய்தியைத் திருப்பவும் வாசிக்கின்றான்.

பியூனுக்குப் பலத்த ஏமாற்றம்.

'காலைப்பிடிச்சுக் கெஞ்சுகிற கூட்டங்கள் இப்ப எப்பிடி மாறிப்போச்சு' பியூன் தனது மனக்கொதிப்பை வெளிப்படுத்தத் தொடங்குகிறான்.

''.........'' யாருமே பேசவில்லை.

''பெரியையா வரட்டும் ... இண்டைக்கு உங்களுக்கு எப்பிடி விசாரணை நடக்குதெண்டு பாக்கிறன்.பத்து முறையாவது உங்களை 'றயின்' ஏறவைச்சு அலைக்கழிச்சாத்தான் புத்திவரும்.

''எந்தப் பெரிய மனிசரெல்லாம் என்ரை காலைப் பிடிக்கிறார்கள். இந்த தோட்டக்காட்டு நாயள்...''

தனக்கேற்பட்ட அவமானத்தை பியூனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''தோட்டக்காட்டு நாயள்'' பியூனின் பேச்சு.

முனியாண்டியின் செவிப்பறையை குத்திக் குதறி, அவனது கண் லேசாக சிவக்கின்றன.

தலையைத் தாழ்த்தியிருந்து பத்திரிகை படித்த அவன் தலையை நிமிர்ந்து பியூனைப் பார்க்கிறான்.

''ஐயா.. என்ன சொன்னீங்க.... தோட்டக்காட்டு நாயள். நாங்க நாயள் தான். அப்படியே வைச்சுக்குவம். எங்களைச் சுரண்ட நினைச்சீங்களே உங்களுக்கு என்ன பேருங்க....''

'' ஐயா இண்டைய பத்திரியைப் பாத்திங்களா. மலையக மக்களின் புனிதமான உழைப்பைக் கௌரவப்படுத்தும் முகமாக இந்த ஆண்டை தொழிலாளர் ஆண்டாகப் பிரகடனப்படுத்த முடிவு பண்ணிப்புட்டாங்க.

அந்தக் கௌரவத்துக்குரிய நாங்கள், இந்த மண்ணிலை உரிமை இருக்கா இல்லையா எண்டு தெரிஞ்சுக்காம தத்தளிச்சுக்கிட்டு விசாரணைக்காக வந்து தூங்கிகிட்டு இருக்கம்.

இந்த நாட்டின்ரை மூலப் பொருளாதாரத்தைக் கட்டிக்காக்கிறது நாமதான்.

அந்த உழைப்பை ஏற்றுக் கொள்ளுறீங்க. அதுக்கொரு விசாரணையுமில்லையுங்க. ஆனால் நம்ம உரிமையைக் கேட்டா விசாரணை வைக்கிறீங்க.

இந்த மண்ணுக்குச் சொந்தமானவங்க எண்ணு இருக்கிறாங்களே. பல லட்சம் மக்கள், இவங்கள்ளை ஆராவது ஒருத்தன் இந்த நாட்டின் மூலப் பொருளாதாரமான தேயிலைச் செடியிலை தொட்டிருப்பாங்களா?...'' முனியாண்டி அமைதியாக அந்த பியூனிடம் கேட்கிறான்.

பியூன்- அவன் தேயிலைச் செடியைக் கண்டதேயில்லை.

ஆலயத்தி மூலஸ்தானத்திற்குப் போகாது, போக விரும்பாத பகதர்கள்.

பியூனால் பேச முடியவில்லை.

''ஐயா... வெறும் கடதாசிக் கட்டுக்களை வைச்சுக்கிட்டு விசாரணை பண்ணுறீங்க, ஒரே ஒரு தடவை மலையகத்துக்கு வந்து, நம்ம ஆளுங்களின்ர உழைப்பையும் நம்ம ஆளுங்க லயத்துகுள்ளே படுற அவலங்களையும் பாருங்க...

அதுக்கப்புறமா, எங்களை விசாரணை பண்ணுறத்துக்கு முந்தி நீங்களே உங்களை விசாரணை செய்து பாருங்க. மனச்சாட்சி எண்ணு ஒன்று இருந்தா, நாங்க 'நாயள் தானா' என்று புரியும்.

ஐயா... தேயிலைச்சாயம் ஏன் சிவப்பாயிருக்குது தெரியுமா? அது நம்ம ஆளுங்க சிந்துற ரத்தம் மலையக மண்ணிலை ஊறிப்போயிருக்கு. அந்த மண்ணிலைதான் தேயிலைச் செடி வளருது. அதனால்தான் அந்தச் சாயம் சிவப்பாயிருக்கு!

அதைத் தான் நீங்கெல்லாம் குடிக்கிறீங்க,

ஐயா... நீங்க தினசரி குடிக்கிற தேயிலைச் சாயமிருக்கே, அது நம்ம ரத்தம்... மனிச ரத்தம்.''

முனியாண்டி அமைதியாகக் கூறுகிறான்.

அங்கிருந்த அனைவரது கண்களும் கலங்கிவிட்டன!

பியூன் பேசவில்லை.

விசாரணை நடத்துகிற உயர் அதிகாரி கடதாசிக் கட்டுக்களுடன் வந்து கொண்டிருக்கிறார்.

வழமையான விசாரணை,

வழமையான முடிவுகள்.


ஆனால்... தொழிலாளர் ஆண்டு...

மிகப் பிரமாண்டமான விழா. பல லட்சம் ரூபா செலவில். இலங்கைத் தலைநகரில் நடைபெறும்!

***(நன்றி:'உழைக்கப் பிறந்தவர்கள்')***

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 65



அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### மேலிருந்து கீழ்

1. உடற்பயிற்சி.
2. மறைவில் தீட்டுவது.
3. கணிதத்துடன் தொடர்புடையது. கீறப்படுவது.
4. களம் / திடல்.
5. உட்புற.
6. மனப்பிணி / கவலை தருவது.
9. சிறுவர் விளையாடுவது.
11. கைப்பற்றுதல் / பிடித்தல் / சிறைகொள்ளுதல்.
13. பற்றுக் கொண்டவன்.
15. வாழ்.
17. பழுத்தல்.
20. கால அளவீடு.
21. ஆண் யானை / ஆண் பன்றி.
23. சபை நிகழ்ச்சி / கச்சேரி.

### இடமிருந்து வலம்

1. வடபகுதியில் மட்டும் வழக்கிலுள்ள விசேட சட்டம்.
5. ஆறாம் வேற்றுமை ஒருமை உருபு.
7. நாற்காலி.
8. நிறுவியவன்.
10. உலகம்.
12. தந்தை.
14. நிகழ்வு.
16. இரத்தல்.
18. மன்மதனின் மனம் கவர்ந்தவள்.
19. ஒரு வகைக் காய்ச்சல்.
20. தன்மை, பன்மைச் சொல்.
22. ஒரு வகைப் பாத்திரம் / அகல்.
23. தடிமன் பீடித்தால் இது வரும்.
24. கம்பு / தடி.
25. கடன் / பிரதியுபகாரம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 65**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (24.06.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல. 65 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 28.06.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 63இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1)அதிபர் (4)கமம் (6)பட்டி (7)அந்தி (8)கடுப்பு (10)தயவு (11)புத்தகம் (14)தினம் (16)காத்திரம் (18)பரு (19)சோதிடன் (20)கலம் (21)கரும்பு

மேலிருந்து கீழ்
(1)அபகரி (2)திட்டு (3)படிப்பு (4)கந்தகம் (5)மதியம் (9)புத்திரன் (12)தனம் (13)உத்தி (15)இரும்பு (16)காசோலை (17)திடல் (18)பலம் (20)கரு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 63 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு
**சுலைநாதன் வைகுந்தநாதன்,**
*நெல்லியோடை, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

2 ஆம் பரிசு
**கனகரத்தினம் சுதாகர்,**
*இல.76 B, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

3 ஆம் பரிசு
**அ.சியாம்சுந்தர்,**
*தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி ஸ்ரீ [illegible],
இல:18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(2) சி.தாரணி,
கிழவன் காடு, கந்தசுவாமிகோயில்,
புதுறோட், காரைநகர்.

(3) திருமதி ஜெ.[illegible],
ஆனந்தா வீதி, மானிப்பாய்
வடகிழக்கு, மானிப்பாய்.

(4) சி.சிவரஞ்சினி,
கலைமணி வீதி,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

(5) செல்லையா ஜோதி யாதவன்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஆவது கிராண்ட்ஸ்லாமை வென்று சாதித்த பெடரர்



பிரான்ஸ் ஓபன் ரெனிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையரில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார். இதன்மூலம் 14 ஆவது கிராண்ட்ஸ்லாம் வென்று அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவர்கள் வரிசையில் அமெரிக்காவின் பீற்றர் சாம்ப்ரசுடன் முதலிடம் பிடித்துள்ளார்.

பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ் தொடர் பாரிசில் நடந்தது. நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், சுவீடனின் ராபங் சோடர்லிங்கை எதிர் கொண்டார்.

இதில் புயல்வேக சர்வீஸ்களில் மிரட்டிய பெடரர் முதல் செட்டை 6-1 என எளிதாக வென்றார். இரண்டாவது செட்டை 7-6 எனச் சிறிய போராட்டத்துக்குப் பின் கைப் பற்றினார். தொடர்ந்து அசத்திய பெடரர் மூன்றாவது செட்டை 6-4 என வென்றார். இறுதியில் 6-1, 7-6, 6-4 என்ற நேர் செட்களில் சோடர்லிங்கைத் தோற்கடித்து பட்டம் வென்றார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இறுதிவரை வந்து பட்டத்தை ஸ்பெயின் வீரர் நடாலிடம் பறிகொடுத்த பெடரர் இம்முறை தனது முதல் பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை வென்றார். இதன்மூலம் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், யு.எஸ் ஓபன் என அனைத்து கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்ற 7 ஆவது வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

மேலும், இது அவர் கைப்பற்றும் 14 ஆவது கிராண்ட்ஸ் லாம் பட்டமாகும். இதன்மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் கைப்பற்றிய வீரர் என்ற அமெரிக்காவின் பீற்றர் சாம்ப்ராஸ் [14] சாதனையைச் சமன் செய்துள்ளார்.

பெடரர் இதுவரை 3 ஆஸ்திரேலிய ஓபன் [2004, 2006, 2007], 1 பிரெஞ்ச் ஓபன் [2009], 5 விம்பிள்டன் [2003, 2004, 2005, 2006, 2007], 5 யு.எஸ் ஓபன் [2004, 2005, 2006, 2007, 2008] பட்டங்களை வென்றுள்ளார். ★★★★★★★



# உலகக்கிண்ணத்திற்காக புதிய அரங்கு திறந்துவைப்பு



உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்காக அமைக்கப்பட்ட புதிய கால்பந்து மைதானம் தென்னாபிரிக்காவில் திறந்து வைக்கப்பட்டது.

உலகக் கிண்ண கால்பந்து போட்டி 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது. இதற்காக 5 புதிய கால்பந்து அரங்குகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய கால்பந்து அரங்கு போர்ட் எலிஸபத்தில் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. 'நெல்ஸன் மண்டேலா பே' என பெயரிடப்பட்டுள்ள இந்த அரங்கு 48,000 ஆசனங்களைக் கொண்டுள்ளது.

இங்கு 2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் காலிறுதி மற்றும் மூன்று, நான்காம் அணிகளைத் தேர்வு செய்யும் போட்டிகள் உட்பட 8 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. எனினும் இங்கு முதல் விளையாட்டாகப் பிரித்தானிய அயர்லாந்து லயன்ஸ் அணிகள் மோதும் ரக்பி போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ★

# ஆஸி.வீரர்களின் சம்பளம் அதிகரிப்பு



அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்த வீரர்களுக்கான சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் அவுஸ்திரேலிய அணியின் சிரேஷ்ட வீரர்கள் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு நிரந்தர ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கான அமைப்புக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி ஆஸி. கிரிக்கெட் சபையுடனான சம்பள ஒப்பந்தத்தில் இணைந்துள்ள 25 வீரர்களுக்கும் 13.1 வீத சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதோடு போட்டிக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் உட்பட அவுஸ்திரேலிய அணியின் 5 சிரேஷ்ட வீரர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு நிரந்தர சம்பள ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த வீரர்கள் காயம் காரணமாவோ அல்லது அணியிலிருந்து நீக்கப்பட்ட நிலையிலோ ஆஸி. அணிக்கு விளையாடாத பட்சத்திலும் அவர்களுக்கு அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு குறித்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படும். ★★★★★★★★★★★★★★★★★★★★★

# மீண்டும் வருகிறார் ரஸாக்



'ருவென்ரி - 20' உலகக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் காயத்தினால் அவதிப்பட்டுவரும் யாஸிர் அரபாத்திற்குப் பதில் சகலதுறை ஆட்டக்காரர் அப்துல் ரஸாக்கை இணைக்க ஐ.சி.சி. அனுமதி அளித்துள்ளது.

இதன்படி சர்ச்சைக்குரிய ஐ.சி.எல். அமைப்பில் இருந்து விலகி சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடும் முதல் வீரராக அப்துல் ரஸாக் பதிவாகவுள்ளார். 29 வயதான அப்துல் ரஸாக் இதுவரை பாகிஸ்தான் அணிக்காக 46 டெஸ்ட், 231 ஒருநாள் மற்றும் 'ருவென்ரி - 20' போட்டிகளில் விளையாடியுள்ளார். இதேவேளை, 'ருவென்ரி - 20' உலகக் கிண்ண போட்டிக்கான பாக். அணியில் இணைக்கப்பட்டுள்ள வேகப்பந்துவீச்சாளர் சொஹைல் தன்வீரும் காயத்தினால் அவதிப்பட்டு வருகிறார். இந்நிலையில் அவருக்கு பதில் மாற்று வீரர் ஒருவரை நியமிக்க பாக். தேர்வுக்குழு ஆலோசித்து வருகிறது. ★★★

# சாதனைத் தொகைக்கு விலை போகும் றொனால்டோ



இங்கிலாந்து கால்பந்துக் கழகமான மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு விளையாடும் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவை தங்கள் அணிக்குக் கொடுத்து விடுமாறு கோரி ஐரோப்பிய கால்பந்து கழகமான ரியல் மட்ரிட் பெரிய தொகையை அளிக்க முன்வந்துள்ளது.

நடப்பு கால்பந்து உலகில் மிகப்பெரிய வீரராகக் கருதப்படுபவரும், மான்செஸ்டர் யுனைடெட் சாதனை வீரருமான கிறிஸ்டியானோ றொனால்டோவை 80 மில்லியன் பவுண்டுகள் தொகை கொடுத்து வாங்க ரியல் மட்ரிட் முடிவு செய்துள்ளது.

மேலும் இந்தத் தொகைக்காக எந்த வித நிபந்தனையையும் ரியல் மட்ரிட் கழகம் விதிக்கவில்லை.

கிறிஸ்டியானோ றொனால்டோ மான்செஸ்டர் யுனைடெட் கழகத்தை விட்டு செல்ல நீண்ட காலமாக அனுமதி கோரிவந்தார். இதனால் அவரது விருப்பத்திற்கு இணங்க கிறிஸ்டியானோ றொனால்டோவின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை செய்த மான்செஸ்டர் யுனைடெட் கழகம், ரியல் மட்ரிட் கழகத்துக்கு அவரை இந்தத் தொகைக்கு விற்று விட முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இம்மாதம் 30 ஆம் திகதி இந்த விவகாரம் இறுதி செய்யப்படும் என்று தெரிகிறது. ★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 • 10 • 1939

உதிர்வு 27 • 05 • 2008



## திருமதி கமலேஸ்வரி கிருஸ்ணசாமி (கண்மணி ரீச்சர்)

(முன்னாள் ஆசிரியை, மேலைப் புலோலி சைவப்பிரகாசம் வித்தியாலயம், வியாபாரிமூலை)

திதி: தேய்பிறைச் ஸப்தமி (14.06.2009)

ஆண்டொன்று சென்றதம்மா
கண்ணிறைந்த கண்மணியே!
மாணவர்க்கு நல் ஆசானாய் திகழ்ந்தாய்
மக்கட் செல்வமாகிய எங்களைச்
சீராட்டி ஊட்டி வளர்த்த
தெய்வமே! எம்மோடு வேருன்றி
இருப்பீர் என எண்ணியே எமக்கு
இடையில் வந்த காலன் எம்மைப்
பிரித்து வைத்தான் ஆனால் எம்
இதயத்தில் நீங்கள் என்றும் வாழ்கிறீர்கள்
இறைபதம் எட்டிய வாழ்வு
வளம் பெற்றுச் சாந்தியடைய
நிதம் வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளை,
சகோதர சகோதரிகள், மருமக்கள்,
பெறாமக்கள்.

(சி/556091)

### குருளைச் சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் குருளைச் சாரணர்களுக்குச் சின்னஞ் சூட்டும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி. ஆர். இராசலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் ஜி. செபஸ்தியாம்பிள்ளை, உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களான செ.தேவரஞ்சன், இ.தில்லைவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(04 - 204)

# நிகழ்வுகள்

நல்லூர், ஜூன் 14

திருநெல்வேலி கலாசாலை வீதி, பாரதி சனசமூக நிலையத்தில் நாளை திங்கட்கிழமை சிரமதான நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேசசபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி சிரமதான நடவடிக்கைகளில் சனசமூக நிலைய உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்வர் என பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-111)

* * *

சண்டிலிப்பாய், ஜூன் 14

ஆனைக்கோட்டை உயரப்புலம் விவசாய சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சம்மேளனத் தலைவர் க.தங்கவேலாயுதம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் கமநல பெரும்பாக உத்தியோகஸ்தர் வை.பாலகிருஷ்ணன் கலந்து கொண்டு உரையாற்றவிருக்கிறார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது. (1-115)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (06)

* * *

வடமராட்சி, ஜூன் 14

உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமைய மக்களை நோக்கிய செயற்றிட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை நகர சபையின் நடமாடும் சேவை 9ஆம் வட்டாரமான கெருடாவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த வரியிறுப்பாளர்களுக்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நடத்தப்படும்.

கெருடாவில் ஸ்ரீ ஞானவைரவர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும் இந்த நடமாடும் சேவையில் ஆதன உரிமைப் பெயர் மாற்றம் செய்தல், நிலுவை ஆதனவரி செலுத்துதல், துவிச்சக்கர வண்டி உரிமம் பெறல், கட்டட விண்ணப்பம் சமர்ப்பித்தல், பொது நூலகத்திற்கான புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளல், வரியிறுப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், முறைப்பாடுகள், ஆலோசனைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் கு.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(1-236)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் பரம்சோதி சிவசுப்பிரமணியம் J.P.

(இளைப்பாறிய மொழி பெயர்ப்பாளர், உயர்நீதிமன்றம்)

தோற்றம்: 22 * 08 * 1938
மறைவு: 11 * 05 * 2009

கடந்த (11.05.2009) திங்கட்கிழமை அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் பரம்சோதி சிவசுப்பிரமணியம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சி.ஞானாகரன் (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி)
இல.60, பழைய தபாற்கந்தோர் வீதி,
சிறீராம் தொழிற்சாலை அருகில், கோப்பாய் தெற்கு.

மனைவி,
பிள்ளைகள் (கனடா).

(86169)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 09 * 02 * 1939

மறைவு 15 * 05 * 2009



## அமரர் முத்துத்தம்பி இராமநாதன்

15.05.2009 அன்று சிவனடி சேர்ந்த எங்கள் அன்புச் சகோதரரின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3ஆம் கட்டை, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சிவானந்தன்,
திரு.திருமதி சிவலோகநாதன்.

# உடன் தேவை

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக்கூடியவர்கள் (பெண்கள்) தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள வர்கள் விரும்பத்தக்கது.

நியூ கோல்டன் ஸ்ரார்,
226, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(யாழ்.பல்கலைக்கழக அருகாமை)
தொ.பே.: 021 222 6951, 077 95 22 444

(86203)

# வீடு, காணி விற்பனைக்கு

பலாலிவீதி, கோண்டாவில் கிழக்கு (டிப்போ சந்திக்கு முன்பாக) சகல வசதிகளும் கொண்ட புதிதாக கட்டப்பட்ட காணியுடன் சேர்ந்த வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: S.கலைச்செல்வன்
தொ.பே.: 0777 65 2012

(86198)

# காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறை, ஆலடி வீதியில் பூச்சிமுத்தான் என்னும் பெயருடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0112 365 375

(சி/558984)

# தவறிவிட்டது

முத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய் என்னும் முகவரியுடைய பத்திநாதர் மேரி பற்றிசியா என்பவரது தே.அ.அ. (596063748V) மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் புகைப்படம் என்பன அடங்கிய பேர்ஸ் (08.06.2009) அன்று கச்சேரிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மிலேனியம் பெஷன் அன்ட் பொம்பே பஷார், இல.10, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# இறைச்சிக் கோழி விற்பனை

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

செம்மணி பாம்,
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

(86196)

# விற்பனைக்கு

WP XXXX இலக்கத்தைக் கொண்ட HONDA CD 125 ரக மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. மேலதிக தொடர்புகளுக்கு

தொ.பே.: 021 226 3509
021 226 3238

(சி/558996)

# விழிநீர் சொரியும் அருவிகள் எட்டாம் ஆண்டு அஞ்சலி

மலர்வு 16 ★ 02 ★ 1977



உதிர்வு 27 ★ 05 ★ 2001

## அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்

திதி: ஷஷ்டி (14.06.2009)

பாடிப்பறந்த சிறுகுயிலே உன்னைத்
தேடித் தவிக்கின்றோம் நாம்
நீ மீண்டு வருவாய் எனக் காத்திருக்கும்
உன் உறவுகள்

3/3 பத்திரகாளி கோயிலடி,
வண்.மேற்கு, யாழ்ப்பாணம். (86206)

உன் நினைவால் தவிக்கும்:
அம்மா, அப்பா மற்றும் மச்சான்மார்,
சகோதரிகள், மருமக்கள்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 19.04.1936

விண்ணில்: 14.06.2005

பாசமும் பரிவும் காட்டிய
பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்து விட்டீர்
உமது பிரிவைத் தாங்காமல் நாம்
துவண்டு கலங்கிப் போனோமே.

## அமரர் சின்னட்டி சின்னப்பு


என்றும் உங்கள் சாந்திக்காக
இறைவனை இறைஞ்சி நிற்கும்
இராசரத்தினம்,
மரிசிலின் குடும்பத்தினர்,
பேரர்கள் - பிமேபாசிலின்,
பாஸ்ரினா.

ஆர்க் லேன்,
உடுவில். (86205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தே விட்டது ஆபத்து!

இந்து மகா சமுத்திரம் ஐந்து மகா சமுத்திரமாகி வருகிறது. இதுவரை இந்தியாவுடன் நெருங்கிக் குழைந்து வந்த இலங்கை, காரியம் முடிந்ததும் கழற்றிவிடக் காத்திருக்கிறது. சீனா, தனது செல்லப் பிள்ளையாக



இலங்கையைக் கொஞ்சுவதன் பின்விளைவுகள் இந்தியாவுக்குத்தான் பேராபத்து!

'சீன மக்கள் எங்கள் வளர்ச்சியைத் தங்களது சொந்த வளர்ச்சியாகப் பார்க்க வேண்டும்' என்று கூறி சீனப் பிரதமருக்கு குட்டி யானையைப் பரிசளித்தார் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ. 'இலங்கை அரசு விடுதலைப் புலிகளை அழிக்க எடுத்து வரும் நடவடிக்கைகளை சீனா ஆதரிக்கிறது. ஏனென்றால், அது எங்கள் நாட்டு நன்மைக்கு உகந்த விஷயம்' என்கிறது சீனா.

இந்தியாவுடன் 50 ஆண்டுகளாகவே சீறிக்கொண்டு இருக்கும் சீனா, இலங்கையுடன் இவ்வளவு நெருக்கமாகக் கைகோர்ப்பதற்கு இதுவரை தடையாக இருந்தவர்கள் புலிகள். அதனால், புலிகளை ஒடுக்க சீனா எல்லா உதவிகளையும் செய்தது. புலிகள் வசம் இருக்கும் கடற்பரப்பு பறிக்கப்பட்டால், அந்த இடத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டலாம் என்பது சீனாவின் கணக்கு. இலங்கையின் தெற்கே உலகின் மிக சுறுசுறுப்பான கடல் வழி மீன்பிடிக் கிராமம் அம்பாந்தோட்டை. இன்று அங்கு மிகப் பிரமாண்டமான துறைமுகக் கட்டுமானப் பணி நடக்கிறது. 100 கோடி அமெரிக்க டொலர் செலவில் இந்தப் பணியை சீனா மேற்கொண்டு வருகிறது. முழுக்க முழுக்க வணிகரீதியான பயன்பாட்டுக்குத்தான் என்று சொன்னாலும், எதிர்காலத்தில் சீனா அதைத் தனது கடற்படைத் தளமாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கப்பல் போக்குவரத்துக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும், அரபு நாடுகளில் இருந்து மசகு எண்ணெய் எடுத்து வரும் தன் நாட்டு ராங்கர் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும் இதைக் கட்டி வருவதாக சீனா சொல்கிறது. இதன் அடுத்தகட்டமாக பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான் என இந்தியாவைச் சுற்றிலும் உள்ள அண்டை நாடுகள் அனைத்திலும் துறைமுகம் அமைத்துத் தருவதாகக் கூறி சீனா உள்ளே நுழைய ஆரம்பித்திருக்கிறது.

கம்யூனிஸ்ட்டாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவர் மகிந்த ராஜபக்ஷ. அதுவும் சீன ஆதரவு கம்யூனிஸ்ட். இரண்டு நாடுகளையும் இணைப்பதாக புத்த மதம் இருக்கிறது.

18 ஆண்டுகளுக்கு முன்பு சில இராணுவ உதவிகளை இலங்கைக்குச் செய்ய ஆரம்பித்தது சீனா. இந்திய அமைதிப் படை இலங்கையிலிருந்து வெளியேறிய காலகட்டம் அது. 'இனி நீங்கள் இந்தியாவை நம்ப வேண்டாம். பாதுகாப்புக்கு நாங்கள் இருக்கிறோம்' என்று இலங்கைக்கு சீனா ஆதரவுக் கரம் நீட்டியது. அதை பாரதூரமானதாகப் பார்க்க இந்தியா தவறியது.

இலங்கைக்கான இராணுவ உதவியை அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மட்டுப்படுத்தின. இதன் பிறகு சீனாவுடனான நெருக்கம் இலங்கைக்கு இன்னும் அதிகரித்தது. 37.6 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இலங்கை தரைப் படை, கடற் படைக்கான ஆயுதம் வாங்குவதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு ஆறு F7 ஜெட் விமானங்களை இலவசமாக வழங்கியது சீனா. இது மட்டுமல்ல, சில லட்சம் அமெரிக்க டொலர்களாக இருந்த நிதி உதவியை கடந்த ஆண்டு 100 கோடி அமெரிக்க டொலராக உயர்த்தியது. சீனாவுக்கு அடுத்தபடியாக

**- ப.திருமாவேலன் -**

இலங்கைக்கு உதவிய நாடு பாகிஸ்தான். இலங்கை 2007ஆம் ஆண்டு வரை 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களை வாங்கியுள்ளது. இதில் பல்வேறு வகையான பீரங்கிக் குண்டுகள், துப்பாக்கி, கையெறி குண்டுகள், ரேடியோ செட், கப்பலில் இருந்து தாக்கும் வெடிபொருள்கள் அடங்கும்.

அடுத்தது இஸ்ரேல். கடந்த மார்ச் மாதம் இலங்கைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இஸ்ரேலின் முன்னணி ஆயுதத் தயாரிப்பு நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடப்பதாகக் கூறி அமெரிக்காவும், இங்கிலாந்தும் இராணுவ உதவிகளை நிறுத்திய பிறகும், இஸ்ரேல் தொடர்ந்து உதவி செய்தது. ஆயுதம் வழங்கியது மட்டுமல்ல, பல்வேறு போர்த் தந்திரங்களையும் சொல்லிக்கொடுத்தது. கடந்த ஆண்டு காஸா பகுதியில் இஸ்ரேல் படை தொடர் தாக்குதல்கள் நடத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொலை செய்தது. அதே போன்ற ஒரு தாக்குதலைத்தான் போரின் கடைசி நாள்களில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை இராணுவம் மேற்கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு குறுகிய பகுதியில் மக்களைச் சுற்றி வளைத்து, எவரும் தப்பிச் செல்ல முடியாதபடி துப்பாக்கிச் சூடு நடத்துவது, தொடர் குண்டு மழை பொழிந்து அந்தப் பகுதியையே எரித்துச் சாம்பல் காடாக்கு வதுதான் அந்த தந்திரம்.


இந்தப் பக்கம் பாகிஸ்தான்; அந்தப் பக்கம் சீனா. அடுத்த பக்கம் இஸ்ரேல் என பல்வேறு நாடுகள் மொத்தமாக இலங்கையில் இப்போது இராணுவ உதவி என்ற போர்வையில் குவிந்துகொண்டு இருப்பது இந்தியாவுக்கு நல்லதல்ல என்ற எச்சரிக்கை மணி பல்வேறு தரப்பில் இருந்தும் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இது போன்ற தகவல்களைத் திரட்டி 'சீனாவின் முற்றுகையில் இந்தியா' என்ற புத்தகமாகக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இந்தியாவில் உள்ள 'விழிப்பு உணர்வு' அமைப்பைச் சேர்ந்த காமராஜ். ''மகிந்த ராஜபக்ஷ பிரதமராக அமர்ந்ததும், அதன் பிறகு அதிபராக மாறியதும் இந்தியாவின் நேசநலனுக்கு நல்லதல்ல. இந்தியாவை இராணுவரீதியில் அச்சுறுத்தி வரும் நாடுகளை அழைத்துத் தங்கள் தேசத்தில் வைத்துக்கொள்வதைத் தனது உத்தியாக அவர் மாற்றிக்கொண்டார். ராஜீவ் காந்தியின் கொலையைக் காட்டி இந்தியாவுடனும் நட்பைப் புதுப்பித்துக்கொண்டார். புலிகளை அழிக்கப்போவதாக இந்தியாவிடமும், இந்தியாவிடமிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று மற்ற எதிரி நாடுகளுடனும் உறவாடினார். இதை அறிவுபூர்வமாக இந்தியா அணுகத் தவறிவிட்டது. அதனால்தான் இந்தியப் பெருங்கடலில் தனது காலை ஆழமாக ஊன்றிவிட்டது சீனா.

இந்தியாவில் தென் மாநிலங்கள்தான் அதிகம் பாதுகாப்பானவையாக சொல்லப்பட்டு வந்தன. தற்போது அவற்றுக்கும் ஆபத்து காத்திருக்கிறது. தூத்துக்குடியையும் கொழும்பை யும் இணைக்கும் கடலடித் தொலைத் தொடர்பு கேபிளை சீனாவின் உளவு நிறுவனம் தனது மலேசிய பினாமி நிறுவனத்தின் மூலம் கைப்பற்றியுள்ளது. இதனால், இந்தியாவை சீன உளவுத் துறையால் நோட்டம்விட முடியும்.

இலங்கைத் தமிழர் பகுதியில் துறைமுகம், அனல்மின் நிலையம் அமைக்கும் பணிகளிலும் சீனாவே இறங்குகிறது. போரை நடத்திக் கொண்டே இதைச் செய்து முடித்துவிட்டார் ராஜபக்ஷ.

தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பாக் வளைகுடாவில் இலங்கைக்குச் சொந்தமான பகுதிகளில் மூன்று இடங்களில் பெட்ரோல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பகுதியை லிபியாவுக்குக் கொடுக்கத் தயாராக இருப்பதாக ராஜபக்ஷ அறிவித்துள்ளார். லிபியாவுக்குக் கொடுப்பதும் பாகிஸ்தானுக்குக் கொடுப்பதும் ஒன்றுதான். இந்தப் பகுதிகள் சேது கால்வாயின் 10 கி.மீ தூரத்துக்குள்தான் உள்ளன.

50 கோடி டொலரை இலங்கைக்கு வழங்கப்போவதாக லிபியா வாக்குறுதி கொடுத்திருக்கிறது. ஈரானும் பணத்தை அள்ளிக் கொடுத்துள்ளது. கத்தாரும் உதவிக்கு வந்துவிட்டது. ஈரானும் கத்தாரும் பாகிஸ்தானுக்கு நெருக்கமான நாடுகள். எமது கண் முன்னால் எதிரி நாடுகள் இலங்கைக்குள் நுழைவதை நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இலங்கையின் இறையாண்மை பற்றிக் கவலைப்பட்ட, அந்த நாட்டின் பாதுகாப்பு பற்றி வருத்தப்பட்ட நாம்... இன்று நெருக்கடியில் நிற்கிறோம்!"



என்று கொந்தளிக்கிறார் காமராஜ்.

வெற்றிக் களிப்பில் இருக்கும் ராஜபக்ஷவிடம் சில நாள்களுக்கு முன் நிருபர்கள் இது பற்றிக் கேட்டார்கள். அதற்கு, ''சீனாவிடம் இருந்து நாங்கள் ஆயுதம் வாங்கினால், இந்தியா ஏன் பயப்பட வேண்டும்? இந்தியாவுக்குப் பரந்த மனப்பான்மை வேண்டும்'' என்று அறிவுரை சொல்லியிருக்கிறார் அதிபர். எப்படி? ★

## ஒரு யானையைக்கொன்றால் 15 ஷில்லிங் சன்மானம் வழங்கப்பட்ட காலம்...

1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டிஷ் அரசின் உத்தரவின் பிரகாரம் வன்னிப்பகுதியில் 150 யானைகள் கொல்லப்பட்டன. மன்னார், பச்சிலைப்பள்ளிப் பகுதிகளிலும் சில யானைகள் கொல்லப்பட்டன. ஒரு யானையை அழிப்பதற்கு 15 சில்லிங் சன்மானமாக வழங்கப்படும் எனவும் யானையை அழிப்பவர்கள் தாம் யானையை அழித்ததை நிரூபிக்கும் வகையில் கொல்லப்பட்ட யானையின் வாலை எடுத்து வந்து ஒப்படைக்க வேண்டு மெனவும் பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டிருந்தது.

**150 யானைகள் வன்னியில் அன்று அழிக்கப்பட்டன**

இதன் பிரகாரம் யானையைக் கொன்றவர்கள் அதன் வாலை எடுத்து வந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒப்படைத்து பணத்தைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு எடுத்துவரப்பட்ட யானைகளின் வால்கள் பின்னர் துண்டுகளாக வெட்டிப் புதைக்கப்பட்டன.

இலங்கையின் தேசியச்சொத்தாகக் கருதப்படும யானைகள் இன்று இலங்கையில் அருகிவருகின்றன. தென்னிலங்கையில் பல இடங்களில் யானைகள் சரணாலயம் உள்ளது. வடபகுதியிலும் ஒரு வனவிலங்குச் சரணாலயம் அமைக்கப்பட்டால் அது வடபகுதிக்குப் பெருமை சேர்க்கும்.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

உருக்குத் தளபாடம் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

திரேசா தளபாடம்,
இல.137, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 2227941
0779050186

(86207)


## இலவு காத்த கிளிகளாக.....

[03 ஆம் பக்கத் தொடர்ச்சி....]

இதுதவிர வணிகர்களுக்கிடையேயான உள்முரண்பாடுகளின் விளைவாலேயே ஏ-9 வீதியால் வரவிருந்த லொறிகள் தடுக்கப்பட்டிருப்பதாகவும் இன்னொரு கதை உலாவுகின்றது.

ஏ-9 வீதியூடான போக்குவரத்து இத்தகைய தொங்குபறி நிலையில் இருக்கையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான யாழ்.தேவி ரயில் சேவை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுவிடும் போன்ற அறிவிப்புகளும், விளம்பரங்களும் வரத்தொடங்கியுள்ளன. அதேவேளை ஏ-9 வீதி திறந்துவிடும் என்ற நம்பிக்கையில் தென்னிலங்கையில் உள்ள பல முன்னணி நிறுவனங்கள் குடாநாட்டில் தமது கிளைகளை நிறுவத் தொடங்கியுள்ளன. ஆயினும் நிச்சயமற்ற தன்மையோடு ஏ-9 வீதியூடான போக்கு வரத்து இருக்கும் நிலையில் இத்தகைய நிறுவனங்களின் சேவை மக்களுக்கு முழுமையாகக் கிட்டாத நிலையே ஏற்படும்.

எது எப்படி இருப்பினும், எல்லாச் சுமைகளும் பொதுமக்களின் முதுகிலேயே சுமத்தப்படவிருக்கின்றன. லொறிகளில் ஏற்றி வந்த பொருள்கள் பழுதடைந்ததால் ஏற்பட்ட பல மில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஈடுசெய்ய இன்னும் அதிக விலைக்கு பொருள்களை வர்த்தகர்கள் விற்பனை செய்வர். சிலவேளைகளில் இப்போது சந்தையில் உள்ளதை விடவும் அதிக விலை கொடுத்தே பொருள்களை வாங்க வேண்டிய நிலையும் அடுத்துவரும் வாரங்களில் பொதுமக்களுக்கு ஏற்படலாம். எனவே பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சுமைகளை அரசாங்கமும் அதிகாரிகளும் கவனத்தில் எடுத்து ஏ-9 வீதி ஊடான சீரான போக்குவரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும். தடுத்து வைக்கப்பட்ட லொறிகளை இன்றோ நாளையோ பயணத்தைத் தொடர அனுமதிக்கவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே ஏ-9 பாதைப் போக்குவரத்துக் குறித்து குடாநாட்டு மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும். வடக்கின் வசந்தம் என்று விளம்பரக் கோஷங்களால் மட்டும் இப்பகுதி மக்களுக்கு எதுவுமே கிடைக்காது என்ற ''கையறு'' நிலையையே தேறும்.

★★★★★


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்தவரும் தற்பொழுது W.A.De சில்வா மாவத்தை கொழும்பு - 6இல் (வெள்ளவத்தை) வசிப்பவருமாகிய

### திரு.சண்முகராஜா சதீஸ்குமார்

கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி 2008 அன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி பிரீதி இனோகா ரணசிங்க முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(86075) எழுதுமட்டுவாழ் நண்பர்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




நெடுந்தீவு மேற்கு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரமணன் நளாஜினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் செல்வன் ரோகிதன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், அத்தைமார், மச்சான்மாரான சுவேதிகா, தீப்தி, யதூசிகா மச்சான் மதுசிகன் ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



வாழ்த்துவோர்:
மாமா,
அத்தை,
மச்சாள்மார்,
மச்சான்.
0602216980

3ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு

## TOP WORLD Communications & Browsing Centre

Internet Calls
இந்தியா - 5/=
ஐரோப்பிய நாடுகள் 6/=
ஏனைய நாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில்

வெளிநாட்டில் உள்ளவர்களுடன் நேரில் முகம்பார்த்துக் கதைப்பதற்கு 5/= மட்டுமே

Photo Copy Available

உலகின் அனைத்து நாடுகளுக்கும் CD, DVD, உணவுப் பொருள்கள் பொதிகள் போன்றவற்றை குறைந்த கட்டணத்தில் கூரியர் மூலம் அனுப்பி வைக்கலாம்.

internet Browsing Available Here

கணனிகள் திருத்திக் கொடுக்கப்படும்

T.P. - 021 222 8605
Fax - 021 222 8387
768, Pointpedro Road,
Nallur, Jaffna.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தை பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!

(86209) இறையடியார்.

## அனைவருக்கும் கணனிக் கல்வி



- Diploma Courses
  - Diploma in Microsoft Office (03 Months)
  - அரச, நிறுவன ஊழியர்களுக்கான Diploma in Office Managment (04 Months)
  - Diploma in Hardware Engineering (03 Months)
- Certificate Courses
  - Certificate in Visual Basic Programme (02 Months)
  - Certificate in Internet & e-mail (20 Hours)
  - Certificate in Adobe Photoshop (02 Months)
  - Certificate in HTML (01 Months)
- சிறுவர்களுக்கான கணனிக் கல்வி
  - Certificate in Kids Programme (02 Months)
- பாடசாலை மாணவர்களுக்கானது (10, 11, 12)
  - Information and Communication Technology (ICT)
  - General Information Technology (GIT)

ஆரம்பம்:
பிரிவு 1 - 20/06/2009
பிரிவு 2 - 22/06/2009
பிரிவு 3 - 23/06/2009

30/06/2009 வரை பதிவு செய்வோருக்கு பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது

### Winsoft Technology

- Computer Education -
புகையிரத நிலைய வீதி - சுன்னாகம்
T.P:- 0718839361

## விற்பனைக்கு

வெள்ளிரும்புப் பைப் மற்றும் வெள்ளிரும்புக் கம்பி (silver) அதற்கான பொருத்துகள் விற்பனைக்குண்டு.

நந்தலாலா இரும்பகம்,
29, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

இல.91/14, கந்தர்மடம் இந்து மகளிர் கல்லூரி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய புதிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு கௌரவமான குடும்பத்தினர் மட்டும் தொடர்பு கொள்ளவும். சிபாரிசுடன் மாணவர்களுக்கு அறைகளும் உண்டு. தொ.பே: 0779143177

## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

34வயது செவ்வாய்க்குற்றமில்லை, மகம், U.K.பிரஜாவுரிமையுடைய Car company இல் தொழில் புரியும் நற்பண்புள்ள, எவ்வித தீய பழக்கமுமற்ற மணமகனுக்கு அழகிய, ஆங்கில அறிவுள்ள மணமகள் தேவை.

லண்டன்
தொ.பே:00447502340714

## மரண அறிவித்தல்

### இளையதம்பி பஞ்சலிங்கம்



தெல்லிப்பழை, மகாதனையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பஞ்சலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-விசாலாட்சிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் பிறேமானந்தி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), நந்தினி (ஆசிரியை, சென்.றோக்ஸ் றோ.க.வித்தியாலயம், யாழ்ப்பாணம்), மைதிலி, பகீரதன் (கணக்கீட்டு ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் பார்த்தீபனின் (உரிமையாளர், புகழ் ஸ்ரோர்ஸ், சங்கானை) பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சண்முகலிங்கம், தங்கம்மா, கனகம்மா மற்றும் நடராஜா, மாணிக்கவாசகர் ஆகியோரின் அருமைச் சகோதரரும், சகுந்தலாதேவி, சோமசுந்தரம் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை), தனபாலசிங்கம் (ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்), யோகேஸ்வரி (கொழும்பு), பாக்கியலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

36/3, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 4598499

தகவல்:
குடும்பத்தினர்.

## விக்னாவின் கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணக்கீட்டு ஆசிரியர் P.பகீரதன் அவர்களின் பாசமிகு தந்தை

### இளையதம்பி பஞ்சலிங்கம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு சொல்லொணாத் துயரம் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரிற்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விக்னா கல்வி நிறுவன
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


(சி/559004)


## தொழிற்பயிற்சி

வண்ணை, ஜூன் 14

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்11 லட்சம் ரூபா செலவில் கியூடெக் - கரிதாஸ் நிறுவனம் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நெறிகளை வழங்கும் [illegible] படுத்தவிருக்கின்றது.


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்வி நிறுவனத்தின் கணக்கீட்டு ஆசிரியர் P.பகீரதன் அவர்களின் அன்புத் தந்தை

### இளையதம்பி பஞ்சலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Navalar & NEC,
Jaffna.

இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(சி/559006)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வரலாறு திரும்பாமலிருக்க வகை செய்யப்படுமா?

வன்னியில் - முல்லைத்தீவில் - இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற வேளை, மிகக் குறுகிய இடப்பரப்பில் லட்சக் கணக்கான பொதுமக்கள் கூடியிருந்த போது, போர் நடை பெற்றால் நிச்சயமாக ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தொழி வர் என்ற நிலையிலும் அதனைத் தடுப்பதில் முனைப்பா கவும் மனிதாபிமானத்தோடும் தமக்குரிய பதவியைப் பயன்படுத்தாமல் இருந்தவர்க ளில் ஒருவர் பான் - கீ - மூன்.

அப்போது அவர் தமது பதவி நிலையைப் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திருந்தால், உண்மையான சரியான வழிமுறைகளை உகந்த வித மாகக் கண்டிப்பு டன் செயற்பட்டிருந்தால், இறுதிச்சம ரில் இறந்தவர்களின் எண் ணிக்கை குறித்த சர்ச்சையே எழுந்திருக்காது.

இறந்தவர்களின் எண்ணிக்கையை ஐக்கிய நாடு கள் சபை பெருப்பித்துச் சொல்வதாக இலங்கை அரசும், அதனை வெளிப்படுத்த ஐ.நா. தயங்குவதாக சர்வதேச தரப்பு களும் நடத்தும் சர்ச்சை எழுந்திருக்காது.

இறுதிப் போர் நடைபெற்றால் பொதுமக்களின் அழிவு நினைத்துப்பார்க்க முடியாதளவு இருக்கும் என்று களத்தில் பணிபுரிந்த தொண்டர் நிறுவன அதி காரிகள் முன்னெச் சரிக்கை செய்த போதிலும், மனிதா பிமானப் போர் இடை நிறுத்தத் தைக்கூட இலங்கை அரசைக் கொண்டு, அதற்கு உரத்த குரலில் அழுத்தம் கொடுத்து ஆரம்பத்திலேயே அமுலாக்க வழிசெய்ய வக்கற்று இருந்த பான் - கீ - மூன் இப்போது சற்று விழித்திருப்பதாகத் தோன்றுகிறது.

மக்கள் அழிவு நடந்து முடிந்த பின்னர் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை உரிய முறை யில் செயற்படுத் தவில்லை என்று தமது ஆதங்கத்தை ஐ.நா. தலைமைய கத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் சற்றுக் கடுமையான தொனியில் வெளிப்படுத்தி இருக்கிறார் அவர்.

இராணுவ நடவடிக்கைகள் முடிந்த கையோடு, அர சாங்கம் தனக்கு வழங்கிய வாக்குறுதிகளை செயற் படுத்துவதன் முக்கியத்துவத்தை இல்ங்கை அரசிடம் இப்போது மீண்டும் வலியுறுத்தி உள்ளார்-ஐக்கிய நாடு கள் சபையின் செயலா ளர் நாயகம்.

கடந்த மாதம் 22, 23 ஆம் திகதிகளில் இலங்கைக்கு தாம் விஜயம் செய்த பின்னர் வெளியிடப்பட்ட கூட்ட றிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்புக் கொண்ட கடப்பாடு களை நிறைவேற்றத் தொடங்க வேண்டும் என்று ஐ.நாவின் செயலாளர் நாயகம் தெரி வித்திருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி தமக்கு வழங்கிய உறுதி மொழிகளை - கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை - நடைமுறைப்படுத்துவதில் இன்னும் உரிய அளவில் அக்கறை காட்டவில்லை என்றும் மூன் கவலை தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அசமந்தப் போக்கு, அல்லது தாமதம் குறித்து அவருக்குக் கடிதம் ஒன்றை ஏற்கனவே அனுப்பி இருப்பதாகவும் மேலும் ஒரு கடிதத்தை வரை யப்போவதாகவும் ஐ.நா. செயலாளர் நாயகம் அறிவித் திருக்கிறார்.

மோதலுக்கு பிந்திய கட்டத்தில் இலங்கை இப்போது உள்ளது. ஆகையால் மீள்குடியேற்றம், மறுவாழ்வு, மீள் இணக்கப்பாடு, நிவாரணம் ஆகியவற்றைச் சீராகவும், சரியாகவும், நேர்மையாகவும் செய்யவேண்டிய உடனடித் தேவை - அவசர தேவை - உருவாகி உள்ளது. இவற்றை சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், உதவியுடனேயே செய்துமுடிக்க இயலும்.

ஆனால், இந்த விடயங்களில்- தமிழ் மக்களின் நலன் சார்ந்த முக்கிய பணிகளில் - அரச தரப்பினர் வழமைபோன்று மந்தகதியிலேயே செயற்படுகின் றனர். தமிழர்கள் சம்பந் தமான விடயங்கள், விவ காரங்களில் எல்லாம் இலங்கை அரசு பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடையில் என்ற நிலைதான்...!

இதனை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மிகத் தாமதமாகவே கண்டுபிடித்திருக்கின் றார். அதனா லேயேஅவர் இலங்கை ஜனாதிபதிக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை எழுதவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார் என நம்பலாம்.

''மீள் இணக்கப்பாட்டுச் செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். வரலாறு மீண்டும் நிகழா மல் இருக்கவேண்டுமானால் தமிழ்ச் சிறுபான்மையின ரோடும் ஏனைய மக்களோடும் இலங்கை அரசாங்கம் கைகோர்க்க வேண்டும்.

''மீண்டும் சொல்கிறேன் மீள் இணக்கம் தொடர்பாக முதல் காலடிகள் கட்டாயமாக இப்பொழுதே, உடனடி யாகவே எடுத்துவைக்கப்படவேண்டும்.'' - என்று ஐ.நா. தலை மையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அழுத்திக் கூறியிருக்கிறார் பான் -கீ - மூன்.

அவரது இந்த இடித்துரைப்பு, அறிவுறுத்தல் இலங்கை அரசின் காதில் ஏறுமா? அதன் பிரகாரம் தமக் குள்ள பொறுப் புக்களை, கடமைகளை உரிய வீச்சு டன் செயற்படுத்துமா என் பன பொறுத்திருந்திருந்து பார்க்கப்பட வேண்டியவையே.

மோதல்களின் இறுதிக்கட்டத்தில் சர்வதேச சட்டங் கள் மீறப்பட்டிருக்கக் கூடிய தன்மைகள் குறித்து வெளிப் படையாகவும் பொறுப்பேற்கும் தன்மையோடும் விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பான வாக் குறுதிகளை நிறைவேற்றுமாறு ஐ.நா.செயலாளர் நாய கம் தமது அடுத்த கடிதத்தில் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அதுவிடயத்தில் இலங்கை அரசு தனது நிலைப் பாட்டை மாற்றிக்கொள்ளுமா என்பது சந்தே க்மே....!

# ஐக்கிய இலங்கைக்குள் தமிழ், முஸ்லிம், மலையகமக்களின் சுயாட்சியை உறுதி செய்யும் தீர்வு காணப்படவேண்டும்

## புதிய ஜனநாயக்கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 14

மாகாண சபையின் முறையின் கீழ் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட் டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவது தொடர்பான வாதப் பிரதி வாதங்களைத் தவிர்த்து, தமிழ், முஸ் லிம், மலையக மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான ஐக்கிய இலங்கைக்குள் ஆகக்கூடிய சுயாட்சியை உறுதி செய்யத்தக்கவாறு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

மேற்கண்டவாறு புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்தில் வேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய கோரிக் கைகள் வருமாறு:-

* இடம்பெயர்ந்து தடுப்பு முகாம் களிலும் ஏனைய முகாம்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் வெகுவிரைவில் அவரவர்களின் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேற அனு மதிக்கப்பட வேண்டும். கல்வி, சுகா தார சீரமைப்பு நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நட்டஈடு வழங்கப் படவேண்டும். தொடர்ந்தும் பாதுகாப் புக் காரணங்களைச் சொல்லி மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் குடி யேறுவதையோ, விவசாயம், மீன்பிடி உற்பத்தியில் மற்றும் தொழில்களில் ஈடுபடுவதையோ தடுக்கக் கூடாது.
* ஏ-9 வீதி மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்காக திறந்து விடப்பட வேண்டும். வடக்கிற்கான புகையிர தப் பாதை விரையில் சீரமைக்கப்பட வேண்டும்.
* போக்குவரத்தில் இருக்கும் பாஸ் முறை நீக்கப்பட்டு சுதந்திர நடமாட் டம் உறுதி செய்யப்பட வேண்டும். அதன் மூலம் விவசாய, மீன்பிடி சந் தைப்படுத்தல் வாய்ப்புக்கள் ஏற்படுத் தப்பட வேண்டும்.
* அவசர கால சட்ட விதிகளையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் நீக்க வேண்டும்.
* அரசியல் கைதிகள் அனைவரை யும் விடுதலை செய்ய வேண்டும்.
* வடக்கு, கிழக்கில் பூரணமான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதி செய்யப்பட வேண்டும். அங்கு உயிர் வாழும் சுதந்திரம் உட்பட ஜனநாயக மனித உரிமைகள் உத்தரவாதப்படுத் தப் படுவதுடன் கருத்து, எழுத்து சுதந்தி ரம் நிலைநாட்டப்பட வேண்டும்.
* நாடெங்கும் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக நடைமுறை யில் அமுல்படுத்தப்பட வேண்டும்.
* வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட பேரினவாத குடியேற்றங்கள் நிறுவப் பட எடுக்கும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும்.
* வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்பு கெடு பிடிகளுக்கு உட்படுத்தப்படாமல் இன ரீதியான பாரபட்சங்களுக்குட்படா மல் அவர்களின் சுதந்திரமும் பாதுகாப் பும் உறுதிசெய்யப்பட வேண்டும்.(1)

## குடிசன மதிப்பீட்டுப் பணிகளுக்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

இலங்கையில் குடிசன மதிப்பீட்டை 2011 ஆம் ஆண்டு மேற்கொள்வதற் கான முன் முயற்சி செயற்பாடுகளை புள்ளி விவரத் திணைக்களம் மேற் கொள்ளத் தொடங்கியுள்ளது.


இது தொடர்பான அறிவித்தல்கள் மாவட்ட செயலக புள்ளி விவரத்திணைக் களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதரண சூழ் நிலைகள் காரணமாக இடப்பெயர்வுகள், இரண்டு தடவை கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் குடிசன மதி பீட்டுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

தற்போது இடம்பெறும் முன்னேற் பாட்டு நடவடிக்கையின் போதும் கூட குடாநாட்டில் குடியேற அனுமதிக்கப் படாத பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக குடிசன மதிப் பீட்டை மேற்கொள்வதற்காக கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக கிராமங் கள் இனம் காணப்பட்டு வருகின்றன.

இதற்கான விவரங்கள் சேகரிக்கும் பணிகள் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மேற்கொள் ளப் பட்டு வருகின்றன. (203-86)



யாழ்ப்பாணம் வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய பெருந்திரு விழா நேற்று (13ஆம்திகதி) சனிக்கிழமை கொடியேற்றத் துடன்ஆரம்பமானது. கொடியேற்றம் நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## மீசாலை வீரசிங்கம் ம.வி. தரம் 5 மாணவன் பாசுபதன் ஜப்பானுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 14



2008 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட் சையில் தமிழ் மொழி மூலம்தேசிய மட்டத் தில் முதல் இடம்பெற்ற யா/மீசாலை வீரசிங் கம் மகாவித்தியாலய மாணவன் செல்வன் தர்மலிங்கம் பாசுபதன் அரசின் புலமைப்பரிசில் பெற்று 21ஆவது ஆசியான் பசுபிக் சிறுவர் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அடுத்த மாதம் 8ஆம் திகதி ஜப்பா னுக்குப் பயணமாகிறார். (1)

## தென்மராட்சிப் பிரதேச மக்களில் பலரும் கிராமசேவையாளர்களைத் தேடி அலைகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜூன் 14

தென்மராட்சி பிரதேச கிராம அலு வலர்களில் பலரும் தமது அலுவலகங்க ளுக்கு கடமைக்கு வராததால் பொது மக்கள் தமது உடனடித் தேவைகளுக் காக தினமும் கிராம அலுவலர்களைத் தேடி அலைகின்றனர்.

பிரதி புதன்கிழமைகளில் மட்டும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரும் வேளையிலேயே தமது கருமங்க ளைச் செய்ய முடிவதாகவும், நீதிமன்ற, வங்கி நடவடிக்கைகள் தொடர்பாக கிராம அலுவலர்களின் சிபார்சு தேவைப்படுவதாலும், சில கிராம அலு வலர்கள் வேறு பிரதேசங்களில் வசிப் பதாலும் தமது உடனடி கருமங்களை மேற்கொள்ள முடியவில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக பிரதேச செய லகத்துடன் தொடர்பு கொண்ட போது-

பிரதேச கிராம அலுவலர்கள் அனைவரும் நலன்புரி நிலையங்க ளில் சுழற்சி முறையில் கடமைகளுக் காக செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களுக்குள் பொது மக்கள்செல்ல அனுமதி கிடைக்காத நிலை யில் தமது உடனடி தேவைகளை பூர்த்தி செய்யமுடியாது பொது மக்கள் சிரமப் படுவாகவும் தெரிவிக்கப்பட்டது. (1)

## மாணவர்களின் போசாக்கை சீராக்க 'விற்றமின்' குளிசைகள் வழங்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை,ஜூன் 14

சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான நட வடிக்கைகளைத் தீவக கல்வி வலயம் முன்னெடுத்து வருகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே இரும்புச் சத்து குறைபாடு 14 வீதத்தி னால் அதிகரித்துள்ளமையால் கல்வி யின் அடைவு மட்டங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்படுத்துவ தற்காக சுகாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சுகாதார பாதுகாப்பு மற்றும் போசாக்கு அமைச்சினால் இந்த ஆண்டு சகல பாடசாலைகளிலும் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவ, மாணவிகளுக்கு வாரத்திற்கு ஒரு தடவை தொடராக மெபன்டசோல், இரும் புச் சத்து மற்றும் விற்றமின் 'சி' வில்லைகள் வழங்குவதற்கு சுகாதார அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை அமுல்படுத்துவ தற்கு பாடசாலை அதிபர்கள் அருகி லுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் களின் உதவியை பெற்றுக்கொள் ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (1-127)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 01 | 15.06.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.ப. 11.26வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | பி.இ.04.43 வரை |
| சுபநேரம்: | 11.53 - 01.23 |
| ராகுகாலம்: | 07.23 - 08.53 |

## யாழ்.விளையாட்டுப் போட்டியில் 800மீ.ஓட்டப் போட்டியில் சாதனை

யாழ்ப்பாணம், ஜூன்14



யாழ்.மாவட்ட மட்டத் தில் பிரதேச செயலங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகியவற்றுக்கு இடையில் நேற்று யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் ஆரம்பமான விளையாட்டுப் போட்டிக ளில் சாதனை ஒன்று நிலை நாட்டப் பட்டுள்ளது.

ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட் டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நேசரூபன் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

இந்த விளையாட்டுப் போட்டிகள், இரண்டாவது நாளாக இன்று காலை 8.30 மணிமுதல் இடபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு இறுதி நிகழ்வு களும் பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன.

யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடை பெறும் பரிசளிப்பு விழாவில் அரச அதிபர் கே.கணேஷ் பரிசில்களை வழங்குவார். (1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சவூதி வாகன விபத்தில் 19 பேர் பலி; 5 பேர் இலங்கையர்

றியாத், ஜூன் 14

சவூதிஅரேபியாவில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஐந்து இலங்கையர் உட்பட 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் கொல்லப்பட்ட இலங்கையர் தொடர்பான விவரங்களை பெறுவதற்கு இங்குள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (1)

## வன்னி மாவட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிக்கு ரி.பி. சமரக்கோனும், மாங்குளத்துக்கு டி.எல்.தலபாடவும் வன்னி மேற்குக்கு ஆர். டபிள்யூ.விஜய குணவர்த்தனாவும் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்துக்கு எல்.எம். தயானந்த பண்டார நியமிக்கப்பட் டுள் ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக எல்.என்.பண்டாராவும் யாழ். பொலிஸ் அத்தியட்சகராக ரி.வை.ராஜாவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (1)

## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகவர்களை நியமிக்கும் காலக்கெடு இன்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைகின்றது.

அதற்கு முன்பாக ஐ.தே.கட்சி தனது கட்சியின் முகவராக நாடாளுமன்ற உறு ப்பினர் ஜயலத் ஜயவர்த்தனாவையும் ஜனநாயக தமிழ்க்கூட்டணி வீ.ஆனந்தசங்கரியையும், புளொட் எஸ். சிவகுமாரையும் நியமித்துள்ளன.

ஏனைய கட்சிகள் தமது முகவர்களை நியமிக்காவிட்டால், அக்கட்சிகளின் செயலாளர்கள் நேரடியாகத் தமது கட்சியின் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வர்.

மாநகர சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட இருக்கின்றனர் என்றும் அது தொடர்பான பணிகளை முன்னெடுக்க கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அடுத்தவாரம் யாழப்பாணத்துக்கு வரும் என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா 'உதய'னுக்குத் தெரிவித்தார்.

அடுத்தவாரத்தில் சகல கட்சிகளின் பிரமுகர்களும் யாழ்ப்பாணத்துக்கு வந்து வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணியில் ஈடுபட உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## அதிகரிக்கப்பட்டுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் காரணமாக முப்படைகளுக்கும் மேலும் 50 ஆயிரம் பேரை சேர்க்க முடிவு செய்யப்பட் டுள்ளது.

முப்படைகளுக்கும் ஆள் சேர்க்கும் பணி ஏற்கனவே ஆரம்பமாகி இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது - என்றும் அமைச்சர் சொன்னார். (அ-1)

## ஏ-9 வாகன போக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணி இடம்பெறவுள்ளது.

தனியார் வர்த்தகர்கள், அரச மற்றும் கூட்டுஸ்தாபனங்களின் வாகனங்கள் பொருள்களை கொழும்பில் இருந்து ஏற்றி வரவேண்டும். அவை அநுராதபுரத்தில் உள்ள சி.டபிள்யூ.ஈ. நிறுவன களஞ்சியத்தில் வைத்துப் படையினரால் சோதனை செய் யப்படும். பின்னர் 'சீல்' வைக்கப்படும்.

அந்த வாகனங்கள் வவுனியா, ஓமந்தையில் இருந்து வெவ்வேறு அணிகளில் படையினரின் வழித்துணையுடன் யாழ்ப்பாணம் வந்து சேரும். மீண்டும் படையினரின் வழித்துணையுடன் வாகன அணிகள் வவுனியாவுக்கு போய்ச் சேரும்

தனியார் வர்த்தகர்களின் 80 வாகனங்கள் சோதனை முடிந்த நிலையில் அநுராதபுரத்தில் தற்பொழுது தரித்து நிற்பது தெரிந்ததே. அந்த லொறிகளும்எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின்னர் தொகுதி தொகுதியாக ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து சேரும் என்று வர்த்தக வட்டாரங்கள் 'உதய'னுக்குத் தெரிவித்தன. (அ-1)

## குருதிக்கொடை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

குருதிக்கொடை வழங்க விரும்புபவர் களை நேரில் சமுகமளிக்குமாறு இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

(9 ஆம் பக்கம் பார்க்க) (அ-1)

## கண்ணிவெடிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடி அச்சுறுத்தல் முடிவுக்கு வரும் வரை, அவசரப்பட்டு ஏ-9 பாதையை அரசு திறக்கமாட்டாது. வவுனியாவில் இருந்து முகமாலை வரையான பாதையில் இருபக்கங்களிலும் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் யாவும் அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசம் என உறுதி செய்யப்பட்ட பின்னரே பாதை பொது மக்கள் போக்குவரத்துக்குத் திறக்கப்படும்.

கண்ணிவெடிகள் முற்றுமுழுதாக அகற்றப் படாமல் அவசரப்பட்டு பாதை திறக்கப்பட்டு ஒருவர் கண்ணிவெடியில் சிக்கினால் நாங்களே பொறுப்புக் கூற வேண்டி வரும் என்று ஜனாதிபதி எமக்கு கூறியுள்ளார்.

ஆகவே கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டு ஏ 9 வீதி முழுவதும் ஆபத்து இல்லாத பிரதேசம் என்று இராணுவத்தினரினால் பிரகடனம் செய்யப்பட்ட பின்னரே பாதை திறக்கப்படும். ஆனால் அதற்கு எத்தனை காலம் செல்லும் என்று இப்போது கூறமுடியாது - என்றார் அமைச்சர். (அ-1)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை முடித்துக்கொண்டு இன்று திரும்புவதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டமைப்புத் தூதுக்குழுவினர் தமிழக முதல்வர் மு.கருணாநிதி, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, வெளிவிவகார அமைச்சுச் செயலர் சிவ்சங்கர் மேனன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், எதிர்க் கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி ஆகி யோரைச் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர். (1)

## தமிழருக்கு சுயா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டங்கள், பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. தமிழர்களுக்கு உகந்த தீர்வு யோசனைக்கு இந்திய மத்திய அரசுக்கு தாம் ஆதரவு அளிப்பதற்கு எல்.கே. அத்வானி தூதுக்குழுவினரிடம் வாக்குறுதி அளித்துள்ளார் என்று தூதுக் குழு உறுப்பி னர்களில் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அத்வானியைச் சந்தித்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அத்வானியுடனான சந்திப்புக்குறித்து தூதுக் குழு உறுப்பி னர் ஒருவர் தகவல் வெளியிடுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழர்களின் அரசியல் பிரச்சினைக் குத் தீர்வாக 13 ஆவது அரசமைப்புச் சட்டத்திற்கு அமைவான திட்டம் குறித்தே இலங்கை இன்னமும் பிரஸ்தாபித்துக் கொண்டு இருக்கின்றது. இந்த 13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் இறந்து போன ஒன்று. அந்தத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். இன்னமும் இரண்டு மாதங்களில் அந்த தீர்வுத்திட்டத்தை முன்வைப்போம். அதற்கு இந்தியாவின் ஆதரவும் பங்களிப்பும் அவசியமானது- என்றார். (அ)


**Personal & Group classes (கணனி)**

MS offices, DTP, Internet & Email ஆகிய கற்கை நெறிகள் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். தொ.பே: 0779672038

✱ பயிற்சியின் பின் உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

நல்லூர், யாழ்ப்பாணம்.

| ATX CASING (With Power Supply) | |
|---|---|
| All Brands | 2750/- |

| PROCESSOR | |
|---|---|
| Intel 1.8 Celeron | 5200/- |
| Intel 2.0 Duo Core | 8500/- |
| Intel 2.5 Duo Core | 9200/- |
| Intel 2.53 Core 2 Duo | 13250/- |

**FM Modulator 11000/-** (for Vechicle use)

**COMPUTER TABLE 3000/- to 3750/-**

| MOTHER BOARD | |
|---|---|
| Processor with Mother Board | 6900/- |
| MSI 945 DDR II | 5250/- |
| Biostar G 31 | 5750/- |
| Astrock G 31 | 5750/- |
| Foxconn G 31 | 6200/- |
| Interl DG 31 | 7750/- |

| UPS | |
|---|---|
| Techcom / Datamax 650 W | 4000/- |
| Intex 600 W / Prolink 650 W | 4400/- |
| DCP 650 W | 4600/- |
| Power Tree 650 W | 4900/- |
| Power Tree 1200 W (1.2 KV) | 9400/- |
| UPS Battery (12 V) | 1500/- |

| MONITOR - LCD | |
|---|---|
| 17" [illegible] / HP Monitor | 9000/- |
| 15" LCD Monitor | 11250/- |
| 17" LCD Samsung / LG | 13750/- |
| 19" LCD Samsung / LG | 17900/- |
| 22" LCD Monitor | 26000/- |

| DVD WRITTER (SATA) | |
|---|---|
| LG CD Writter | 2000/- |
| Samsung DVD Writter | 3400/- |
| LG DVD Writter | 3250/- |
| Asus DVD Writter Light Scribe | 3950/- |
| Sony DVD Writter | 3950/- |

| PLAYERS | |
|---|---|
| MP3 Player 2 GB | 2500/- |
| MP3 Player Display Model with FM | 3750/- |
| MP5 / MP4 Player Orange 2 GB | 6500/- |

| RAM | |
|---|---|
| 1 GB Kingston DDR II | 1800/- |
| 2 GB Kingston FFR II | 3500/- |
| SD Ram 256 MB | 1000/- |

| Power Supply | |
|---|---|
| 450 W (24 Pins) | 1500/- |
| 500 W (24 Pins) | 1650/- |
| Only Casing | 1500/- |

| HARD DISK | |
|---|---|
| 120 GB SATA | 4900/- |
| 160 GB SATA | 5100/- |
| 250 GB SATA | 5700/- |
| 500 GB SATA | 8250/- |

| ACCESSORIES | |
|---|---|
| Bluetooth | 600/- |
| Recovery Card | 1700/- |
| Laser Mouse | 350/- |
| Keyboard | 400/- |
| Card Reader | 500/- |
| Head Phone | 350/- |
| Modem | 650/- |
| USB Hub | 350/- |
| 3D Sound Card | 850/- |
| Scanner | 5900/- |

வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களுக்கான பாதுகாப்பு கருவிகள் பொருத்தித் தரப்படும்

| TV CARD | |
|---|---|
| Internal TV Card | 2600/- |
| Combo External Box | 2750/- |
| LCD Combo Box | 4600/- |

| SUBWOOFERS | |
|---|---|
| Creative 2.1 SBS380 | 3300/- |
| Micro Lab 2.1 M280 | 3700/- |
| Creative 5.1 A500 | 7500/- |

| VGA CARD | |
|---|---|
| MSI PCI Express 512 MB | 5250/- |
| PCI Express ATI 512 MB | 6900/- |
| AGP 128 MB | 4250/- |
| AGP 32 MB | 2250/- |

| PRINTER | |
|---|---|
| HP 1560 DeskJet | 4600/- |
| Laser Printer | 13500/- |
| Canon Colour Printer | 5500/- |

| VOICE RECORDER | |
|---|---|
| Transcend 4 GB | 7500/- |
| Transcend 8 GB | 10500/- |

* Stock Available

* Warranty Value 1-3 years

MUSIC WORLD & COMPUTERS



Management & Informatics Studies

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பம்

**BIT - Bachelor of IT**

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. எமது நிறுவனத்தின் மூலமாக விண்ணப்பிக்கவிரும்புவோர் தொடர்பு கொள்க. BIT கற்பித்தலில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் அனுபவம் கொண்ட ஆசிரியரினால் 1st year/ 2nd year/ 3rd year ஆகியவை கற்பிக்கப்படுகின்றன.

BIT #74,Sabapathy Lane,Jaffna. T.P.N0: 060 221 6083 BIT



**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 2224333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup

'அடிப்படை உடற் பரிசோதனைகள்'

Branches

151, Kannathiddy Road. T.P.: 021 222 7251

71, Sivapiragasam Road, Vannarpannai, Jaffna.

90/7, Potpathy Road, Kokuvil.



பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா ! நீங்களும் பட்டதாரி ஆகலாம் .....

அனைத்து துறைகளிலும்

**இந்தியாவில் பட்டப்படிப்பு**

July 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்

HINDUSTAN COLLEGE OF ARTS AND SCIENCE

Affiliated To MADRAS UNIVERSITY

A/L அனைத்து துறை மாணவர் களுக்கு...

UNDER GRADUATE PROGRAMME (Full time - 3yrs)

B.Sc. - Biochemistry,
B.Sc. - Electronics & Communication Science,
B.Sc. - Microbiology,
B.Sc. - Biotechnology,
B.Sc. - Computer Science,
B.Sc. - Information Systems Management,
B.Sc. - Electronic Media,
B.Sc. - Visual Communication)
B.Com. (General)
B.C.A
B.B.A

POST GRADUATE PROGRAMME

M.Sc. (Information Technology, Computer Science, Applied Microbiology, Biotechnology, Bioinformatics, Electronic Media)

M.A Public Relations

A/L Arts படித்த மாணவர்களும் வர்த்தக (BBA, B com) கணனி (BCA) துறைகளில் பட்டப்படிப்பைத் தொடரும் வாய்ப்பு

10 நாட்களில் அனுமதி பெற்றுத்தரப்படும்.

SONA COLLEGE OF TECHNOLOGY

Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India

APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

A/L கணித துறை மாணவர் களுக்கு பொறியியல் கற்கைகள் ...

COURSES OFFERED

B.E / B. Tech. Degree [Full time – 4 yrs]
B.E. - Civil Engineering
B.E. - Mechanical Engineering
B.E. - Computer science & Engineering
B.E. - Electrical & Electronics Engineering
B.E. - Electronics & Communication Engineering
B.Tech - Information Technology
B.Tech - Fashion Technology
M.E. Degree [Full time – 2yrs]
MBA - Master of Business Administration
MCA - Master of Computer Applications

ELIGIBILITY 3 PASS IN A/L

ADMISIONS ARE GIVEN IN COLOMBO & JAFFNA

August 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்

V4 Educational Consultancy(Pvt)Ltd

Head Office- #7-1/1, W.A.Silva mawathe, Wellawatte, Colombo-06.

Branch- #274, Pointpedro Road, Aanaippanthi Junction, Jaffna.

Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com

T.P- 0773867257, 0775936343, 0212228374






**மலிவு விற்பனை**

மலேசியன் ஒறிஜினல் பழைய புதிய DVD, VCD ஓடியோ பக்திப் பாடல்கள் என்பன மலிவு விற்பனையில்.

தொடர்பு: 198/09, பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பே: 0774237524

**தேவை**

கணனி அறிவுள்ள Accounts பார்க்கக்கூடிய அனுபவமுள்ள பெண் பிள்ளை தேவை.

**Pc System Manipay.**

Management & Informatice studies

MIS

தேவை

MS-Office மற்றும் DTP தேர்ந்தவர்கள் தேவை. தகுந்த சம்பளம் தரப்படும். சுயவிவரக் கோவையினை 19.06.2009 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

74, Sabapathy Lane, Jaffna.



உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளர் நலன்கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL Money Master

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.